# அமுது

AMUDHU

தமிழுக்கும் அமுதென்று பேர்


ஊற்று 2
துளி 2
NOVEMBER 99




இலங்கையின் மாதாந்த குடும்பச் சஞ்சிகை - நவம்பர் 99 -30/-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஷெல் கற்றுத்தந்த சுற்றாடல் பாடம் விலைமதிப்பற்றது.



ஷெல் எங்கள் பாடசாலையில் நடத்திய மீள்பாவனை பற்றிய விளக்கத் திட்டத்தின் பயனாக நானும் எனது நண்பர்களும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கக் கற்றுக்கொண்டோம்.



குப்பைகூழங்கள் மற்றும் கழித்தொதுக்கும் பொருள்களைக் குறைத்தல், மீளப் பயன்படுத்தல், புதுப்பித்துப் பயன்படுத்தல் என்பன பற்றி ஷெல் எமக்கு விரிவாகச் சொல்லித் தந்தது. பாடசாலையிலும் வீட்டிலும் நாம் வீசியெறியும் பொருள்களை எவ்வாறு மீளப் பயன்படுத்த முடியும் என்பதை நரம் அறிந்துகொண்டோம். மீள்பாவனை முறைகளைக் கையாண்டால் பொலித்தீன் பைகளினால் வடிகால்கள் அடைபடுவதைத் தவிர்க்க முடியும். நுளம்புத் தொல்லையைக் குறைக்க முடியும். இதனால் கொழும்பு மாநகரத்தில் சுகாதாரமான வாழ்க்கைச் சூழல் உருவாகும். எமது வாழ்க்கையை மேம்படுத்துவதில் ஷெல் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது முற்றிலும் உண்மை.

*ஷமீலா செனவீரத்ன*
**ஷெல் பாடசாலைச் சுற்றாடல் திட்டத்தில் பங்குபற்றிய மாணவி**

GRANT McCANN

*வாழ்வைச் சிறப்பிக்கத் தன்னை அர்ப்பணிக்கும்* **Shell GAS**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுது

# அமுதக் கடலில்...


அமுத வாசல் . . . . . . . . . . . . . . . 2

கண்ணீர் வடிக்கும் முதலைகள் . . . . 5

**நெற்றிக்கண்** . . . . . . . . . . . . . . . 6

**அரசியல் அரங்கம்:**

இந்திய அரசியலை நம்பி . . . . . . . . 8

**பேட்டி: லக்ஷ்மன் ஜெயக்கொடி**

தொல்லை தவிர்ப்புக் குழுவும்
தமிழர்களும் . . . . . . . . . . . . . . . . 12

பாகிஸ்தான் இராணுவப் புரட்சி... . . . . 15

**கவிதை:** அசரீரி, மரணப் பிரகடனம் . . 16

வெண் பிரம்பு.. . . . . . . . . . . . . . . . 17

**சிறுகதை:**

புத்திஜீவிகள் . . . . . . . . . . . . . . . . 18

இயற்கை தந்த ஜில் . . . . . . . . . . . . 20

ஒரு கவிதையும் சில ஈசல்களும் . . . . 22

**கவிதை:** நீங்கள் தூவிய மலர்கள் . . 25

**சிறுகதை:**

மௌன யுத்தம் . . . . . . . . . . . . . . . 26

மனசு . . . . . . . . . . . . . . . . . . . . . 28

**புரட்சி:**

ஜேர்மன் வெறி உருவாக்கிய . . . . . 30

ஜிம்னாஸிய விந்தை... . . . . . . . . . . 33

லொட்ஜ் வாழ்க்கை... . . . . . . . . . . . 35

**கிரிக்கட்:**

'சனத்'தின் வருகைக்குப் பின் . . . . . . 38

**நோயற்ற:** ஊசி இல்லாமலே. . . . . . . 41

**குங்ஃபூ:**

வின் சுன் குங் ஃபூ . . . . . . . . . . . . . 42

**சினிமா:**

சினிமாவில் நகைச்சுவை . . . . . . . . 44

கிரக சஞ்சாரம் . . . . . . . . . . . . . . . 47

நூல் அறிமுகம் . . . . . . . . . . . . . . . 48


**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை அமுது வரவேற்கிறது.**


**ஆசிரியர்,**
**'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**தொலைபேசி: 454283, 421181** Ext 347
**ஃபக்ஸ்: 320677**
E-Mail: webmgr@sri.lanka.net






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்திய ஒரு வடிவம் நோக்கி தன்னை செதுக்கும் "அமுது"



அமுதுக் குழந்தை ஓராண்டைப் பூர்த்தி செய்வதையிட்டு மனம் புளகாங்கிதம் கொள்ளுகிறது. உள்ளதை உள்ளபடி நீதி தளும்பாமல் நேர்மை என்னும் மகுடம் தாங்கி வாசகர் உள்ளங்களை காந்தம் போல் கவர்கின்றாய். நல் வாழ்த்துக்கள்.

**நாக. மகேந்திரலிங்கம்**
**யாழ் - சங்கானை.**

அறிவைத் தேடித் திரிந்தேன்
முத்தாய் நீ மிளிர்ந்தாய்
உதயம் சுமந்து வந்து தர்மத்தை காண்பித்தாய்
ஹம்.. ம்... என்று நீ மொழிந்தாலே - இளைய
உள்ளங்களுக்கு இதமே.... இதமே... இதமே....!

இன்னும் பல வருடங்களைக் கடக்க வேண்டும். 21ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான புதுமையான வித்தியாசமான விடயங்களையும், தொழில் நுட்ப - பொது அறிவு விடயங்களையும் சேர்த்துக் கொண்டால் சிறப்பாய் அமைவாய்.

**எச். எம். ஜனுல் ஹக்**
**நேகம.**

அமுது அட்டைப் படத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது. மாதம் ஒரு முறை கண்களைக் கவரக் கூடிய சிறந்த அட்டைப்படங்கள். சிறுகதைகளும், கவிதைகளும் சுமாராக இருந்தன.

**வேலாயுதன்**
**கௌவல்யா**
**குண்டசாலை.**

பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்து வாழும் மக்களில் நானும் ஒருவன். அமுது சஞ்சிகையை இதற்கு முன் இரண்டு இதழ்கள் வாங்கிப் படித்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். தமிழர் படும் வேதனையை வெளிப்படுத்தும் தங்களுக்கு எனது நன்றியை தெரிவிக்கிறேன். அனைத்து அடக்கு முறைகளையும் அன்னை மண்ணிலே உடைத்தெறிவோம்.
அமுது செப்டெம்பர் இதழ் அனைத்து அம்சங்களும் *Very Superb.* யாழ். பல்கலைக்கழக கல்விமான்கள் இந்திய இராணுவ அதிகாரிகளின் தயவை நாடி நின்ற வேளையில் அவர்கள் போல அல்லாமல், மாணவர்களுக்காகவும், மக்களுக்காகவும் சேவையாற்றிய ராஜினியைப் பற்றி அறியத் தந்தமைக்கு நன்றிகள். புரூஸ்லீ பற்றி எழுதியது எமக்குப் பல தகவல்களைத் தந்தது.

**அனுரதீபக், தியசிரிகம.**

அமுதின் ஒரு வருட சாதனை என்ன? தமிழில் எழுதுகிறவர்களெல்லாம் இதுவரை அரசைக் கண்டிப்பார்கள், இதர தமிழ்க் கட்சிகளை விமர்சிப்பார்கள், தமிழ் மக்களின் துன்பங்களுக்கு வேறு யாருமே காரணமில்லை என்பது போல நீலிக் கண்ணீர் வடிப்பார்கள்.... புலிகள் விடும் தவறையும் அரசுக்கு சமாந்தரமாய் சுட்டிக்காட்டி எழுதுவதை ஆரம்பித்திருப்பது அமுதுதான். பாராட்டுக்கள்.

**எஸ். காந்தரூபன், கொழும்பு 06.**

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நான்கும் கலந்துனக்கு நான் தருகிறேன். அமுதே, நீ எங்களுக்கு எல்லாவிதமான சுவைகளையும் கொண்ட அறிவுப் பெட்டகத்தை மாதந்தோறும் மறந்திடாமல் வழங்கிட வேண்டும். ஒரு வயது முடிந்து ஒய்யாரமாக இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் அமுதின் அனைத்து அம்சங்களும் அருமை, அட்டகாசம்தான். வளர்க மென்மேலும். வண்ணப் புகைப்படங்கள் கண்களில் ஒற்றிக் கொள்ளும் வகையில் அற்புதமானவை.

**பாலா சங்குப்பிள்ளை**
**அட்டன்.**

அமுது கிடைத்தது. உண்மையில் அமுது என்ற பெயர் மிகப் பொருத்தம். கதைகளும், ஆக்கங்களும் மிகத் தரமானவை. தொடர்ந்து அமுது என் கரம் எட்டுவதற்கான வழிமுறைகளை எனக்கு அறியத்தரவும். எனது பிரதேசத்திற்கு கடித மூலம் தான் இதனை நீங்கள் அனுப்ப முடியும். இவ்வாறான புத்தகங்கள் இங்கு கிடைப்பதில்லை. வருட சந்தா எவ்வளவு, எப்படித் தொடர்பு கொள்வது என்பவற்றை விபரமாக அறியத் தரவும்.

**கலைமகள் வித்தியாலயம்,**
**முள்ளியவளை.**

கியூபப் புரட்சி பற்றிய தொடர் நன்றாக இருக்கிறது. படங்கள் எங்கேயிருந்து எடுக்கிறீர்கள்? அட்டகாசம்! இந்த நூற்றாண்டுப் புரட்சிகளில் எங்களுடைய நாட்டுப் போராட்டம் பற்றி எப்போது எழுதப் போகிறீர்கள்? துணிவாரா புரட்சிதாஸ்?

**பா. கிருஷ்ணன்**
**பளை.**

அமுதக் கடலில், அமுத வாசல், அரசியல் அரங்கம், பேட்டி, கவிதை, சிறுகதை, விளையாட்டு, புரட்சி, சினிமா போன்ற தலைப்புக்களில் அமுதில் வெளிவருவன பாராட்டுதற்குரியவையாக அமைந்திருக்கின்றன.. மீண்டும் மீண்டும் புதுப்புதுப் பொலிவுடன் பொது அறிவும், புதிய ஆக்கங்களும் இணைந்து அமுது வெளிவர வேண்டும் என்பது எனது அவா.

**சு. சுந்தரேசன், கொக்குவில்.**

புரட்டாதி மாதம் வெளியாகிய அமுதில் பல முக்கியமான தகவல்களை சேர்த்திருந்தீர்கள். மௌனமாக்கப்பட்ட புயல் ராஜினி, சர்ச்சைக்குரிய *UTHR (J)* பேட்டி மூலம் பல உண்மைத் தகவல்களை அறிந்து கொண்டேன். இப்படியான பல கட்டுரைகளைத் தொடர்ந்தும் தர வேண்டும்.

எல்லாப் பத்திரிகைகள், சஞ்சிகைகளும் ஆரம்பத்தில் தரமாகவும் நடுநிலையாகவும் எழுதுகின்றன. ஆனால் காலம் கடந்து செல்லும்போது பக்கச் சார்பாக எழுத முற்படுகின்றன. இதே போன்று அமுதுவும் காலப்போக்கில் மாற்றம் அடையாமல் தொடர்ந்தும் நடுநிலைமையாக பல விடயங்களை ஆணித்தரமாக எழுத வேண்டும். துளி 11, துளி 12 ஆகியவற்றின் அட்டைப் படங்கள் மிகவும் நன்றாக இருந்தன.

**லோ. நிமலன்**
**யாழ்ப்பாணம்.**

இதழின் நடுப்பக்க (வீண்) ஒளிப்படம் ஆபாச சஞ்சாரத்துக்கு மெல்ல இழுக்கிறது. 45ஆம் 46ஆம் பக்க முண்டங்களும் அதைக் கோடிகாட்டி நிற்கின்றன. எதிர்கால இதழ்களில் மென்மேலும் விரசமாக, ஆபாசமாக "கவர்ச்சியாக" சரக்குகள் வரப்போகின்றன என்பதற்கு இவை யாவும் அறிகுறிகள் போன்று தென்படுகின்றன.
"பிரான்ஸ் - சுகன்" கூறியுள்ளது போன்று எமது பத்திரிகைக் கடைகளிலும் அமுதுக்கு நல்ல மவுசு இருக்கின்றது. பிரதியை முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டிய நிலையைக் காண முடிகின்றது. ஆபாசம் தலைதூக்கினால் "ஆபாச வாசகர்" ஒரு சிலர் அதிகரிப்பார்கள். கலை, இலக்கிய, அறிவியல், பொழுதுபோக்கு வாசகர்கள் படிப்படியாக குறைந்து விடுவார்கள். அந்த நிலை அமுதுக்கு வேண்டாம். நீண்ட காலத்தின் பின்னர் நம்நாட்டில் தமிழில் வெளிவருகின்ற தரமான சஞ்சிகை இது. தொடர்ந்தும் தனது தரத்தைப் பேணி வெளிவர வேண்டும்.
அமுதின் சமுதாயப் பணி - சமூகப் பணி தொடர வேண்டும் என வேண்டி நிற்கிறேன்.

**யாக்கூத்**
**மட்டக்குளி.**

அமுது துளி 12 பார்த்தேன். திருந்திய ஒரு வடிவம் நோக்கி "அமுது" தன்னைச் செதுக்கிக் கொண்டே செல்கிறது. உள்ளே விடயதானங்களில் வித்தியாசம் தெரிகிறது.
சிந்திக்க - "பிக்பொக்கட்", "காலத்தைக் கைப்பற்ற"
ரசிக்க - டாவின்சியின் ஓவியங்கள்
அறிய - *UTHR (J)*, கோழிச் சண்டை
வருந்த - ராஜினி
- வீண் வர்ணப் பிரயோகங்களை குறையுங்கள் (உ-ம்: முகங்கள், நக்கீரன், வெடிதலைகீதம்)
- படங்களுக்கு கவிதைகளின் கனதி போதாது

**எஸ். நளீம்**
**மீராவோடை - 05, வாழைச்சேனை.**

முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது தமிழர்கள் மௌனம் சாதித்தார்கள் என்றால் அதில் நியாயமும் இருக்கும். ஏனெனில் தமிழைப் பேசினாலும் முஸ்லிம்கள் தமிழர்களிடமிருந்து வேறுபட்டே இருக்க விரும்பினார்கள். தற்போது வேண்டுமானால் (ஒரு சில நிகழ்வுகளை வைத்து) பலரும் பலதை சொல்லலாம். அமுது கட்டுரை கூட முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதைக் கண்டிக்க வேண்டும் என்று எழுதப்பட்டதே தவிர கட்டுரையில் இரு தரப்பினதும் செயற்பாடுகளின் சரி, பிழை ஆராயப்படவில்லை.

**"மலையகத்தம்பி" மு. கருணாகரன்**
**எட்டியாந்தோட்டை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

# நல்லதோர் வீணை செய்தே....



வளர்ச்சி!
இது எம் எல்லோருக்கும் தெரிந்த ஒரு சொல். எல்லாமே வளர்வன. ஏன், நாமே வளர்கிறோம். எம்மைச் சூழவுள்ள யாவும் வளர்கின்றன. எம் அறிவு, சிந்தனை, அனுபவம் வளர்கிறது. அடுத்தவர் வளர்ச்சி எமக்குத் தெரிகிறது. மொத்த சமூகமுமே வளர்கிறது. வாழ்க்கை வசதிகள், தொழில்நுட்பம், நாகரீகம், விஞ்ஞானம்... யாவுமே வளர்கின்றன. வளர்ச்சியென்பது எம்மோடு கலந்திருக்கும் ஒரு நியதி.
எம் எல்லாவகை எத்தனங்களும் அதற்கானதே!
ஆனால் வளர்ச்சிப் போக்கென்பதை நாம் ஒருதிசைப்பட்டதாகவே பொதுவில் கருதுகிறோம். அத்தோடு அதை ஒன்றின்பாலானதாக மட்டுமே எடுத்துக் கொள்கிறோம். உண்மையில் அது பன்முகப்பட்டது. பலவற்றைச் சார்ந்தது. எமது வளர்ச்சி எப்போதும் மற்றையதைச் சார்ந்தே நிற்கிறது. எனவே மற்றையவற்றோடு ஒப்பிட்டே எம் வளர்ச்சியை நாம் காணமுடியும். ஒப்பீடே வளர்ச்சியின் அளவுகோல். வளர்ச்சியின் நன்மை தீமை இங்குதான் கணிப்பிடப் படுகிறது. ஒன்றின் வளர்ச்சி மற்றையதில் தங்கி நிற்கும்போது அது தன்னையறியாமலே மற்றையதன் வளர்ச்சியைப் போஷிக்கிறது. தனது வளர்ச்சியோடு தன்னைச் சூழவுள்ளவற்றின் வளர்ச்சியைப் போஷிக்கும் பொழுதுதான் தனது வளர்ச்சி அர்த்தமுள்ளதாகின்றது.
தன்னைச் சூழவுள்ள எல்லாவற்றையும் சிதைத்து அவற்றின் வளர்ச்சிக்கான எல்லா இடைவெளிகளையும் அடைத்துவிட்டு ஒரு வெட்டவெளியில் தனித்து நின்று தனது வளர்ச்சியே உண்மையான வளர்ச்சியென வரைவிலக்கணப் படுத்தும்போது அதன் அர்த்தமே தலைகீழாகிவிடுகிறது. ஒரு பக்குவப்பட்ட வளர்ச்சியின் அர்த்தமுள்ள ஆழ அகலங்களை உணர மறுக்கும்பொழுது, எம் சிந்தனையானது தன்னலவயப்பட்ட எண்ணத்தினால் வழிநடத்தப்பட்டு, சிதைந்த- பரிணாமமிழந்த ஒரு விகாரத் தன்மையையே வளர்ச்சியென்று எம்மை நம்பவைக்கிறது. இதனால்தான் கல்வியில் வளர்ந்த பலரிடமும் மனசாட்சி வளர்வதில்லை. அதிசிறந்த நிபுணரிடமும் கருணை இருப்பதில்லை. ஆற்றல்மிக்க மனிதர்களிடமும் நேர்மை இருப்பதில்லை. உயர்வான சமூகங்களிலும் குரூரமும் வன்முறையும் நிராகரிக்கப் படுவதில்லை.
ஒரு கோட்டை உயர்ந்ததாகக் காட்ட வேண்டுமென்பதற்காக அதன் அருகிலிருக்கும் கோட்டைப் பாதி அழித்துவிட முனைவதுபோல் தன்னை உயர்ந்தவனாகக் காட்டுவதற்காக அருகிலிருப்பவனின் கால்களைத் தறித்து விடுவதையே நம் வளர்ச்சிச் சித்தாந்தமாகக் கொள்ளலாமா?

ஆ-ர்



பிரதமஆசிரியர்:
எஸ். மனோரஞ்சன்
இணையாசிரியர்:
து. பாஸ்கரன்
ஆசிரிய பீட ஆலோசகர்:
டி. பீ. எஸ். ஜெயராஜ்
கட்டுரையாசிரியர்:
சி. சிவகுமார்

ஏனைய ஆசிரிய பீடத்தினர்:
எம். எச். எம். ஷம்ஸ்
எம். எஸ். எம். ஹிஷாம்

பிரதம வடிவமைப்பாளர்:
சி. முரளிதரன்
ஓவியர், கார்டூனிஸ்ட்:
இ. ப்ரகீத்
பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்

விளம்பர முகாமையாளர்:
வருண மல்லவஆராச்சி
தயாரிப்பு முகாமையாளர்:
அபய அமரதாஸ
அச்சமைப்பு முகாமையாளர்:
ந. சற்குணநாதன்
விற்பனை முகாமையாளர்:
அனுர அபேரத்ன

அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ்
ஒஃப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

Chief Editor:
S. Manoranjan
Associate Editor:
T. Baskaran
Editorial Consultant:
D. B. S. Jeyaraj
Features Editor:
S. Sivakumar

Other Editorial Staff:
M.H.M. Shums
M.S.M. Hisam

Chief Designer:
C. Muralitharan
Computer Graphic Artist/Cartoonist:
P.R.B.Ekkneligoda
Computer Page make-up:
Gerald S. Nadesan
Computer Typeset:
S. M. Premkumar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

**தினமும்**
**வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00மணி முதல்
1.00 மணி வரை

# 14%

**சேமிப்புச் சான்றிதழ்களுக்கு**

# 11%

**சேமிப்பு கணக்குகளுக்கு**

**ATM &**
**டெலிபேங்கிங்**
வசதிகளும் உண்டு

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075 – 331101, 565998 அல்லது 565624

PRAMUKA BANK
பிரமுக
சேமிப்பு மற்றும் அபிவிருத்தி
வங்கி
லிமிட்டட்
*வளமிக்க எதிர்காலத்திற்கு வழிகாட்டி*

316, காலி வீதி, கொழும்பு – 3 பிரதாள நகர்க் கிளை தொலைபேசி : 565220 – 3
பெக்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411 – 16

NETWORK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்ணீர் சிந்தும் தண்ணீர் ராஜாக்கள்

அண்மையில் கொழும்பில் கொள்ளுப்பிட்டிக் கடற்கரையில் அப்பிரதேசத்து மக்களை முதலையொன்று ஒரு கலக்குக் கலக்கியது. அதை வன விலங்குகள் திணைக்களம் வலைவிரித்துத் தேடியலைந்தது. இறுதியில் ரத்மலானையில் மீனவர்களின் வலைக்குள் அகப்பட்டதாக ஒரு பரபரப்பான செய்தி கிடைத்தது. கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அம்முதலையை மிருகக்காட்சிச்சாலைக்குக் கொண்டு சென்றனர்.

இவ்வாறு.... ஊர்வனவற்றில் பெரியதும், பயங்கரமானதுமென வர்ணிக்கப்படுவவை முதலைகள். தண்ணீருக்குள் இறங்க முற்படும் எமக்கு "முதலை, முதலை" என்று பயங்காட்டினாலே தலைதெறிக்க ஓடுவோம். ஏனென்றால் முதலை முழு மனிதனையே விழுங்கிவிடுகிறது. அதன் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்வது அபூர்வம்.

ஆனால் நாம் நினைப்பது போல எல்லா முதலைகளும் மனித மாமிசம் விரும்புவதில்லை. ஓரிரு வகைகளே மனித மாமிச விரும்பிகள். இவை முள் முதலைகள் எனப்படுகின்றன. இதன் தோல் முள் முகடுகளால் ஆனது.

அருகிச் செல்லும் இனங்களில் முதலையும் ஒன்றென்று சூழலியலாளர்கள் கூறுகின்றனர். முதலையின் தோல் அதிக விலைக்கு விற்கப்படுவதாலும், அவற்றின் வாழ்விடங்களில் மனிதன் குடியிருப்பு அதிகரித்திருப்பதனாலும், நீர் வாழ் சிறிய உயிரினங்கள் அழிவதால் ஏற்படும் உணவுத் தட்டுப்பாடு காரணமாகவும் முதலைகள் பெருமளவில் அழிந்து வருகின்றன.

மனிதர்களுக்கு முதலை என்றதும் ஏற்படும் பயத்தினாலோ என்னவோ முதலைகளைக் கொன்றே வருகின்றனர். இப்படியே சென்றால் முதலைகள் புத்தகங்களில் மட்டுமே மிஞ்சியிருக்கும் நிலை ஏற்படும்.

இந்தியாவில் ஆண்டுக்கு 2000 பேர் வரை முதலைக்குப் பலியாகிறார்கள். ஆனாலும் அங்கு முதலைகளைப் பாதுகாக்கவென்று 1976இல் 25 முதலைகளோடு பண்ணையொன்று ஆரம்பிக்கப்பட்டது. இது இன்று **முதலை வங்கி** என்று பெயர் பெற்றுள்ளதோடு ஆயிரம் முதலைகளைப் பராமரித்தும் வருகிறது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது, பிரித்தானியப் படையினரால் கைது செய்யப்பட்ட ஜப்பானியப் படையினர் 1000 பேரை தப்பிப் போகாவண்ணம் 'பெங்காள பொக்க' என்ற சேற்று நிலமொன்றுக்குள் கைது செய்து வைத்திருந்தனர்.

அடுத்த நாள் கைதிகளைப் பார்க்கச் சென்றபோது அதில் 980 பேரை முதலைகள் விழுங்கிவிட்டு ஏப்பமிட்டுக்கொண்டிருந்தன. இந்த மகா பயங்கர விளைவின் பிறகு முதலை பற்றிய பீதியும் மிக அதிகமாகியது.

அதுமட்டுமல்ல சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் பாடி முதலையுண்ட சிறுவனை மீட்டதாக பழங்கதைகளிலும் கிலியூட்டும் பிராணியாக இடம் பிடித்திருக்கிறது.

முதலைகள் மண்ணைக் கிண்டி முட்டையிட்டு மூடி விடும். குட்டிகள் வெளியே வருவதற்கு ஓரிரு மணித்தியாலங்களுக்கு முன் வித்தியாசமான ஒரு சத்தத்தைப் போடும். உடனே தாய் முதலையோ தந்தை முதலையோ ஓடி வந்து முட்டை ஓட்டில் தட்டி உடைத்து குட்டி வெளிவர உதவும். 60 நாட்கள் வரை முட்டைக்குள்ளிருந்து உலகுக்கு தலைகாட்டும் முதலைக் குட்டிகளுக்கு முதல் முத்தம் கொடுத்து தாய் வரவேற்கும்.

அதன்பின் நீருக்குள் செல்லும் முதலைக் குட்டிகள் உயிர்ப் போராட்டம் நடத்தியே தப்பிப் பிழைக்கும். பெரிய மீன்களும், ஏனைய நீர் வாழ் உயிரினங்களும் அவற்றை தம் உணவாக்கிக் கொள்கின்றன. 100 முதலைக் குட்டிகளில் ஒரு முதலையே பெரிதாக வளரும் என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

எந்நேரமும் முதலையின் கண்ணிலிருந்து கண்ணீர் வடிவது போன்று இருக்கும். இப்படி அழுவது போல நடிப்பவர்களைத்தான் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்று கூறுகிறோம்.

மிகத் துல்லியமாகவும் வேகமாகவும் வேட்டையாடக் கூடிய ஊர்வன விலங்கு என பெயர் பெற்றவை முதலைகள். வாய்க்குள் ஒரு இரை அகப்பட்டால் அதன் 70 பற்களுக்குள்ளும் மிக இறுக்கமாக மூச்சுப் போகும்வரை இறுக்கிக் கொள்ளும். பிறகு இரையை அதன் பொந்துக்குள் வைத்து ஆற அமர இருந்து சுவைக்கும்


10 முதல் 15 அடி வரையில் நீளமுடைய முதலைகள் 50 - 60 வருடங்கள் மட்டுமே உயிர்வாழும்.

**- எச். எஸ். டீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமவாய்ப்பு என்றதும் பீதியுறும் மனநோய்




**நக்கிரன்**

சமத்துவம், சகோதரத்துவம், சம வாய்ப்பு என்ற சொற்பதங்களைக் கேட்டாலே கெட்ட கனா கண்டது போல் அலறுவது எமது நாட்டில் ஒரு பண்பாடாகவே வளர்ந்து விட்டது. அது எமது நாட்டில் சகல தரப்பினரிடையேயும் ஒரு தொற்று நோய் போல் பரவியிருந்து இந்த தேசத்தின் எதிர்காலத்தையே குழி தோண்டிப் புதைத்து விடுமளவுக்குப் பூதாகரமாக விரவி நிற்கிறது.

கடந்த மாதம் அரசாங்கம் பாராளுமன்றத்தில் "சமவாய்ப்புச் சட்டமூலத்திற்கான" அறிக்கையை சமர்ப்பிக்கப் போகின்றது என்ற செய்தி வெளிவந்தவுடனேயே குய்யோ முறையோ என எல்லாத் திக்குகளிலுமிருந்து காட்டுக் கத்தல்கள் கேட்கத் தொடங்கி விட்டன. ஏதோ மற்றவர்களுக்கு சம வாய்ப்பு வழங்குவதென்பது தமது வாய்ப்புகளைக் கெடுத்துவிடும், தாம் அழிந்துபோய் விடுவோம் என்கின்ற அடிப்படையிலேயே இவர்கள் கூக்குரலிட ஆரம்பித்தனர்.

சட்டமூலத்தைக் கொண்டுவர முயற்சி செய்த பொ.ஐ.மு. அரசிற்குள்ளேயே அதற்கிருந்த எதிர்ப்பைக் கண்ட போதுதான் இந் நாட்டின் அரசியல் சமத்துவம் பற்றிய பிரச்சினையால் வெடித்திருக்கும் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வருமா என்ற சந்தேகமே எழுகின்றது.

இந் நாட்டின் பிரதான எதிர்க்கட்சி இது பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாது இதற்கெதிரான சக்திகளைத் தூண்டிவிட்டு பொ.ஐ.முன்னணி அரசு பௌத்தர்களுக்கு எதிராகவே இச் சட்ட மூலத்தைக் கொண்டு வருகிறது என்னும் தோற்றப்பாட்டைக் காண்பிக்க முயற்சித்தது. இது நம் நாட்டின் வரலாற்றில் தொடர்ச்சியாக எதிர்க் கட்சிகள் செய்து வந்த கடைகெட்ட செயற்பாட்டின் தொடர்ச்சியேதான்.

சமவாய்ப்பு என்பது இந் நாட்டில் எப்போதும் சிறுபான்மையாகவும், குரல் இழந்தோராகவும் இருப்போருக்கே அதிகம் தேவைப்படுகிறது. இதில் சிறுபான்மை என்னும்போது இனரீதியான, மொழிரீதியான, மதரீதியான வேறுபாடுகள் மிக முக்கியம் வாய்ந்தவை. அதேநேரம் பேசப்படாது விடப்படும் சாதிரீதியான, பிரதேசரீதியான, ஆண் - பெண் பால் நிலை ரீதியான, மலையகம் என்னும் தாழ்வுணர்ச்சிரீதியான ஒதுக்கல்களும் எமது நாட்டில் மோசமாக நடைபெறுவது கண்கூடு.

சமவாய்ப்பு என்பதை வெறும் இனரீதியான ஒரு பாகப் பகிர்வாக மட்டுமே பார்க்கும் வண்ணம் அதன் ஆழமான கருத்துக்களை மூடிமறைத்து, ஆர்ப்பாட்டக் கூக்குரல்களை எழுப்பி பெரும்பான்மை மக்களை ஒரு மயக்கமான பீதியுணர்வுக்குத் தள்ளுவதே இத் தீயசக்திகளின் நோக்கமாக இங்கு வெளிப்பட்டுள்ளது.

உண்மையில் இது இனரீதியாக மட்டுமல்ல எல்லா விதமான சிறுபான்மைப் பிரிவுகளுக்கும் - சிங்கள மக்களுக்கும் கூடவே தான் நன்மை பயக்கக் கூடியது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

சமவாய்ப்புச் சட்டமூலம் கொண்டு வரப்படுவது என்பது எம்போன்ற நாடுகளுக்கு முக்கியமானது மட்டுமன்றி, அதுபோன்றதொன்று கொண்டு வரப்படும்போது, அது இன்னும் செழுமைப் படுத்தப்பட்டுக் கொண்டு வரப்பட வேண்டுமென அழுத்தம் கொடுப்பதே மிகச் சரியானது.

ஆனால் எமது நாட்டில், இது யாராலோ யாருக்காகவோ கொண்டு வரப்பட்ட ஒன்று என்பதுபோல் எல்லோரும் ஏனோதானோ என்று இருக்கும் போக்கே காணப்படுகிறது. அதனால்தான் இதனை எதிர்க்கும் பிற்போக்குச் சக்திகளின் குரல் மிக ஆக்ரோஷமாகக் கேட்கிறது. பெண்ணுரிமை, ஜனநாயகம், மனித உரிமை, ஊடக சுதந்திரம் பற்றிப் பேசிய பலர் இதையிட்டுக் குரல் கொடுக்காதிருப்பது அவர்களின் சிந்தனை வெறுமையையே காட்டிநிற்கிறது.

கொழும்பில் எப்போதும் இனவாத சக்திகளின் கைப்பொம்மையாக ஆட்டப்படும் ஆனந்தா கல்லூரி மாணவர்கள் இம்முறையும் வீதியில் இறக்கப்பட்டு, இனவாத அரசியல் பகடைக் காய்களாக்கப்பட்டுள்ளார்கள்.

இதற்குப் பத்திரிகைகள் கொடுத்த பிரச்சாரத்தினால் அரசாங்கமும் ஒரு அடி பின்னால் வைத்து, சட்டமூலத்தை கிடப்பிலே போட்டுவிட்டது. இறுதியில் வென்றது பிற்போக்குத் தனமும் அரசியல் பக்கிரித்தனமுமே என்றால் அதில் தவறில்லை.


சம வாய்ப்புத் தொடர்பாக சிங்கள மக்களுக்கு தமிழர்கள், முஸ்லிம்கள் பற்றி இருக்கின்ற பயம் போன்றுதான், தமிழர்களிடம் எப்போதும் முஸ்லிம்கள் பற்றிய பயம் காணப்படுகின்றது. எனவேதான் தமிழர்களின் உரிமைகள் பற்றிப் பேசும் தமிழ்க் கட்சிகள், இயக்கங்கள், பத்திரிகைகள் சம வாய்ப்பு சட்டமூலம் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. இதுவும் ஒரு அரசியல் பக்கிரித்தனம்தான்.

தமிழர்களின் இந்த மனோநிலை, முஸ்லிம்களிடம் தமிழர்களை முந்திக் கொண்டு தாம் வாய்ப்புகளைப் பெற வேண்டும் என்ற நிலையை உருவாக்கி விட்டுள்ளது. இதனால் வரவர தமிழ் மொழியைப் பேசினாலும் சகல துறையிலும் தமிழ் - முஸ்லிம் விரிசல் அதிகமாகிக் கொண்டே செல்கின்றது.

இந்த மனோரீதியான தொற்றுநோய் பீடித்த நிலைமையை மாற்ற சட்ட மூலங்களால் மட்டும் முடியுமா என்பது கேள்விக்குறியாக இருந்தாலும் கூட கட்சிகள் பதவியேற்று அரசாங்கங்களாக வந்தபின் தொலைநோக்குப் பார்வையோடு, நாட்டின் நீண்டகால நலனோடு சிந்தித்து எடுக்கும் நடவடிக்கைகளைத் துணிந்து மேற்கொள்ளும் மனோபலத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

அதேவேளை தம்மை முற்போக்காளர் எனவாய் கிழியப் பீற்றித் திரிபவர்கள் எந்த அரசாங்கமானாலும் எடுக்கும் சரியான நடவடிக்கைகளுக்கு துணிந்து ஆதரவு வழங்கும் அடிப்படை நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "விரல்களே கண்ணைக் குத்துகின்றன!"

அமுது ஒக்டோபர் 99 இதழ் பார்த்தேன். வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றம் மனதைத் தொட்டுவிட்டது. ஆனால் யார் யாருக்காக அழ முடியும்? கலாநிதி நு.'.மான் உடுப்புப் பெட்டியுடன் வெளிக்கிட்டார். ஆனால் கலாநிதி ராஜினி திரணகம என்னத்துடன் வெளிக்கிட்டார்...? இன்னும் யாம் அறியா கலாநிதிகள் எப்படி எப்படி வெளிக்கிட்டார்கள்...? எதற்கு எதற்கு என்று நாம் கவலைப்பட முடியும்? கண்ணீர் இருந்தால் அல்லவா அழ முடியும்? மூழ்கிய பின் சாண் போனாலென்ன? முழம் போனாலென்ன?

வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றம் வாசித்த பின் பிறந்ததுதான் இந்தக் கடிதம். "விரல்களே கண்ணைக் குத்துகின்றன!" என வெதும்பி இதை எழுதுகிறேன்....

யார் சொன்னது வடக்கு முஸ்லிம்களை மட்டும் வெளியேறச் சொன்னது என்று? அவர்கள் வடக்குத் தமிழர்களையும் சேர்த்தே வெளியேறச் சொன்னார்கள்! இதுதான் உண்மை!

முஸ்லிம்களின் சொத்துக்களை மட்டும் அவர்கள் அபகரிக்கவில்லை! வடக்குத் தமிழர்களின் சொத்தையும் சேர்த்தே அபகரித்தார்கள்! ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசியில் மனிதனையும் கடித்துவிட்டார்கள்.

யாழ்ப்பாண இடம்பெயர்வின்போது என்ன நடந்தது? வன்னியின் இடம்பெயர்வின் பின் என்ன நடக்கிறது? முழு பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைக்க முடியுமா? மக்கள் கூறும் வேதனைக் கதைகளை தடுக்க முடியுமா? நாளை பதியப்படுமே!

யாழ்ப்பாண இடம்பெயர்வின்போது ஒலிபெருக்கிகள் மூலம் என்ன அறிவிக்கப்பட்டது? இருபத்து நான்கு மணித்தியாலத்துள் மக்கள் இடம்பெயர வேண்டும் எனக் கோரப்பட்டது. மக்கள் திகைப்படைந்து விட்டார்கள்! ஏதோ எடுக்கக் கூடியதை எடுத்துக்கொண்டு பொறி கலங்கி புறப்பட்டார்கள். பெண்கள், பிள்ளைகள், கர்ப்பிணிகள், வயோதிபர்கள், நோயாளிகள் யாவரும் "மோசேயை" எதிர்பார்த்து பயணித்தார்கள்! இல்லை ஊர்ந்தார்கள்.

மண்ணில் தீராத பற்றுக் கொண்டவர்கள் வீடுகளில் ஒளிந்து இருந்தார்கள். வீட்டிலேயே மரணிப்போம் என சில உறுதியான வயோதிப - வாலிபர்கள் வனவாசமாக இருந்தார்கள்.

இறுதியில் வீடுகள் நோட்டம் பார்க்கப்பட்டு ஒளிந்து இருந்தவர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டார்கள். வளமான வன்னி அழைக்கின்றது என்று சொல்லி, நட்ட நடுக் காட்டில் கொண்டு வந்து தள்ளிவிட்டார்கள்.

இறுதியில் என்ன நடந்தது? யாருமற்ற வீடுகளில் என்ன நடந்தது? கடைகளில் என்ன நடந்தது?

## வாசலைத் தாண்டிய கடிதம்

பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டு வன்னிக்கு ஏற்றுமதியாகின. கடைகள் சூறையாடப்பட்டன. சேகரிக்கப்பட்ட யாவும் வன்னிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அதே மக்களுக்கு விற்கப்பட்டன. யாரும் பறைய முடியுமோ? ஆனால், இவற்றைக் கண்டு அதிர்ச்சியுற்று மூளையை விட்டவர்கள் எத்தனை பேர்? பேசா மடந்தையானோர் எத்தனை பேர்? இதையெல்லாம் எழுதாக் கவிகள் நாடோடிப் பாட்டாக எழுதிவிட்டார்கள். மக்கள் மத்தியில் உள்ள பாடல்களை யார் தணிக்கை செய்ய முடியும்?!

இன்று வன்னியில் நடப்பது என்ன? யாருமற்ற வீடுகள், கட்டிடங்கள் உடைக்கப்படுகின்றன. சீமெந்துக் கற்கள், செங்கற்கள் பெயர்த்தெடுக்கப்படுகின்றன. கூரைகள் கழற்றப்படுகின்றன. ஓடுகள், சீற்றுகள், மரங்கள், தடிகள் எல்லாம் "தளத்துக்குப்" போகின்றன. இவர்கள் செய்தால் விடுதலைப் போராட்டம்.... ஆஹா?

இந்தச் சொத்துக்கள் எல்லாம் யாரினது? இந்த மண்ணின் மக்களது சொத்துக்கள் அல்லவா? இவற்றைத் தேட, கட்டி முடிக்க இந்த மக்கள் எவ்வளவு சிரமப்பட்டு இருப்பார்கள். இன்று கட்டிய துணியோடு அகதியாக திரிகின்றார்கள். இதை யார் நினைத்துப் பார்க்கின்றார்கள்?

இராணுவம் மரத்தை வெட்டலாம், பொருட்களைக் கொள்ளையடிக்கலாம் அல்லது அதனுடன் கூட வந்த லும்பனும் கொள்ளையடிக்கலாம். ஏன் என்றால் அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள். வடபகுதி மக்களை எதிரிகளாகப் பார்க்கிறவர்கள். அவர்கள் அப்படித்தான் செய்வார்கள். ஆனால், போராடப் புறப்பட்டவர்கள் செய்யலாமா?

சொந்தக் கையே கண்ணைக் குத்தலாமா? எமது மண்ணை, எமது மக்களின் சொத்தைக் காப்பாற்ற வேண்டியவர்களே அழிக்கலாமா? காசுக்காக எதையும் செய்யலாமா? அப்படியானால் எமது இலட்சியம், பற்று, தியாகம் எல்லாம் என்னாவது?


இங்கிருந்து எங்கே போகின்றோம்? யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு ஏற்றுமதி! வன்னியில் இருந்து எங்கே? காட்டுக்கா? தொடங்கிய தொடக்கம் என்ன? நாளை நடக்கப் போவது என்ன?

இந்த மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? வாயில்லாப் பூச்சிகளாய் வெளிநாட்டிற்கு ஓடுவதையே யாவரும் விரும்புகின்றார்களா? மக்கள் ஓடிய பின் வெற்றிடத்தை என்ன செய்ய முடியும்? அரசுதான் வெளிநாட்டுக்கு ஓடுவதை விரும்புகின்றது. நீங்களுமா....? ஏன் இந்த நிலை.... இந்த அப்பாவி மக்கள் புழுக்களாய்.... விட்டில் பூச்சிகளாய்.... இங்கே சாவதா? ஏன் இந்தக் கொடுமை...? கண்களிரண்டையும் விற்றுச் சித்திரம் (சுதந்திரம்) பெறுவதா?

**- இங்ஙனம்
யாழ்பாடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலரங்கம்



# இந்திய அரசியலை நம்பி.....

**பி.ஜே.பி. அரசு இலங்கை அரசுக்கும் சிங்களவர்களுக்கும் பாரிய அழுத்தத்தைக் கொடுக்கும் அதேவேளை விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பக்கபலமாக நின்று ஒத்தாசை வழங்க முன்வரலாம் என்பதே இவர்களின் நம்பிக்கையாக உள்ளது. இதில் வெளியே சொல்லப்படாத விடயம் என்னவென்றால் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் பாதுகாப்பு அமைச்சராக இருப்பதனால் ஏற்கெனவே புலிகள் மீது போடப்பட்டிருக்கும் தடையுத்தரவு தொடர்பாக அவர் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கலாம். அதனால் புலிகளுக்கு இந்து சமுத்திரத்தின் ஊடாக தங்குதடையின்றி ஆயுதங்கள் உட்பட பல்வேறு பொருட்களைக் கொண்டு வருவது சுலபமாக இருக்கும். எனவே புலிகள் எப்படியாவது இலங்கை அரசோடு இறுதி யுத்தத்தில் இறங்கி தனிநாட்டைப் பெற்று விடுவார்கள் என்பதுதான்.**

கடந்த சில ஆண்டுகளாக தென்னாசியாவின் சர்ச்சைக்குரியவிடயமாககருதப்பட்ட இந்திய தேர்தல் முடிவடைந்து விட்டது. இந்திய மக்கள் தமது அறிவுக்கெட்டிய வரையில் ஓர் அரசியல் தீர்ப்பை வழங்கிவிட்டனர். தம்மையார் ஆளவேண்டும் என்பதும் யார் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதும் இந்திய மக்களைப் பொறுத்தவரை தமது நாட்டின் பிரச்சினை. இந்த வகையில் மீண்டும் இந்திரா காங்கிரசுக்கு ஒரு சாட்டை அடி கொடுத்து பாரதீய ஜனதாக் கட்சியை பதவிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் இந்திய மக்கள்.

சோனியா காந்தி தனிப்பட்ட முறையில் பீ.ஜே.பி. வேட்பாளரை ஆயிரக்கணக்கான வாக்குகளால் தோற்கடித்து வெற்றிவாகை சூடினாலும் இந்தியாவின் பிரதமர் கதிரையில் அமர்வதற்கான வாய்ப்பை அவருக்கு மக்கள் வழங்கவில்லை.

அதே வேளை இந்து மதவாதத்தை ஆயுதமாகக் கொண்டு தமது அரசியலை வளர்த்தெடுத்த அத்வானி, வாஜபாய் உட்பட பல பி.ஜே.பி. தலைவர்களை வெற்றிவாகை சூட வைத்தது மட்டுமன்றி அவர்களை ஆட்சிக் கதிரையிலும் அமர்த்தி விட்டிருக்கிறார்கள் மக்கள்.


இதில் இந்திய மக்களின் தீர்ப்புச் சரியா தவறா என ஆராய்வதோ, அது இந்தியாவின் எதிர்காலத்தை எப்படித் தீர்மானிக்கப் போகிறது என்பதை ஆராய்வதோ அல்ல இக்கட்டுரையின் நோக்கம். மாறாக, இத் தேர்தல் முடிவுகளை வைத்துக்கொண்டு இலங்கைத் தமிழர்களிடையே வியாக்கியானப்படுத்தப்படுகின்ற பல்வேறு ஆருடங்களை அலசுவதேயாகும்.

பி.ஜே.பி.யின் வெற்றியையிட்டு இந்திய மக்களைவிட இலங்கைத் தமிழ் மக்களே பாரிய எதிர்பார்ப்புகளோடு பார்க்கும் மனப்பாங்கை கடந்த சில மாதங்களாகவே தமிழ் ஊடகங்கள் ஊட்டிவந்தன.

அதற்குக் காரணம் இன்று இலங்கைத் தமிழ் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் ஜனரஞ்சக அரசியல் போக்கே என்றால் அதில் தவறில்லை.

அதிலும் பி.ஜே.பி. அதிகாரத்துக்கு வந்து, அவ் அரசாங்கத்தில் ஜோர்ஜ் பெனார்ண்டஸ் என்பவர் பாதுகாப்பு அமைச்சராகவந்துவிடவேண்டும் என்ற எதிர்பார்ப்பே மிக மிக பூடகமாக பல இடங்களில் பகிரங்கமாகவும் சொல்லப்பட்டன.

இப்போது அவ்வாறு கொடுக்கப்பட்ட எதிர்பார்ப்பு யதார்த்தமாகி விட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றில் இறங்கி....

**குருஷேத்திரன்**

இவ் வெற்றி நிலைமையைக் கண்டு இத் தமிழ் ஊடகங்கள் மகிழ்ச்சியடைவது மட்டுமன்றி அதனடிப்படையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பாரியதொரு தாக்கம் ஏற்படப்போகிறது என்பதைப் போல நம்பிக்கை தெரிவித்துள்ளன.

அதாவது பி.ஜே.பி. அரசு இலங்கை அரசாங்கத்துக்கும் சிங்களவர்களுக்கும் பாரிய அழுத்தத்தைக் கொடுக்கும் அதேவேளை விடுதலைப் புலிகள் அமைப்புக்குப் பக்கபலமாக நின்று ஒத்தாசை வழங்க முன்வரலாம் என்பதே இவர்களின் நம்பிக்கை.

இதில் வெளியே சொல்லப்படாத விடயம் என்னவென்றால் **ஜோர்ஜ் பெர்னாண்டஸ்** மீண்டும் பாதுகாப்பு அமைச்சராக வந்திருப்பதால் ஏற்கனவே புலிகள் மீது போடப்பட்டிருக்கும் தடையுத்தரவு தொடர்பாக அவர் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கலாம். எனவே புலிகளுக்கு இந்து சமுத்திரத்தின் ஊடாக தங்கு தடையின்றி ஆயுதங்கள் உட்பட பல்வேறு பொருட்களைக் கொண்டு வருவது சுலபமாக இருக்கும். அதனால் புலிகள் எப்படியாவது இலங்கை அரசோடு இறுதி யுத்தத்தில் இறங்கி தனி நாட்டைப் பெற்று விடுவார்கள் என்பதுதான்.

இது உண்மையிலேயே எவ்வளவு தூரம் யதார்த்த பூர்வமான, தர்க்க ரீதியான அரசியல் சிந்தனை என்பது கேள்விக்குரியது. இப் பத்திரிகைகள் இன்னும் ஒரு படி மேலே போய், தமிழ் நாட்டில் பதவியிலிருக்கும் முதலமைச்சர் கருணாநிதி 'தனித் தமிழ் நாடு இலங்கையில் உதயமாவதைக் கண்டு மகிழ்ச்சியுறும் முதல் தமிழன் நானாகத்தான் இருப்பேன்' என்று பீ.பீ.சி. தமிழோசைக்குக் கூறிய செய்தியையும் பெரிதாகப் பிரசுரித்ததன் மூலம் மேற்சொன்ன பி.ஜே.பி - பெர்னாண்டஸ் நம்பிக்கையை உறுதி செய்ய கருணாநிதியையும் துணைக்கு இழுக்க முனைந்திருக்கின்றன.

இவ்வாறான வியாக்கியானங்கள் உள்ளங்கையில் கண்ணாடியை வைத்துக்கொண்டு வான நிலவை அதில் காட்டி "இதோ பிடித்துவிட்டேன் பார்" எனக் கூறும் சிறுபிள்ளை விளையாட்டுக்கு ஒப்பானது என்பது பலரின் கருத்து.

தமிழ் மக்களையும் தமிழ் அரசியலையும் பொறுத்தவரை, ஆரம்ப காலம் முதல் அதற்கு இந்திய மக்களையும் இந்திய அரசியலையும் பற்றி எவ்வளவு தூரம் ஆழமான புரிந்துணர்வு இருந்தது என்பது கேள்விக்குறியே.

எமது அரசியல் நினைவுகளை 25 வருடம் பின்னோக்கி வீசிப் பார்த்தல் இங்கு மிகப் பொருந்தும்.

1974ம் ஆண்டு "தமிழீழம்" பற்றிய வட்டுக்கோட்டைத் தீர்மானம் எடுக்கப்பட்டு அதன்பின்பு ஆயுத மேந்திய அரசியல் ஆரம்பமானது முதல் 1987ம் ஆண்டு இந்திய இராணுவத்திடம் செம்மையாக உதைவாங்கும் வரை இந்தியா மீது இலங்கைத் தமிழர்களுக்கு இருந்த நம்பிக்கை இமாலய அளவாகும். இந்த நம்பிக்கை வெறும் உணர்ச்சிகலந்த நம்பிக்கையாக இருந்ததேயன்றி ஆழமான அரசியல் ஆய்வுக்கூடாக வந்ததாக தெரியவில்லை.

இந்த நம்பிக்கையில் தமிழ் தேசியவாத அரசியல் இயங்கங்கள் முதல் இடதுசாரி இயக்கங்கள் வரை விதிவிலக்காக இருக்கவில்லை. அதுமட்டுமல்ல, இந்திய எதிர்ப்புணர்வுகொண்டதமிழ்இயக்கங்களுக்குக் கூட இந்தியாவை பின்தளமாகப் பாவிப்பதைத் தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை.

ஆயுதப்பயிற்சி, ஆயுதம், பணம், தார்மீக ஆதரவு, பிரச்சாரத் தளம்... என எல்லா வகையிலும் இந்தியாவிலேயே தங்கிநிற்கும் நிலை அன்று இயக்கங்களிடம் காணப்பட்டது.

1984ம் ஆண்டு ஒக்டோபர் 31ம் திகதி இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது இலங்கைத் தமிழரிடையேயும் தமிழ் அரசியல் இயக்கங்களிடையேயும் பரவிய மனஅதிர்வும், கவலையும், தமிழ்ப் பிரதேசமெங்கும் கொண்டாடப்பட்ட துக்க தினமும் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

ஆனால் 5 வருடங்களின் பின் 1991ம் ஆண்டு அவரது மகன் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட போது அது தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசியலுக்கும் மகிழ்ச்சியான ஒரு தினமாகக் கருதப்பட வேண்டும் என்றே வலியுறுத்தப்பட்டது.



ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

அரசியல் மாறி விட்டது. நண்பன் எதிரியாகிவிட்டான். எனவே புதியநண்பனை நாம் தேடவேண்டிய நிலை. ஆனால் அந்த நண்பனை அதே இந்திய நாட்டுக்குள்தான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இலங்கைத் தமிழ் அரசியல் இருக்கிறதென்பது மறுக்க முடியாத உண்மை.

அரசியலில் நண்பன்-எதிரி என்பது தனிநபர்கள் சம்பந்தப்பட்டதா அல்லது அரசியல் கொள்கைகள் சம்பந்தப்பட்டதா என்ற கேள்வி எப்போதும் முக்கியமானது. இலங்கைத் தமிழ் அரசியலில் எப்போதும் கொள்கை என்பது மேலோங்கி நிற்பதை விட தனி நபரின் ஆதிக்கமும், செயற்பாடும், தீர்மானமுமே அரசியலாகக் கருதப்படுவதாலோ என்னவோ அதுதனக்குவெளியே உள்ள அரசியல் தளத்திலும் கொள்கைகள் என்பதைப் பார்ப்பதைத் தவிர்த்து தனிநபர் எனக்கு எதிரியா நண்பனா என்றுபார்க்கவே பழக்கப் பட்டிருக்கிறது. அந்த வகையில்தான் இன்று பெர்னாண்டஸ், வாஜ்பாய், கோபாலசாமி, டாக்டர் ராமதாஸ், நெடுமாறன், கருணாநிதி... என, திக்குத்திக்காக இருக்கும் தனிநபர்கள் மீது மானசீக நம்பிக்கை வைத்து அரசியல் செய்யும் நிலையில் தமிழ்ச் சமூகமும் தமிழ் அரசியலும் இருக்கிறது.

இந்தியா இலங்கையையும் அதன் அரசியலையும் அதனுள் இருக்கும் சிறுபான்மை இன மக்களின் அரசியலையும் எப்படிப் பார்க்கும், எப்படி அணுகும், எப்படி அது அணுகியது என்பதற்கு கடந்த காலம் ஒரு நல்ல அனுபவமாகும்.

அதன் அணுகுமுறை பிரதானமாக மூன்று கோணங்களில் அமைந்திருந்தன.



சோனியா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒன்று, தமது ஆதிக்கப் பிராந்தியத்தில் தனது காலடியில் இருக்கும் சிறிய தீவான இலங்கையின் அரசியல் தன்னை மீறிய வேற்று நாட்டைச் சார்ந்ததாக இருக்கக் கூடாது. எனவே இலங்கை அரசைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அதன் உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றுக்குள் தன் கரங்களை வலுவாக வைத்திருத்தல்.

இரண்டாவது, இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழ் நாட்டிலுள்ள 6 கோடி தமிழர்களின் உணர்வுகளோடு தொடர்புள்ளதாக கருதப்படுவதால், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவளிப்பது போன்ற நிலைப்பாட்டை எடுத்து அதன் மூலம் தேர்தல்களில் எப்படி செல்வாக்குத் தேடிக் கொள்ளலாம்.

மூன்றாவது, இலங்கைத் தமிழரின் ஆயுதமேந்திய போராட்டத்தை முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் அது ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்டி தனிநாடு பிரிக்கும் அளவுக்குப் போக விடாது தடுத்து அதற்குக் குறைந்த ஏதாவதொரு அதிகாரத்தை பெற்றுக்கொடுத்து தீர்த்து வைப்பது. (இந்தியாவைச் சூழவுள்ள நாடுகள் எவற்றிலாவது பிரிவினை நிகழ்ந்தால் அது இந்தியாவைப் பாரதூரமாகப் பாதிக்குமென இந்தியா நம்புகிறது)

இந்தியாவில் கடந்த 20 வருட காலங்களில் இருந்த அரசுகள் இம்மூன்று விடயங்கள் தொடர்பாக பாரிய மாறுபட்ட நிலைப்பாடுகளைக் கடைப்பிடிக்கவில்லை. அதிலும், குறிப்பாக பி.ஜே.பி.யின் அடிப்படை அரசியல் நாதமே இந்தியத் தேசியம் தான். அது காங்கிரஸைவிட ஒருபடி மேலே போய் இந்து இந்தியத் தேசியத்தின் காவலனெனத் தன்னைக் காண்பிக்க அணுகுண்டை வெடிக்கவைத்தது, அதன் பாதிப்பு வாஜ்பாயை ஒரு தேசியக் கதாநாயகனாக உருவாக்கியிருப்பதையும் நாம் காண்கிறோம்.

எனவே, இந்தியாவை ஒன்றாக வைத்திருப்பதில் இந்திரா காங்கிரஸைவிட வாஜ்பாய் காட்டும் அக்கறையே அவரின் எதிர்காலத்தைக் கூட தீர்மானிப்பதாக இருக்கும். எனவே, இந்தியாவில் பிளவைத் தூண்டக்கூடியதான தமிழீழப் பிரிவினையை பி.ஜே.பி. அரசு ஆதரிக்குமா என்பதை சிந்திக்க வேண்டும்.

இந்தியாவைப் பொறுத்த வரை இலங்கையிலுள்ள 35 லட்சம் தமிழர்கள் என்பதைவிட இலங்கை அரசின் கொள்கையும் நிலைப்பாடுமே மிக முக்கியமாகும்.

***இந்தியா இலங்கையையும் அதன் அரசியலையும் அதனுள் இருக்கும் சிறுபான்மை இன மக்களின் அரசியலையும் எப்படிப் பார்க்கும், எப்படி அணுகும், எப்படி அணுகியது என்பதற்கு கடந்தகாலம் ஒரு நல்ல அனுபவமாகும். அதன் அணுகுமுறை பிரதானமாக மூன்று கோணங்களில் அமைந்திருந்தன.***

இந்திய அரசின் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் இந்திய அரசியல், ஐக்கிய இந்தியக் கொள்கை, இந்திய பாதுகாப்புத்துறை, இந்திய அதிகாரத் துறை (Bureaucracy), ஊடகத்துறை என்கின்ற எல்லாவற்றையும் தாண்டி ஜோர்ஜ் பெர்ணான்டஸ் போன்ற ஒருவரால் என்ன செய்துவிடமுடியும் என்பதும் சிந்திக்கப்பட வேண்டிய கேள்வி.

இந்தியத் தேசியமென்பது எப்பொழுதும் இந்தியாவுக்கான அவமானமென வருகின்றபொழுது இன, மத, மொழி, கலாசார, பிரதேச எல்லைகளைத் தாண்டிய ஒன்றாக கொதித்தெழுந்தே பழக்கப்பட்டிருக்கிறது.

எனவே, இந்திய சுதந்திரத்தின் பின்பு அங்கு நடத்தப்படும் அரசியலில் மட்டுமன்றி அந்த நாட்டின் கல்வி, விளையாட்டு, யுத்தம், கலை, இலக்கியம், தொழில்நுட்பம்.... என சகலதிலும் "இந்தியா", "இந்தியன்" என்கின்ற உணர்வுடன்கூடிய அகங்காரத் தொனி ஒரு பொதுப் போக்காக மேவி நிற்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, இந்தியாவின் கொள்கை முடிவுகள் அதன் பெருமையைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே அதிக அக்கறையாக இருக்குமென்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

இந்திய அரசியலில் காணப்படும் அப்போக்கின் சரிபிழைபற்றிஇங்கு நாம் ஆராயத் தலைப்படவில்லை.

1987ல் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிட்ட போதும், தனது பெருமையைப் பற்



## பார்க்க முடியாத மில்லேனியத்தின் பிறப்பு

புதிய மில்லேனியத்தின் பிறப்பைக் கொண்டாடுவதை உலகில் எல்லோரும் பார்க்க முடியும் - பார்வை இல்லாதவர்களைத் தவிர...! அதற்காக அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரில் பார்வையற்றோர் புதிய மில்லேனியத்தின் பிறப்பை தொட்டு, முகர்ந்து, உணர்ந்து, புரிந்துகொள்வதற்கான பொருட்காட்சி ஒக்டோபர் 5ம் திகதி நடத்தப்படுகிறது. அதில் வைக்கப்பட்டிருந்த ஓர் ஆக்கத்தை பார்வையற்ற ஒருவர் தொட்டு, உணர்ந்து, புரிந்துகொள்வதையே படத்தில் காண்கிறீர்கள். இதுபோல் 65 வகைப் படைப்புகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. இதில் சிறந்த படைப்புக்குப் பரிசும் தரப்படவுள்ளதாம். நடுவர்களாக நான்கு பார்வையற்றவர்களும் மூன்று பார்வையுள்ளோரும் பங்குபற்றியதே மற்றொரு புதுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிய அக்கறையுடனேயே அது விடயங்களைக் கையாண்டிருக்கும். (யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம் உணவுப் பொட்டலம் போட்டது முதல் ஜே.ஆர். அரசைப் பணியவைத்து இந்திய இலங்கை ஒப்பந்தத்தைக் கையொப்பமிடச் செய்ததுவரை.)

ஆனால் அத் தலையீட்டினால் அது எந்த மக்களுக்காக உதவி செய்கிறோம் எனக் காண்பிக்க முற்பட்டதோ, அதே மக்களின் அரசியலினால் அதன் பெருமைக்கு விழுந்த அடியையும், ஏற்பட்ட அவமானத்தையும் அது மறக்கவில்லையென்பதை அதன் கடந்தகால அரசியல் நிரூபித்திருக்கிறது.

புலிகளுக்கெதிரான தடை, புலிகளை ஆதரித்ததற்காக கருணாநிதியின் ஆட்சிக் கலைப்பு, ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டோருக்கு வழங்கப்பட்ட தண்டனை இலங்கைத் தமிழர்களுக்கு வீசா வழங்குவதில் காட்டப்படும் கடுமையான நடைமுறை, இந்தியாவுக்குச் செல்லும் இலங்கைத் தமிழர்களுக்கு அங்கு பதிவதில் முதற்கொண்டு மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள்... என எல்லாம் இதையே சுட்டிக் காட்டுகின்றன.

வேண்டுமானால் தமிழ் நாட்டிலுள்ள தலைவர்களும் பி.ஜே.பி. தலைவர்களும் 'இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வையுங்கள்' என்று பட்டும் படாமலும் சில அறிக்கைகளை விடுவார்களே ஒழிய அதற்கு மேல் இலங்கை அரசிற்கு பாரிய அழுத்தமெதனையும் கொடுக்க முயல்வார்களா என்பது சந்தேகமே. இலங்கை அரசியலுள் தமிழத் தலைவர்களைப் பற்றியும் சிங்களத் தலைவர்கள் பற்றியும் இந்தியாவின் கணிப்பீடு 'இவர்கள் எப்போதும் நம்பமுடியாதவர்கள்' என்றே ஜே. என். டிக்ஷிட் அவர்கள் ஒரு பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

இந்திய அரசியலில் ஏற்படும் மாற்றத்திற்கு ஊடாக இலங்கை அரசியலிலும் தமிழ் அரசியலிலும் மாற்றம் ஏற்படலாம் என எதிர்பார்ப்பது இன்றைய நிலையில் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் செயல் போன்றதாகும். ஏனெனில் இந்திய - இலங்கைக்கு இடையேயான அரசியல் உறவும் கொடுக்கல் வாங்கல்களும் கடந்த கால நடைமுறைகளும் எப்படி இருந்தன என்பவையே அவற்றைத் தீர்மானிக்கும்.


ஆனால் எமது அரசியலைப் பொறுத்தவரை "நாங்கள் எப்போதும் இப்படித்தான் இருப்போம். எந்த ஒரு அடிப்படையிலும் ஒற்றுமைப்பட மாட்டோம், கொலை செய்வதை குறைக்க மாட்டோம், மாற்றுக் கருத்து வைத்தால் மரண தண்டனை வழங்குவோம், விரும்பினால் தான் பேச்சுவார்த்தைகளுக்குவருவோம், மக்கள் அழிவதைப் பற்றிக் கவலைப்பட மாட்டோம், உலகமனிதாபிமானசட்டங்களைப் பற்றி எமக்கு எந்தக் கவலையும் இல்லை..." என்ற நிலை இருக்கும் வரைக்கும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பாதுகாப்புஅமைச்சராகமட்டுமல்ல பிரதமராக வந்தாலும் கூட ஒன்றும் பெரிதாக எமக்குக் கிடைத்துவிடப் போவதில்லை.


கடந்த 20 வருடமாக மாயையை நம்பி, அவற்றையே எமது அரசியல் நம்பிக்கைகளாக ஏற்றுக்கொண்டு பழக்கப்பட்ட நமக்கு இப்போது புதியதொரு மாயையை ஏற்படுத்தி அதை நம்பி இன்னும் ஐந்து வருடத்திற்கு ஆயிரக்கணக்கான மக்களின் அழிவை நியாயப்படுத்துவதுதான் இந்த இந்திய நம்பிக்கையின் இறுதி முடிவாக இருக்கும்.

இன்று இலங்கையிலும் ஆசியப் பிராந்தியத்திலும் ஏன் உலகெங்கிலும் கூட இலங்கைத் தமிழரின் பிரச்சினை ஒரு அரசியல் தலையிடியாகத்தான் பார்க்கப்படுகிறதே தவிர அதற்கிருந்த தார்மீக ஆதரவும் வலுவும் இப்போது இல்லை என்கிற உண்மையை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். வசதிஉள்ளவர்களும் வயதுமுதிர்ந்தவர்களும் தப்பினோம் பிழைத்தோம் என்று நாட்டை விட்டு ஓட வசதி இல்லாதோரும் வயது முதிராப் பாலகர்களும் பலிக்கடாக்களாக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் போராட்டம் இந்தியாவைப் பொறுத்த வரையும் பத்தோடு பதினோராவது பிரச்சினையாகத்தான் கணிப்பிடப்பட முடியும்.

யுத்தத்தைச் செய்பவர்களும் யுத்தத்தைவியாபாரமாக்கிக் கொடுப்பவர்களும் அது இல்லாமல் அரசியலே செய்ய முடியாதவர்களும் தொடர்ந்துசெய்யும் இந்த ஏமாற்று வித்தையை புரிந்து கொள்ளுவது மக்களைப் பொறுத்தவரை மிக அவசியமானது. எமது நாட்டு அரசியலை ஆரோக்கியமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் மாற்றுவதற்கான அழுத்தத்தைப் போடுவதும் அதற்காக ஒரு பொது ஏற்றுக்கொள்ளலுக்கு அரசியல் கட்சிகளை வரச் செய்வதும்தான் இன்று இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரை மிக அவசியமானதென்பதை யாராலும் மறுக்க முடியுமா? •

## பழசுகள் குத்திய பச்சை





எமதூரில் நெற்றியில் கைகளில் பச்சை குத்தியிருக்கும் வயது முதிர்ந்தோரை "அந்தப் பச்சை குத்தின பழசு" என நாம் கேலி செய்திடுவோம். அது இன்று உலக அரங்கில் பெரும் கலையாக மதிக்கப்படுகிறது.
அதனை "டாட்டு"(Tatto) என மேலை நாட்டார் அழைக்கின்றனர். கடந்த அக்டோபர் மாதம் "லார்சோ" நகரில் நடைபெற்ற "டாட்டு" விழாவில் கலந்துகொள்ள பல நாடுகளில் இருந்தும் "டாட்டு" கலைஞர்கள் சென்றார்கள். ஆனால் மேற்குலகினர் நம் போல் அல்ல. உடம்பு முழுவதும் வர்ணப் படங்களாகவே குத்திக் கொள்வதில் அவர்களுக்குப் பைத்தியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பொலிஸ் பதிவு, சோதனைச் சாவடிகளில் பதிவுப் பத்திரத்தைக் கோருதல் மற்றும் சோதனை நடவடிக்கைகள் தொடர்பான சில புதிய அறிவுறுத்தல்கள் அண்மையில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து தொல்லை தவிப்புக் குழு மீது கவனம் திரும்புள்ள இத் தருணத்தில் அதன் தலைவரான அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியை அமுது நேயர்களுக்காக சந்தித்தோம். அவருடன் எஸ்.எஸ்.பி, எம்.பி. (எல்மோ) ராபனும் கலந்துகொண்டு வழங்கிய சிறப்புப் பேட்டி இது**

பேட்டி கண்டவர் : து. பாஸ்கரன்

# தொல்லை தீர்ப்பதே நோக்கம்...

**கேள்வி:** உங்கள் தொல்லை தவிர்ப்புக் குழுவின் செயற்பாடு திறமையாக உள்ளதெனக் கருதுகிறீர்களா?

**பதில்:** ஆம்! நாம் ஒவ்வொரு கிழமையும் கூடுகிறோம். முறைப்பாடுகளை ஆராய்கிறோம். அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இந்தக் கமிட்டி 1998ம் ஆண்டு ஜூலை மாதம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது. அன்றுதொடக்கம் இதுவரை 64 கூட்டங்களை நடத்தி விடயங்களை ஆராய்ந்துள்ளோம்.

**கேள்வி:** உதாரணத்திற்கு அப்படி நீங்கள் கையாண்ட விடயங்கள் என்ன?

**பதில்:** எமக்கு இதுவரை 284 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை பல்வேறு வகைப்பட்ட முறைப்பாடுகள். அவற்றையெல்லாம்தீர்க்குமுகமாகவிசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம்.

**கேள்வி:** அவை பொதுவாக எப்படிப்பட்ட விடயங்கள்?

**பதில்:** நீண்டகாலமாக தடுப்புக்காவலில் உள்ளவர்கள் பற்றியவை, கைது செய்யப்பட்டபின் எங்கு இருக்கிறார்கள் என்று உறவினர்களுக்குத் தெரியாமல் இருக்கும் நபர்கள் தொடர்பானவை, வவுனியாவுக்குச் செல்ல அனுமதிக்கப் படாதிருப்பவர்கள் தொடர்பானவை.....

**கேள்வி:** வவுனியாவிலிருந்து இங்கு வருவதற்கு ஒரு பாஸ் முறையைக் கையாளுகிறார்களே, அதிலுள்ள தொல்லைகளைக் களைய முற்பட்டிருக்கிறீர்களா?

**பதில்:** வவுனியாவிலிருந்து கொழும்பு வருவோர் பலர் விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து வருவதாலேயே பாதுகாப்புக் கருதி இந்த பாஸ் நடைமுறைகள் அப்பிரதேச காவல்துறையினரால்அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ் வழிமுறைகளை மாற்றியமைப்பதென்பது அங்குள்ள பாதுகாப்பு நிலைமையோடுசம்பந்தப்பட்டது. ஆயினும் அங்கிருந்து வரும் மக்கள் தரும் முறைப்பாடுகளை ஆராய்ந்து அவர்களுக்குள்ள தொல்லைகளை நீக்கி வைக்க நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

**கேள்வி:** வவுனியாவிலிருந்து வருவோருக்கு கொழும்பில் 2 கிழமை வரைதான் தங்க அனுமதிக்கப்படுவதாகவும், அவர்கள் தொடர்ந்து இருக்க அனுமதி மறுக்கப்படுவதாகவும் முறைப்படுகிறார்களே?

**பதில்:** இரண்டு கிழமை என்று ஒரு வரையறை போடப்படவில்லை. அது அவர்கள் கொழும்புக்கு வரும் காரணத்தைப் பொறுத்து மாறுபடும். அவர்கள் கொழும்புக்கு வருவதற்கான காரணம் கேட்கப்பட்டு அவ் விடயத்தை முடிப்பதற்கான காலத்தை மதிப்பிட்டே அனுமதிகள் வழங்கப்படுகின்றன. பாஸ்போட் எடுப்பது போன்ற காரணங்களுக்கு குறுகியகாலம் போதுமாக இருக்கும். அதேவேளை மருத்துவப் பரிசோதனை போன்றவற்றிற்கு அதிக நாட்கள் தங்கவேண்டியிருக்கும். படிப்பு போன்றவற்றுக்கு நீண்ட நாட்கள் தங்கியிருக்கவேண்டிய அவசியம் இருக்கும். இக் காரணங்களுக்கேற்றவாறு அவர்கள் கொழும்பில் தங்கியிருப்பதற்கான கால அனுமதியைத் தீர்மானித்து உரியவாறே வழங்குகிறார்கள்.

**கேள்வி:** கொழும்பு வருபவர்கள் தமக்குப் பிணையாக அங்கு ஒருவரை நிறுத்திவிட்டு வரவேண்டுமென்றும், வந்தவர் உரிய காலத்துக்குள்திரும்பாவிடில்பிணை நின்றவர் கேள்விக்குட்படுத்தப்படுவாரென்றும் கூறப்படுவது குறித்து என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** திரும்பிச் செல்லாததற்காக அப்படி யார்மீதும் நடவடிக்கை எடுத்ததாக முறைப்பாடுகள் எதுவுமில்லை. கொழும்பு வந்தவர் அனுமதிக்கப்பட்ட காலத்தைவிட அதிக நாள் நிற்க நேரிடின் அவர் இங்கு பதிந்துள்ள பொலீஸ் நிலையத்தில் காரணத்தை விளக்கி கால நீடிப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்வி:** ஆனால் கொழும்பு வருவதற்குப் பாஸ் பெற பல நாட்கள் சொல்கிறதென்கிறார்களே...?

**பதில்:** அங்கிருந்து வருபவர்கள் கொழும்பில் எங்கு தங்கப் போகிறார்களெனக் கூறவேண்டும். அவ் விபரத்தை வவுனியா பொலீஸார் சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த கொழும்பு பொலீஸாருக்கு அறிவிப்பார். அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளவர்களோடு தொடர்பு கொண்டு வவுனியாவில் இருந்து வருபவரைத் தங்கவைக்க அவர்கள் ஒப்புதல் தருகிறார்களா என்றறிந்து அதனை வவுனியாவிற்கு அறிவிப்பர். சம்மதம் கிடைத்தபின் விண்ணப்பதாரிகளுக்கு கொழும்பு செல்ல அனுமதியளிக்கப்படும். இவ்வாறுவிசாரித்தறிவதற்குசில நாட்கள் செல்லலாம். அதுதான் இத் தாமதத்திற்குக் காரணம்.

**கேள்வி:** தொல்லை தவிர்ப்புக் குழுவின் நோக்கங்களென்ன?

**எமக்கு இதுவரை 284 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றையெல்லாம் தீர்க்குமுகமாக விசாரணைகளை நடத்தி, சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில்:** இது பிரதானமாக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களைக் களையவே அமைக்கப்பட்ட கமிட்டி. நாட்டின் பாதுகாப்பு நிலைமை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டங்கள் நடைமுறைகளால் சாதாரண தமிழ் மக்கள் தொல்லைக்குள்ளாகாமல் பார்த்துக்கொள்வதையும் அவ்வாறு ஏதும் நிகழ்ந்தால் அவற்றிலிருந்து சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்கவும், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கவுமென இக்கமிட்டி உருவாக்கப்பட்டது.

**கேள்வி:** இக் கமிட்டிக்கு தமிழ் மக்கள் தங்களுக்கு ஏற்படும் தொல்லைகள் குறித்த முறைப்பாடுகளை எடுத்து வருவது எவ்வளவு தூரம் சாத்தியமாக உள்ளது?

**தற்போது எமது நடவடிக்கைகள் பற்றி மக்களுக்கு அதிக அளவில் தெரிய வருவதால் தமிழ் மக்கள் இனிவரும் காலத்தில் தங்கள் முறைப்பாடுகளைத் தயக்கமின்றி எமக்குத் தெரிவிக்க முன்வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.**

**பதில்:** 284 முறைப்பாடுகள் வந்துள்ளனவே!

**கேள்வி:** தொல்லைக்குள்ளாகியிருக்கக்கூடிய தமிழ்மக்களின் தொகை ஒன்றேகால் வருடத்தில் 284 என்பதைவிட பல மடங்கு அதிகமல்லவா?

**பதில்:** அவர்கள் தமது முறைப்பாடுகளை வழங்குவதில் எந்த வித தடையும் இல்லை. நாம் அதற்கான சகல வசதிகளையும் செய்துள்ளோம். அவர்கள் நேரடியாகவும் முறையிடலாம். அல்லது தமது பாராளுமன்ற உறுப்பினர்களூடாகவும் முறையிடலாம். அவர்களும் இக் கமிட்டியின் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

இக் கமிட்டி பற்றி பொதுமக்களுக்கு அதிக அளவு தெளிவும் அறிமுகமும் இல்லாதிருந்திருக்கலாம். ஆனால் தற்போது எமது நடவடிக்கைகள் பற்றி மக்களுக்கு அதிக அளவில் தெரிய வருவதால் தமிழ் மக்கள் இனிவரும் காலத்தில் தங்கள் முறைப்பாடுகளை தயக்கமின்றி எமக்குத் தெரிவிக்க முன்வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி:** உங்கள் கமிட்டி, மக்கள் தொடர்புக்கான என்ன ஏற்பாடுகளைச் செய்துள்ளது?

**பதில்:** பொதுமக்கள் தொடர்பு கொள்ள காரியாலயம் ஒன்றை அமைத்துள்ளோம். அது **154, காலி வீதி, கொழும்பு -3** என்ற முகவரியில் அமைந்துள்ளது. பொதுமக்கள் அங்கு நேரடியாகச் செல்லலாம். அல்லது ***342887*** என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம். முறைப்பாடுகளை ஃபக்ஸ் மூலமும் ***342995, 333716*** ஆகிய இலக்கங்களுடாக அனுப்பி வைக்கலாம்.



**கேள்வி:** தமிழ் மக்களோடான பரிபாஷைக்கான மொழி குறித்து என்னஏற்பாடு செய்துள்ளீர்கள்?

**பதில்:** மொழிப் பிரச்சினை எழாது. எந்த மொழியிலும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். கடிதம் எழுதலாம். தமிழ் மொழியில் செயலாற்றக் கூடியவர்கள் உள்ளார்கள். அங்கு செயலாளராக இருப்பவரும் அத்தகையஒருவரே.

**கேள்வி:** கொழும்பைத் தவிர திருமலை, மட்டக்களப்பு, மலையகம் போன்ற ஏனைய பிரதேசங்களது பிரச்சினைகளையும் கையாளுவீர்களா?

**பதில்:** இது நாடுபூராவும் செயற்படும்.

**கேள்வி:** அதற்கு எந்த அளவு அதிகாரம் வாய்ந்ததாக இக் கமிட்டி உள்ளது? பாதுகாப்புப் படையினரின்நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய தொல்லைகளை யிட்டு நடவடிக்கை எடுக்க உங்களுக்கு அதிகாரம் இருக்கிறதா?

## பொலீஸ் பதிவு தொடர்பாக ஒரேவிதமான நடைமுறையைக் கடைப்பிடிக்கும்படி சகல பொலீஸ் உயர் அதிகாரிகளுக்கும் பொலீஸ் தலைமைச் செயலகம் அனுப்பியுள்ள சுற்றறிக்கை (இல:1455/99)

1) வீட்டு உரிமையாளர்கள் தற்காலிக குடியிருப்பாளர்களைப் பொலீஸில் பதிவு செய்வதில் பொலீஸ் நிலையங்களில் பலவேறுபட்ட முறைகள் கையாளப்படுவதாகவும் அவை பொதுமக்களுக்கு தொல்லை விளைவிப்பதாகவும் பொலீஸ் தலைமையகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) அதனால் தற்காலிக குடியிருப்பாளர்களைப் பதிவதில் ஒரேவிதமான பதிவு முறை கடைப்பிடிக்கப்படுவது அவசியமாகிறது. இதன்பின் சகல பொலீஸ் நிலையங்களும் பதிவுக்கான விண்ணப்பங்களைப் பெறும்போது பின்வரும் நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**குறிப்பு:** கொழும்பிலும் மற்றைய இடங்களிலும் வசிக்கும் நிரந்தர குடியிருப்பாளர்கள் பதியவேண்டிய அவசியமில்லை. **'வீட்டு உரிமையாளர்கள்'** என்ற பதம் - வாடகை வீடொன்றின் குடியிருப்பாளர்கள் உட்பட லொட்ஜ்கள், ஹொட்டேல்களின் முகாமையாளர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய, வதிவிடங்களின் பிரதான குடியிருப்பாளர்களைக் குறிக்கும்.

3) பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள பதிவுப் பத்திரம் பயன்படுத்தப் படவேண்டும். அவை வீட்டு உரிமையாளரால் நிரப்பப்பட்டு, பிரதியெடுக்கப்பட்டு, அதற்கான பதிவு இலக்கமொன்றும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

4) பதிவுப் பத்திரத்துடன் அடையாளப் படுத்தும் ஆவணங்களான தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இம் மூல ஆவணங்களுடன் அவற்றின் ஃபோட்டோஸ்டெட் பிரதியொன்றும் கையளிக்கப்படல் வேண்டும். இந்தப் ஃபோட்டோஸ்டெட் பிரதியும், பதிவுப் படிவமும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வசம் இருக்க, அடையளப்படுத்தும் மூல ஆவணங்களும் (அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு) பதிவுப் பத்திரத்தின் பிரதியும் வீட்டு உரிமையாளரிடம் திருப்பியளிக்கப்பட வேண்டும்.

5) தற்காலிக குடியிருப்பாளராக வருகை தந்தவரின் அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டுகளிலுள்ள புகைப் படங்கள் அவர்களது தற்போதைய தோற்றத்தை ஒத்திரா விட்டால் அல்லது அவை பழுதடைந்திருந்தால் வீட்டு உரிமையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட (மூன்று மாதத்திற்குள் எடுக்கப்பட்ட) இரு புகைப்படங்கள் பதிவுப் பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

6) இல. 5ல் குறிப்பிடப்பட்ட சூழ்நிலையில், ஒரு புகைப்படம் மூலப் பதிவுப் பத்திரத்துடன் இணைக்கப்பட்டு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் வைத்துக் கொள்ளப்படவும் மற்றைய புகைப்படம் அவரால் பாவனைக்கு அதிகாரமளிக்கப் பட்டு பதிவுப் பத்திரப் பிரதியுடன் இணைக்கப்படவும் வேண்டும்.

7) இவ்வாறான புகைப்படங்கள் அறிவுறுத்தப்பட்டபடி இணைக்கப்படுதல், அவை துஷ்பிரயோகப்படுத்தப்படுவதைத் தடுக்கக் கூடியவண்ணம் முத்திரை குத்தப்படுதல் போன்ற முன்ஜாக்கிரதை நடவடிக்கைகளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நாட்டின் பாதுகாப்பு நிலைமை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டங்கள், நடைமுறைகளால் சாதாரண தமிழ் மக்கள் தொல்லைக்குள்ளாகாமல் பார்த்துக்கொள்வதையும் அவ்வாறு ஏதும் நிகழ்ந்தால் அவற்றிலிருந்து சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்கவும், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கவுமென இக்கமிட்டி உருவாக்கப்பட்டது.**

**பதில்:** இது ஜனாதிபதி கமிட்டி. சம்பந்தப்பட்ட எவரையும் நாம் விசாரிக்கலாம். அண்மையில் மட்டுநகர் சித்தாண்டி ஆலயத்தில் படையினரின் அத்துமீறல் தொடர்பான ஒரு முறைப்பாடு வந்தது. அதற்கு அப் பிராந்திய இராணுவ ஜெனரலை விளக்கம் கேட்டு அழைத்திருந்தோம்.

ஏன் இன்றைய (25.10.1999) கமிட்டிக்கு **டி.ஐ.ஜி. கொட்டகதெனிய** அழைக்கப்பட்டிருக்கிறார். உயர் பொலிஸ் அதிகாரிகளையெல்லாம் தேவைப்படும்போதுநாம்அழைத்து அவ்வப்போது அறிவுறுத்தல்களை வழங்கி வருகிறோம்.

**கேள்வி:** எத்தகைய அறிவுறுத்தல்களை வழங்குகிறீர்கள்?

**பதில்:** இன்றைய கூட்டத்தில் சகல பொலீஸ் நிலையங்களிலும் தமிழில் முறைப்பாடுகளை ஏற்பதற்கு ஏதுவாக தமிழ் தெரிந்த அதிகாரிகளை கடமையிலீடுபடுத்தும் படியான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதனையிட்ட சுற்றறிக்கையை பொலீஸ் மா அதிபர் உடனடியாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் விடுத்துள்ளார். அதுபோல் பொலீஸ் நிலையப் பதிவு நடவடிக்கைகளில் ஒரேவிதமான விதிமுறைகளை சகல பொலீஸ்நிலையங்களும் கடைப்பிடிக்கும்படியும் அறிவுறுத்தல்வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** சில பொலீஸ் நிலையங்களில் பதிவதற்கு புகைப்படம் தேவையென்று தெரிவிக்கப்படுகிறதே?

**பதில்:** புகைப்படம் வழங்கத் தேவையில்லை. அத்தாட்சிப்படுத்தும் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் உள்ள படம் பழுதுபட்டதாக, அல்லது காலாவதியாகி தற்போதய தோற்றத்திலிருந்து மாறுபட்டதாகக் காணப்பட்டால் மட்டுமே புகைப்படம் வழங்கக் கோரப்படலாம். இதையிட்டு பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அப்படியான நடைமுறை இனி இருக்காது.

**கேள்வி:** பொலீஸ் பதிவு தொடர்பான உங்கள் தெளிவான அறிவுறுத்தல் என்ன?

**பதில்:** ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். முதலில் எல்லோருமே பதிவு செய்யவேண்டுமென்ற விதி இல்லை. ஒரு பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலீஸ் பொறுப்பதிகாரி அவ்வாறு பதிய வேண்டுமென அப் பகுதியைச் சேர்ந்தவர்களைக் கோரினால் அவர்கள் பொலீஸ் நிலையங்களில் தங்கள் விபரங்களைப் பதிவு செய்ய வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பாகவே இப் பதிவு. ஆனால் நிரந்தரக் குடியிருப்பாளர்கள் பதிய வேண்டிய அவசியமில்லை. தற்காலிகக் குடியிருப்பாளர்களே பதிய வேண்டும்.

**கேள்வி:** நிரந்தர குடியிருப்பாளர்களென்பதை எப்படி வகையீடு செய்வது?

**பதில்:** அடையாள அட்டை கொழும்பைச் சேர்ந்ததாக இருந்தால், வாக்காளர் பதிவு கொழும்பிலிருந்தால், கொழும்பில் நிரந்தர வேலையிருந்தால்...

**கேள்வி:** தற்காலிக குடியிருப்பாளர்கள் பதிவதன் ஏனைய விதிமுறைகள்...?

**பதில்:** அவர்கள் தங்கியிருக்கும் பொலீஸ் நிலையப் பகுதியில் பதியும்படியான அறிவுறுத்தல் அமுலிலிருந்தால் பொலீஸ் நிலையத்திலிருந்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அதில் விபரங்களை நிரப்பி பதிவு செய்யலாம். பதிவு பற்றி வர்த்தமானி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதுவே விதிமுறை.

**கேள்வி:** பதிவுசெய்தவர்கள்சில பொலீஸ் நிலையங்களில் மீண்டும் மீண்டும் குறித்த தவணைகளில் பதிவைப் புதுப்பித்துக் கொள்ள கேட்கப்படுகிறார்களே?

**பதில்:** அப்படி ஒரு விதி இல்லை. பதிவு செய்த விபரங்களில் ஏதும் மாற்றம் ஏற்பட்டிருந்தால் மட்டுமே பதிவைப் புதுப்பிக்க வேண்டும். வன்னி போன்ற பிரதேசங்களிலிருந்து வந்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தகாலம் முடிந்துவிட்டால், அல்லது யாராவது புதிதாக வந்திருந்தால், போயிருந்தால் மட்டுமே புதுப்பிக்க வேண்டும். மாற்றமேதும் இல்லாவிட்டால் ஒருமுறை பதிந்தால் போதும்.

**கேள்வி:** பதிவுப்படிவத்தைசோதனைச் சாவடிகளில் காண்பிக்கத் தேவையில்லை என்ற அறிவுறுத்தல் கடைப்பிடிக்கப்படுகிறதா?

**பதில்:** இதுபற்றித் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்பின் கோரப்படுவதாக எந்த முறைப்பாடும் இல்லை. •

8) (வடக்கு கிழக்கிலிருந்து வருவோரைப் பொறுத்தவரை) செல்லுபடியாகக் கூடிய அடையாளப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லாதவர்கள் அவற்றுக்குப் பதிலாக அவர்கள் நிரந்தரமாக வசிக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படத்தை வழங்கிப் பதிவு செய்து கொள்ளலாம். வவுனியாவிலிருந்து வருபவர்களைப் பொறுத்தவரை தற்போது நடைமுறையிலுள்ள வழிமுறை தொடரும். தோட்டப் பகுதிகளிலிருந்து வருவோரைப் பொறுத்தவரையில் அவர்கள் நிரந்தரமாக வசிக்கும் தோட்டத்தின் சுப்பிரீன்டன்டனால் வழங்கப்படும் உறுதிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

9) சாதாரண சூழ்நிலையில், பதிவு கோரும் தற்காலிக குடியிருப்பாளர்கள், ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஏதேனும் காரணங்களுக்காக பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் கோரப்பட்டாலேயன்றி, பொலீஸ் நிலையத்துக்கு வருகைதர வேண்டியதில்லை.

10) முழுமைப்படுத்தப்பட்ட பதிவுப் பத்திரங்களைப் பாதுகாப்பது பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பொறுப்பாகும். ஏ1 பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் இக் கடமைகளை சப் இன்ஸ்பெக்டர் அல்லது அத் தரத்துக்கு மேற்பட்ட ஒரு சிரேஷ்ட அதிகாரிக்குப் பாரப்படுத்தலாம்.

11) ஒரு நாளில் விநியோகிக்கப்படக்கூடிய பதிவுப் பத்திரங்களின் தொகை குறித்து எவ்வித கட்டுப்பாடும் இல்லை. ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் எவ்விதத் தடையுமின்றி ஒவ்வோர் விண்ணப்பப் படிவம் வழங்கப்படல் வேண்டும்.

12) 14 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் - அவர்கள் அப் பிரதேசத்தில் தங்கப் போகும் காலம் எதுவாயினும் - பதிவு செய்துகொள்ள வேண்டும்.

13) தற்காலிக குடியிருப்பாளராக வருகை தந்தவர் திரும்பிச் செல்லுமிடத்து, அல்லது தங்கும் காலத்தை நீடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமிடத்து வீட்டு உரிமையாளர் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் பதிவுப் பத்திரத்தைக் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். (இதை அவர் கடிதம் மூலமும் செய்யலாம்)

14) 8ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலிருந்து வருவோர் கொழும்பில் உபயோகிக்க வாகனமெதையும் கொண்டுவந்திருப்பின் வாகனத்தின் இலக்கம், வகை, வகுப்பு பற்றிய தகவல்கள் பதிவுப் பத்திரத்தில் பதியப்படல் வேண்டும்.

15) மேற்பார்வை அதிகாரிகள் இவ் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்தி அவற்றின் அமுலாக்கத்தை ஒழுங்காகக் கண்காணிப்பர்.

**எச். எம். ஜி. பி. கொட்டகதெனிய**
**சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர்**
**(ஒப்பம்) பி. எல். வி. டி.. எஸ். கொடிதுவக்கு**
**பொலிஸ் மா அதிபர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகிஸ்தான் ?

**1947** ஆம் ஆண்டு வெள்ளைக்காரன் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்க முன்வந்தவுடனேயே முஹம்மட் அலி ஜின்னா அவர்கள் முஸ்லிம் மக்களுக்கான தனியான தேசம் ஒன்றைக் கோரி நின்றார். அன்று உருவானதுதான் பாகிஸ்தான். அலி ஜின்னா அவர்கள் அதன் தேசிய தந்தை என இன்றும் கௌரவிக்கப்படுகின்றார். பாகிஸ்தான் தனி நாடாக பிரகடனப்படுத்தப்பட்டு ஆளப்பட்டாலும் 1958 ஆம் ஆண்டுதான் ஜனாதிபதி மிஸ்ரா அவர்களின் தலைமையில் ஒரு உத்தியோகபூர்வ குடியரசாக உருவாகியது.

இந்தியாவிலிருந்து பிரிந்து சென்ற காரணத்தினாலேயே பாகிஸ்தான் இந்தியாவின் பரம எதிரி எனக் கருதப்படுகிறது. பாகிஸ்தானிய - இந்திய எல்லையில் இருக்கும் வனப்பு மிக்க காஷ்மீர் பிராந்தியம் உனக்கா எனக்கா என்ற பிரச்சினையில் இரு நாடுகளும் பாம்பும் கீரியும் போல் மூர்க்கமாகமோதிக் கொண்டன. பாகிஸ்தானில் யார் பதவிக்கு வந்தாலும் காஷ்மீர் எல்லைப் பிரச்சினையில் இந்தியாவோடு கடும் போக்குக் கொண்ட ஒருவரைத்தான் பாகிஸ்தானிய மக்கள் உண்மையான பாகிஸ்தானியனாகக் கருதினார்கள்.

கடந்த ஒக்டோபர் 12ம் திகதி மாலை பாகிஸ்தானிய இராணுவம் நவாஸ் ஷெரீபின் ஆட்சியைக் கவிழ்த்து இராணுவப் புரட்சியை செய்ததற்கும் இதே காஷ்மீர் பிரச்சினைதான் காரணம் என்பதுதான் பாகிஸ்தான் அரசியலின் அவலம்.

இராணுவப் புரட்சிக்கு உடனடிக் காரணம், பாகிஸ்தான் இராணுவக் கொமாண்டர் ஜெனரல் முஷாரஃபை நவாஸ் ஷெரீப் பதவி நீக்கம் செய்ததே என்று கூறப்படுகிறது. ஆனாலும் கடந்த இரு மாதங்களுக்கு முன் காஷ்மீர் எல்லையில் இருந்து பாகிஸ்தான் படைகளை வாபஸ் பெறும்படி நவாஸ் ஷெரீப் உத்தரவிட்டதிலிருந்தே பாகிஸ்தானிய இராணுவம் மிகவும் கொதிப்படைந்திருந்தது என்று கூறப்படுகிறது. பாகிஸ்தானிய மக்களிடையே நவாஸ் ஷெரிப் இந்தியாவின் முன்னால் மண்டியிட்டு எங்களை அவமானப்படுத்தி விட்டார் என்ற உணர்வு மேலோங்கி நின்றது. (இந்தியா அணுகுண்டை வெடிக்க வைத்ததற்குப் பதிலடியாக பாகிஸ்தானிய அணுகுண்டை வெடிக்க வைத்தபோது "நவாஸ் ஷெரீப்...! ஜிந்தாபாத்!" என கூக்குரலிட்ட அதே மக்கள்தான் இப்போது நவாஸ் ஷெரீஃபை துரோகி என்கின்றனர்).

ஜெனரல் முஷாரஃப் இலங்கை இராணுவத்தின் பொன்விழாக் கொண்டாத்திற்காக வந்துவிட்டுத் திரும்புகின்றபோது அவர் விமானத்திலிருக்கும் பொழுதே திடீரென பதவி நீக்கம் செய்யப்பட்டார். பிரதமர் நவாஸ் ஷெரீபின் இராணுவப் புலனாய்வப் பிரிவின் தலைவர் ஜெனரல் ஸியாவுடீனை புதிய இராணுவத் தளபதியாக்கி இராணுவத்தை கட்டுப்பாட்டுக்குள் வைக்க நவாஸ் ஷெரீப் முயன்றாலும் நிலைமை எல்லை மீறிப் போய்விட்டது. நாட்டிலிருந்து ஏனைய இராணுவ அதிகாரிகள் ஸியாவுடீனின் ஆணைக்கு அடிபணிய மறுத்தார்கள்.

நாட்டிலே நடப்பவற்றை வானத்திலிருந்தபடியே அறிந்துகொண்ட ஜெனரல் முஷாரஃப் தான் தரையிறங்கினால் என்ன நடக்கும் என ஊகித்துக் கொண்டாராகையால் விமானத்தைத் தரையிறக்காது சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக விமானத்தில் எரிபொருள் முடியும் வரை கராச்சி நகருக்கு மேலாக விமானத்தை சுழற்றிக் கொண்டே இருந்தார்.


ஜெனரல் முஷாரஃபை விமானத்தோடு கைது செய்து கடத்தி வருவதற்காக தனக்கு நம்பிக்கையான விமானப்படை பைலட்டுக்களோடு ஜெட் விமானங்களை நவாஸ் ஷெரிப் சிந்து மாகாணத்தில் தயார்ப்படுத்தி வைத்திருந்தாலும் கூட முஷாரஃபிற்கு நம்பிக்கையான இராணுவ அதிகாரிகள் இதை எப்படியோ மோந்து பிடித்து விட்டதனால் அந்த ஜெட் விமானங்களுக்கு கட்டளைகள் பிறப்பிப்பதற்கு முன்னதாகவே நவாஸ் ஷெரீஃபை கைது செய்து காவலில் வைத்தார்கள்.

பாகிஸ்தானில் பிரதான பத்திரிகைக் காரியாலயங்கள். வானொலி நிலையங்கள், தொலைக்காட்சி நிலையம், தொலைத்தொடர்பு மையம், செல்போன் மையங்கள், இன்டர்நெட் மையம், விமான நிலையம், துறைமுகங்கள் என எல்லாமே மின்னல் வேகத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டன. தொலைக்காட்சிசேவைகள், வானொலிச் சேவைகள் அடித்து மூடப்பட்டன. ஒரு சில மணி நேரமாக பாகிஸ்தானில் என்னதான் நடக்கிறது என்பதை அந்நாட்டு மக்களால் தீர்மானிக்க முடியவில்லை.

நவாஸ் ஷெரீபின் குடும்ப அங்கத்தவர்கள் நண்பர்கள், ஆதரவாளர்கள், நெருக்கமான அரசாங்க அதிகாரிகள் சகலரும் சுற்றி வளைக்கப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

இவையனைத்தும் நடந்து கொண்டிருக்கும்போது இம்முழு இராணுவப் புரட்சியையும் வானத்தில் பறந்த வண்ணமே நடத்தி முடித்த ஜெனரல் முஷாரஃப் கராச்சி மீது பறந்து கொண்டிருந்த விமானத்தில் எரிபொருள் முடிவடைவதை அவதானித்தார். இறுதியாக சரியாக மாலை 6.30 மணிக்கு முஷாரஃப் வெற்றி நாயகனாக தரையிறங்கினார்.

சாரியாக இரவு பத்தேகால் மணிக்கு திடீரென பாகிஸ்தானிய தொலைக்காட்சி, வானொலி சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான சமிஞ்ஞைகள் (சிக்னல்) தெரிந்தன. பிரதம மந்திரி நவாஸ் ஷெரீப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக முதல் அறிவித்தல் விடுக்கப்பட்டது. அதன் பின் "கலவரமான 200 நிமிடங்களை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஐயூப் கான்

வானத்தில் கழித்து தரையிறங்கிய ஜெனரல் முஷாரஃப் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்'' என்ற செய்தி ஒலி, ஒளிபரப்பப்பட்டன.

13ம் திகதி காலை, அமைதியாக பாகிஸ்தானில் பொழுது புலர்ந்தது. ஒரு துளி இரத்தமேனும் சிந்தாமல் இராணுவப் புரட்சி மூலம் அதிகாரம் கைமாறியதைக் கண்டு முழு உலகமும் வாய்பிளந்து நின்றது.

ஆனால் பாகிஸ்தானிய மக்களுக்கும் பாகிஸ்தானிய இராணுவத்திற்கும் இது ஒன்றும் புதுமையான விடயம் அல்ல. பாகிஸ்தான் இதுபோல் எத்தனையோ இராணுவப் புரட்சிகளைக் கண்டுவிட்டது. பாகிஸ்தானிய இராணுவத்தினரும் சதிப் புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் வல்லவர்கள். எதை எப்படிச் எப்படி செய்ய வேண்டும் என்பதை அவர்கள் அனுபவத்தின் மூலமே அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே புரட்சி என்பது கச்சான் கடலை சாப்பிட்டுவிட்டு கோது வீசுவது போல் அவர்களுக்கு இலகுவானது என்கிறார் பாகிஸ்தானில் இருக்கும் ஒரு அரசியல் அவதானி.

1958ல் பதவியில் இருந்த பிரதம மந்திரி **லியாகத் அலி கான்** என்பவர் திடீரென படுகொலை செய்யப்பட்டார். அப்போதிருந்த இராணுவக் கமாண்டர் ஜெனரல் **முஹம்மட் ஐயூப் கான்** புரட்சி மூலம் பதவியைக் கைப்பற்றி இராணுவச் சட்டத்தை பிறப்பித்தார். அத்துடன் பிரதமர் பதவியை அதிகாரமிழக்கச் செய்து ஜனாபதி பதவியை அதிகாரத்துக்குக் கொண்டுவந்தார்.

ஐயூப் கானின் கடும் போக்கான ஆட்சியினால் நாடு பூராவும் மிக மோசமான கொதிப்பு நிலை காணப்பட்டதால் அவர் பதவி துறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். தனக்கு மிக நம்பிக்கையான அடுத்த இராணுவக் கமாண்டர் **யஹியா கான்** அவர்களிடம் பதவியை ஒப்படைத்தார். ஆனால் 1972 வரையே யஹியா கானினால் பாகிஸ்தானை ஆள முடிந்தது. கிழக்குப் பாகிஸ்தான் பாகிஸ்தானிலிருந்து பிரிந்து பங்களாதேஷ் உருவானதால் யஹியா கான் பதவி துறக்க நேரிட்டது.

தற்காலிகமாக ஏற்பட்ட ஜனநாயக சூழலில் **சுல்பிகார் அலி பூட்டோ** புதிய ஜனாதிபதியாகப்



யஹியா கான்

பதவியேற்றார். ஆனால் 1977ல் அவர் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியானபோது எதிர்க் கட்சியினால் நாடெங்கும் பாரிய குழப்ப நிலை ஏற்படுத்தப்பட்டது. இக்குழப்ப நிலையைப் பாவித்து பதவியிலிருந்த இராணுவ கமாண்டர் **முஹம்மட் ஸியாவுல் ஹக்** அதிகாரத்தைக் கைப்பற்றினார். அவரது ஆட்சி 1988ல் அவரின் விபத்து மரணத்தோடு முடிவடைந்தது. ஜெனரல் ஸியா - உல் - ஹக் பாகிஸ்தான் விமானத்தில் பாகிஸ்தானுக்குள்ளேயே கராச்சிக்குப் பயணம் செய்யும்போது மாம்பழங்கள் கொண்ட பார்சல்களுக்குள் வைத்திருந்த வெடிகுண்டு வெடித்ததனால் கொல்லப்பட்டார். அதன் பின் மீண்டும் தேர்தல்கள் மூலம் பாகிஸ்தானில் அரசுகள் பதவிக்கு வந்தன.

முன்னாள் ஜனாதிபதி அலி பூட்டோவின் மகள் **பெனாஸிர் பூட்டோ** அவர்கள், இப்போது பதவி கவிழ்க்கப்பட்ட நவாஸ் ஷெரீஃப் போன்றோர் எல்லாம் தேர்தலில் பதவிக்கு வந்தவர்கள்தான். பெனாஸிர் பூட்டோ மீது நவாஸ் ஷெரீப் ஊழல் வழக்குகளைத் தொடுத்திருந்ததால் பெனாஸிர் பூட்டோ இப்போது லண்டனில் தங்கியிருக்கிறார். இராணுவ சதிப் புரட்சிக்கு பெனாசிர் கண்டனம் தெரிவித்திருந்தாலும் இந்நிலைமைக்கு நவாஸ் ஷெரீபின் மோசமான ஆட்சி முறையே காரணம் என அவர் குற்றஞ்சாட்டி இருக்கிறார். சில வேளை ஜெனரல் முஷாரஃப் பதவியை தன்னிடம் ஒப்படைக்கலாம் என்று பெனாஸிர் ஊகிக்கலாம்.

உண்மையில் நவாஸ் ஷெரீப் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் கடந்த இரண்டு வருட காலமாக தன்னைச் சூழ சகல அதிகாரங்களையும் குவிக்க ஆரம்பித்தார். 1997ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் கொழுத்த பெரும்பான்மையோடு ஷெரிப் பதவிக்கு வந்தார். சில மாதங்களிலேயே, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபயை நீதிமன்றம் பதவியிலிருந்து இறக்க முடியாது என அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டு வந்தார்.

தன் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் சொல்ல முடியாத ஷெரீப் பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்தார். அதனைத் தொடர்ந்து இராணுவத்தோடு ஷெரீப் மோதினார். அந்த மோதலில் பாகிஸ்தானிய


அலி பூட்டோ

இராணுவத் தளபதி ஜெனரல் **ஜஹங்கீர் கராமத்** என்பவர் தானே முன்வந்து பதவி துறந்தார். அதன் பின் அவசர அவசரமாக நவாஸ் ஷெரீப் அடுத்தடுத்து தளபதிகளாக வரவிருந்த இரு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்குக் கீழாக இருந்த முஷாரஃப் அவர்களை இராணுவத் தளபதியாக பதவியுயர்த்தினார்.


இதனால் ஷெரீப் இரண்டு விடயங்களை எதிர்பார்த்தார். ஒன்று முஷாரஃப் தனக்கு நம்பிக்கையாகப் பணியாற்றுவார், இரண்டாவது அவர் திடீரென தகாத முறையில் பதவியுயர்த்தப்பட்டதால் இராணுவத்துள் அவருக்கு பெருத்த செல்வாக்கு இருக்காது, அவரால் சதிப் புரட்சிகளை மேற்கொள்ள முடியாது என்பதாகும். ஆனாலும் ஷெரீபினால் புரிந்து கொள்ள முடியாமற் போனது என்னவென்றால் யுத்தம், இராணுவத்தின் கௌரவம் என்றெல்லாம் வந்த பின் பாகிஸ்தான் இராணுவம் எப்படிச் செயற்படும் என்பதுதான்.

எப்படியோ இப்போது பாகிஸ்தானின் ஆட்சி இராணுவத்தின் கையில். சட்டத்தையும் ஒழுங்கையும் கட்டிக் காப்பதில் இராணுவம் வெற்றி காணலாம்.

ஆனால் ஒரு இராணுவ ஆட்சிக்கு எதிராக உலக நாடுகள் குறிப்பாக ஐரோப்பா அமெரிக்கா நாடுகள் மேற்கொள்ளப் போகும் பொருளாதாரத் தடைகளை எப்படி முஷாரஃப் முகம் கொடுக்கப் போகிறார் என்பதுதான் பாரிய கேள்வி.


இருந்தாலும் நீண்ட காலத்திற்கு பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நிலைத்திருக்கக் கூடிய சூழ்நிலை தற்போதைக்கு இல்லையென்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக இருக்கின்றது. ஆனால் பாகிஸ்தானிய மக்களின் மனோ நிலையைப் புரிந்து கொள்வது அவ்வளவு இலகுவானதல்ல. புதிதாக வந்திருக்கும் இந்திய பி.ஜே.பி. அரசு பாகிஸ்தான் தொடர்பாக எடுக்கின்ற நடவடிக்கைகளால் பாகிஸ்தானியரின் ரோச நரம்புகள் சீண்டிவிடப்பட்டால் இந்தியாவுக்கு பதிலடி கொடுப்பதற்காக பாகிஸ்தானிய மக்கள் ஜெனரல் முஷாரஃபையே தம் மானத்தைக் காக்கும் தலைவனாக ஏற்றுக்கொள்ளும் கண்மூடித்தனமான நிலைமைக்குப் போகலாம். யார் கண்டார்கள்!

– கா. கீதாஞ்சலி


ஸியா உல் - ஹக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊன்று கோலால் உணரும் உலகு

உயிர்களின் பிறப்பை இறைவனே தீர்மானிக்கிறார் என்பது ஓர் ஆன்மீக ரீதியான நம்பிக்கையாகும். ஒவ்வொரு ஜீவராசியும் இவ் உலகில் ஜனனித்து இப்படித்தான் வாழ வேண்டும் என்பதையும் அவர் முன்பே முடிவாக்கி இருக்கிறார் என்பதந்த நம்பிக்கை.

மனித ஜனனிப்பும் இவ்வகையில் அடங்கும். பிறக்கும் போது யாவருமே அங்கவியல் ரீதியில் பூரணத்துவமுள்ளவர்களாகப் பிறந்து விடுவதில்லை. வலுவிழப்பு என்பது பிறக்கும் போதே சிலருடன் ஒட்டிக் கொள்கிறது. வேறுசிலர் வந்து பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கையில் வலு இழப்புக்கு உள்ளாகிறார்கள்.

வலுவிழப்பு என்பது பலவேறு வகைப்பட்டதாகஇருக்கலாம்.கை, கால் பாதிப்போ, செவிப்புல, விழிப் புலஇழப்போஅல்லதுமனோநிலை பாதிப்பாகவோ இருக்கலாம். இவ்வகையான பாதிப்புடையவர்களும் இச் சமூகத்தில் தம் வாழ்க்கைப் பயணத்தை தொடரத்தான் வேண்டியுள்ளது.

இவ்வகையில் விழிப்புல வலுவிழந்தவர்களும் இங்கே வாழ்கிறார்கள். அவர்களுக்கு அனுசரணையாக பலவேறுபட்ட காரணிகள் துணை நிற்கின்றன. அவற்றைத் துணை கொண்டு தம் வாழ்வில் முன்னேற்றமடைய அவர்களால் முடிகிறது.

முன்னைய நிலையை விட தற்போதுள்ள விழிப்புல வலுவிழந்தோரின் நிலை மேம்பட்டுள்ளது என்பது வெளிப்படை. இவர்களோடு தொடர்புபட்ட பிரத்தியேகமானபல விடயங்களை சமூகம் ஓரளவு அறியத் தலைப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இவ்வகையில் அவர்கள் கையாண்டு வருகின்ற வெள்ளைப் பிரம்பு பற்றி சில கருத்துக்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

Royal National Institute for the Blind

RNIB

challenging blindness

வெள்ளைப் பிரம்பு என்பது பார்வைக்குறைபாடுஉடையோரின் ஓர் அடையாளச் சின்னம். இப்பிரம்பில் அதீத சக்தியோ, தன்னிச்சையான செயல்திறனோ இல்லை. இதைத் தாங்கி வருகின்ற நபர் விழிப்புலன் அற்றவர் என்ற அறிதலை ஏனையோரிடத்தே ஏற்படுத்தத் துணை செய்கின்றது.

விழிப்புலனற்றவர்களுக்கு உதவும் சேவை மனப்பாங்கை சமூகத்தில் வளர்க்கவும் அவர்களுக்கு உதவவும், சர்வதேசரீதியில் ஒக்ரோபர் 15ம் திகதி வெள்ளைப் பிரம்புத் தினமாக கொண்டாடப்படுகின்றது.

வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்படுவதற்கு ஆரம்ப கர்த்தாவாக இருந்தவர் **லயன் ஜோர்ஜ் பென்ஹம்** ஆவார். இவர் 1930ம் ஆண்டு அமெரிக்க கரிகோனா மாநிலத்தில் அரிமாக் கழக தலைவராக இருந்தபோது வெள்ளைப் பிரம்பை விழிப்புலனற்றோர் சின்னமாக அறிமுகம் செய்தார்.

சாதாரண முதியவர்கள் உபயோகிக்கின்ற கைத்தடியை விட (ஊன்றுகோல்), விழிப்புலனற்றோர் பாவிப்பது வேறுபட்டிருப்பது சிறப்புக்குரியது என கருதிய இவர் வெண்ணிற கோலின் அடிப்பாகத்தை சிவப்பு வர்ணத்தால் இணைத்து இப்பிரம்பை அறிமுகம் செய்தார். இதன் பின்னர் இத்தகைய பிரம்பை தாங்கி வருபவர் விழிப்புல வலுவிழந்தவர் என்பதை ஏனையோர் இனங்கண்டு கொள்ள இலகுவாக இருந்தது.

வெள்ளைப் பிரம்பைத் தாங்கி வருபவர் விழிப்புல வலுவிழந்தவர் என்று அறிந்தால் மட்டும் போதாது அவர் வீதியில் பயணிக்கும் போது தடைகள் ஏற்படுத்துவதை தவிர்ப்பதன் ஊடாகவோ, வாகனச் சாரதிகள் அவர்களை கவனித்து அவர்களுக்கு அனுசரணையாக நடப்பதன் மூலமாகவோ உதவலாம். தெருக்களை அவர்கள் கடக்கும் போது உதவி செய்யலாம். பொதுப் போக்குவரத்து சாதனங்களில் பயணிக்கும் போது அவர்கள் செல்ல விரும்பும் இடத்துக்கு செல்ல உதவலாம். பாடசாலை, சமூக மட்டத்தில் வெள்ளைப் பிரம்பைக் கௌரவிக்கும் போதனையை ஊட்டலாம்.

இப்பிரம்புபற்றியபூரண அறிவை சமூகத்தில் அனைத்துத் தரப்பினரும் அறிந்திருப்பது பொருத்தமானதாகும். அதுமட்டுமன்றி வலுவிழப்பு ஏற்பட்டுவிட்டதே என்பதற்காக அத்தகையோரை சமுதாயத்தில் இருந்து வேறுபடுத்திப் பார்ப்பதும், தாம் வேறு, சமூகம் வேறு என்ற தன்மையை அறிந்தோ அறியாமலோ அவர்கள் மனதில் ஊட்டுவதும் தவறாகும்.

இத்தகைய மன எண்ணம் தோற்றம் பெறுமாயின் அவர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுவதோடு மனோநிலையும் தளர்வுறும். இத்தகைய பாதிப்புகள் அவர்கள் மனதில் எழாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது பொறுப்பு மிக்க சமூகப் பிரஜை ஒவ்வொருவரினதும் தார்மீகக் கடமையாகும்.

**- கனகலிங்கம் தர்மசேகரம்**
**முகமாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# புத்திஜீவிகள்

துரை சுப்பிரமணியன்

அப்பு, அன்று காலையே அடுத்த நாள் கூட்டத்திற்கு தயாராகிவிடுவதற்காக, தனது வேட்டி, சால்வையை நீலம் போட்டு வெள்ளையாகத் தோய்த்துவைத்தார். அடுத்தநாள் விடிய கூட்டத்திற்குப் போவதற்கு முன்பு முகச்சவரம் செய்வதற்காக ஒரு பிளேட்டையும் வாங்கி வந்து வைத்தார்.

"வெங்காய உற்பத்தியும், உற்பத்தி செய்த வெங்காயத்தைக் கொழும்புக்கு அனுப்புதலும்"

இதுதானம் நாளைய கூட்டத்திலை அரசாங்க அதிபர் அவர்களும் கொழும்பிலை இருந்து வந்த பெரிய அதிகாரியும் பேசப்போற விடயமென்று அப்பு சொன்னார்.

அடுத்த நாள் காலை செக்கலோடு எழும்பிய அப்பு, முகச்சவரம் செய்து கொண்டு, குளித்த பின் அடுத்த தோட்டத்துச் சொந்தக்காரனாகிய சின்னத்துரையையும் ஒன்பதுமணிபோல் கூட்டத்திற்குப் போக வரச் சொல்லிவிட்டு, வந்து கோப்பியைக் குடித்தார்.

சரியாக ஒன்பது மணி போல அப்பு தனது தோய்த்து நீலம் போட்ட வேட்டியை கட்டி தோளில் சால்வையையும் போட்டுக் கொண்டு சின்னத்துரையையும் கூட்டிக் கொண்டு மகாவித்தியாலய வளவிற்குப் போனார்.

கூட்டம் சரியாக பத்து மணிக்கு ஆரம்பமானது.

வெங்காயச் செய்கை பற்றி கொழும்பிலிருந்து வந்த அதிகாரி என்ன சொல்லப் போறார் என்று அறிய அப்பு மிகவும் ஆவலாக இருந்தார்.

முதலில் அரசாங்க அதிபர்தான் எழுந்து நின்று தனது கண்ணாடியை துடைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார். மாலை அணிவிக்கப்பட்டது. கைதட்டல்கள் மண்டபத்தை அதிரவைத்தன.

"விவசாயிகளாகிய நீங்கள் படும் கஷ்டம் நான் அறியாததல்ல. நீங்கள் சேற்றில் கால் பதித்தால் தான் நாங்கள் சோற்றுக்குள் கை வைக்க முடியும். உங்களின் பெறுமதியை இந்த நாடும் நாமும் அறிவோம்....

இங்கிருந்து உங்கள் உற்பத்திப் பொருளான வெங்காயத்தைக் கப்பலில் அனுப்பி வைக்க நானும் கொழும்பிலிருந்து வந்திருக்கும் அதிகாரி அவர்களும் கட்டாயம் நடவடிக்கை எடுப்போம். உங்களது நீண்ட நாள் கனவு வெகு விரைவில் நனவாகும் என்று உறுதி கூறிக் கொண்டு கொழும்பிலிருந்து வந்த அதிகாரி அவர்களையும் இங்கு பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்...

அரசியல்வாதிகள் பாணியில் தமிழில் ஒரு "வணக்கம்" சொல்லி விட்டு அந்த அதிகாரி சிங்களத்தில் பேசினார். அவருக்குப் பல தோட்டக்காரர்கள் மாலை போட்டு அவரின் கைகளையும் பிடித்துக் கொஞ்சினார்கள்.

"நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல் நாம் உங்களுக்கு எதிரானவர்கள் அல்ல. அரச அதிபர் அவர்கள் சொன்னது போல இம் மாகாணத்து விவசாயிகளின் கடும் உழைப்பையும் பெறுமதியையும் நாம் நன்கு அறிவோம்.

இம்முறை நீங்கள் வேண்டிய அளவு வெங்காயத்தைப் பயிரிடுங்கள். அவ்வளவு வெங்காயத்தையும் கொழும்பிற்குக் கப்பல் மூலம் அனுப்பி வைக்க நாம் கட்டாயம் நடவடிக்கை எடுப்போமென்று இம்மேடையில் நான் உறுதிஅளிக்கின்றேன்...." என்று அந்த அதிகாரி சொன்னபோது கரகோஷம் அடங்க சில நிமிடம் எடுத்தது.

"எமக்கெல்லாம் விடிவு காலம் வரத்தான் போகுது" என்றாற் போல அங்கிருந்த தோட்டக்காரர்களுக்கெல்லாம் மனம் குளிர்ந்தது. "...ச்சா... இவரல்லவோ அதிகாரி" என்பது போல ஆட்களை ஆட்கள் பார்த்துக் கொண்டார்கள். அவர்களின் முகமும் அகமும் மலர்ந்திருந்தன.

"உங்களுக்குள்ள பிரச்சினைகளைச் சொல்லவேண்டுமென்றால் இந்த மேடையில் மனம் திறந்து சொல்லலாம்" என்று அந்த அதிகாரி சொல்லிவிட்டு அரசாங்க அதிபரை ஒரு தடவை பார்த்துக் கொண்டார். ஆமோதிப்பது போல் அரசாங்க அதிபரும் தலையை ஆட்டினார்.

"எங்களுக்கு உரம் வேண்டும்"

"எங்களுக்கு குறைந்த வட்டியிலும் நீண்ட தவணை முறையிலும் கடன் வேணும்"

இன்னும் எத்தனை எத்தனையோ எல்லாம் தோட்டக்காரர்கள் விழுந்தடித்துக்கொண்டு மேடை ஏறிச் சொன்னார்கள்.

00 00 00

அப்பு கூட்டம் முடிந்து வரும் பொழுதுஇரண்டு மணிக்கு மேலாகி விட்டது. அம்மா அப்பு வரும்வரை சாப்பிடாமல் காத்துக்கொண்டிருந்தாள்.

அப்பு அன்று முழுவதும் சந்தோஷமாக இருந்தார். கொழும்பு அதிகாரியும் அரசாங்க அதிபரும் சொன்னதை எல்லாம் மீண்டும் மீண்டும் அம்மாவுக்குச் சொல்லி சந்தோசப்பட்டார். இந்தமுறை எப்படியும் நூறு அந்தர் வெங்காய மாவது கப்பலில் கொழும்பிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று சொன்னார்.


அம்மாவின் தாலிக் கொடியை அடகு வைத்துத்தான் இந்த முறை வெங்காயச் செய்கையில் இறங்கினார் அப்பு.

அப்பு நினைத்ததைப் போல வெங்காயமும் இந்த முறை நல்ல விளைச்சல்தான். எல்லோருக்குமே நல்ல சந்தோஷம்.

எப்படியும் இந்த முறை வெங்காயத்திலை நல்ல இலாபம் வரும் என்று எல்லோரும் நம்பி இருந்தோம். நாம் எல்லோருமே அப்புவிற்கு உதவி செய்தோம். வீடு நிரம்பிய வெங்காயத்தைப் பார்க்க சந்தோஷமாக இருந்தது.

அப்பு சொன்னது போல், கொழும்பிலிருந்து வந்த அதிகாரியும் அரச அதிபரும் கூட்டத்தில் பேசியது, தோட்டக்காரர் ஒருவர் அந்த இருவருக்கும் மாலை போட்டதும் அடுத்த நாட் பேப்பரில் வந்தது. அப்பு அந்தப் பேப்பரை வாங்கி வாசித்து, சின்னத்துரைக்கும் வாசித்துக் காட்டிவிட்டு வெகு பக்குவமாகவும் பாதுகாப்பாகவும் பேப்பரை தனது ரங்குப் பெட்டியில் வைத்துக்கொண்டார்.

வெங்காயம் பிடி பிடியாய் கட்டி வீட்டுக்குள் பக்குவமாகக் கட்டித் தூக்கிவிடப்பட்டிருந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பு இப்போது அடிக்கடி மணியகாரன் கந்தோருக்கும், அரசாங்க அதிபர் கந்தோருக்கும் விதானையாரிடமும் போய் வந்தார்.

அப்புவின் முகத்தில் முந்திய சந்தோசம் இல்லை. இருப்பினும், உற்சாகமாகத்தான் காணப்பட்டார்.

அப்பு ஒவ்வொரு தடவையும் கச்சேரிக்குப் போய் வந்துவிட்டு, "எப்படியும் அடுத்த கப்பலுக்கு அனுப்பி வைப்பதாக அரசாங்க அதிபர் உறுதி கூறுகிறார்" என்று சொல்லுவார்.

00 00 00 00

வீடு வேய்ச்சல் முறையும் வந்தது. அப்புவின் கையில் கிடுகு வாங்கக் கூட காசு இருக்கவில்லை. வீட்டை அண்ணாந்து பார்த்துவிட்டு பெருமூச்சு விடுவார் அப்பு.

மழை வருவது போல மேகம் கருக் கட்டினால் அப்புவின் முகமும் அம்மாவின் முகமும் கூடக் கறுத்துச் சோர்ந்து போய்விடும்.

வெங்காயத்தைக் கப்பலில் ஏற்றும் வரை மழை வரக்கூடாது என்று அம்மா எல்லாக் கோயில்களுக்கும் நேர்த்திக் கடன் வைத்தாள். அருகிலுள்ள வைரவருக்கு வடை மாலை சார்த்துவதாகவும் வாக்களித்தாள்.

அம்மாவின் கையில் ஒரு சோடி காப்பு மட்டும் மிகுதியாக இருந்தது. அதில் ஒரு காப்பை விற்றுப் போட்டு வீடு வேயலாம் என்று அம்மா சொன்னபொழுது அப்புவுக்கு மனமில்லாமல் இருந்தது. பார்த்துச் செய்யலாமென அப்பு சொன்னார். ஆனால் அன்று இரவே மழை இடி முழக்கத்தோடு வந்தது.

அப்பு பழங் கிடுகுகளை எடுத்து கூரையில் கிடுகுகள் உக்கிப்போன இடங்களுக்கு எறிந்து ஒழுக்கை ஓரளவாவது கட்டுப்படுத்த முயன்றார். அம்மாவும் நானும் ஓடி ஓடி கிடுகுகளை எடுத்து வந்து அப்புவிடம் கொடுத்தோம். மழைத் துமியில் நனைந்ததால் எனக்கு தலையிடி காய்ச்சலும் வந்தது.

எங்களின் பிரார்த்தனைகள் அத்தனையும் வீணாகிப் போயின. "கண் கெட்ட கடவுள் எங்களுக்குத்தான் இந்தச் சோதனையை விடுகுது" - அம்மா மனம் நொந்து கொண்டாள்.

காற்றோடு மழை மிக வேகமாய் பெய்ததால் வெங்காயப் பிடிகள் எல்லாமே நனைந்துவிட்டன. இரண்டொரு தினங்களில் எல்லா வெங்காயப் பிடிகளுமே அழுகி மணக்கத் தொடங்கின.




இனி வெங்காயத்தை கொழும்பிற்கு அனுப்பவே முடியாது. அப்பு விதானையாரைக் கூட்டி வந்து வெங்காயத்தைக் காட்டினார்.

நிலைமைகளை விளக்கி தனக்கூடாக அரச அதிபருக்கு ஒரு கடிதம் எழுதித் தரும்படியும் தான் நஷ்ட ஈட்டுக்குச் சிபாரிசு செய்வதாகவும் அவர் சொன்னார்.

நட்ட ஈட்டுக்கான மனுவை எழுதிக்கொண்டு விதானையாரிடம் இரண்டு மூன்று நாள் திரிந்து கையெழுத்து வாங்கிக் கொண்டு அரச அதிபரைச் சந்திக்கச் சென்றார் அப்பு. முக்கிய வேலையாக தான் கொழும்பிற்குப் போவதாகவும் பத்து நாள் கழித்து வரும்படியும் சொல்லி அனுப்பினாராம் அரச அதிபர்.

அப்புவிற்கு இப்பொழுது மனம் நன்றாகத் தளர்ந்து விட்டது.

பத்து நாள் கழித்து அப்பு கச்சேரிக்குப் போனார். அப்பு கச்சேரிக்கு அரச அதிபரைக் காணச் சென்ற பொழுது யாரோ பாராளுமன்ற உறுப்பினரும் அரச அதிபரோடு கதைத்துக் கொண்டிருந்தாராம்.

அடுத்த முறை அரச அதிபர் கொழும்பிற்கு போகும் பொழுது, அப்புவும் கொழும்பிற்கு வந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கதைத்து உழவு யந்திரமொன்று வட்டி குறைந்த கடன் அடிப்படையில் வாங்குவதற்கு உதவி செய்யலாமென்று இருவரும் சொன்னார்களாம்.

படித்தவர்கள் ஏமாற்ற மாட்டார்கள் என்று இன்னமும் நம்பிய அப்பு, அம்மாவிடம் மிகுதியாக இருந்த காப்பு இரண்டையும் விற்று, வீடு வேயாமலே அந்தக் காசைக் கொண்டு கொழும்பிற்குப் புறப்பட்டுப் போனார்.

தனது விடயத்தைப் பற்றிக் கதைத்த பொழுது இருவரும் நன்றாக வாய்விட்டுச் சிரித்தார்களாம். அப்பு சொன்னார்.

புண்ணின் வலியும் கொதிப்பும் அப்புவுக்குத்தானே தெரியும். அவரால் வாய்விட்டுச் சிரிக்க முடியுமா? நட்டம் அப்புவிற்குத் தானே. அதிகாரிகளின் "பட்டா" விற்கு நட்டம் வரப்போவதில்லையே.

00 00 00 00

அப்பு கொழும்பிற்குப் போய் இரண்டு கிழமைகளாக கடிதம் ஒன்றும் வரவில்லை. அம்மாவும் நானும் காகிதக்காரனை கடிதத்தைப் பற்றி நெடுகக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

ஒரு மாதத்திற்குப் பின் ஒரு கடிதம் போட்டிருந்தார். லொட்ஜ் ஒன்றில் பாயில்தான் படுப்பதாகவும் கையில் உள்ள பணத்தை மிகவும் கவனமாகத்தான் செலவு செய்வதாகவும் எழுதியிருந்தார்.

மேலும் அரசாங்க அதிபர், தான் எல்லா விசயங்களையும் எம்.பி. யிடம் கூறியுள்ளதாகவும் அவர் வங்கியில கடன் பெற உதவி செய்வாரென்றும் கடனைப் பெற்றுவிட்டால் உழவு யந்திரத்தை வாங்கி கப்பலில் போட்டுவிட்டு தான் உடனடியாக வந்துவிடுவதாகவும் எழுதியிருந்தார்.

கடிதத்தை வாசிக்க எனக்கு நல்ல சந்தோசமாக இருந்தது.

"எங்களுக்கு உழவு யந்திரம் கப்பலில் வரும்" என்று எனது சிநேகிதர்களுக்கெல்லாம் சொன்னேன். அவங்களும் அடிக்கடி "கப்பல் எப்ப வரும்? உழவு யந்திரம் எப்ப வரும்?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான் அப்பு வரும்வரை பள்ளிக்கூடத்துக்குப் போவதையும் அவர்களோடு கதைப்பதையும் இயன்றவரை தவிர்த்துக் கொண்டேன்.

00 00 00 00

அப்பு திடீரென்று ஒரு நாள் சாயந்திரம் வந்து இறங்கினார்.

அம்மாவையும் என்னையும் கண்டதும் அப்புவிற்கு சொண்டுகள் துடித்து விம்மலோடு அழுகை வந்தது. அப்பு அழுததைப் பார்க்க எங்களுக்கும் அழுகை வந்தது.

"ஏமாற்றிப் போட்டாங்கள்.... புத்தியாய் நழுவிப் போட்டாங்கள்..." என்று விம்மல் அழுகைக்கிடையே சொன்னார். கடன் தாறதெண்டால் பொறுப்பு வேணுமாம்....

கிடக்கிற ஐந்து பரப்புக் காணியும் வீடும் பலாலியில்தான் இருக்கெண்டும் அதை வேணுமெண்டால் எழுதித் தரலாம் என்றும் தான் சொன்ன பொழுது அதை ஏற்றுக் கொள்ள முடியாதென்று சொன்னாங்களாம்.

அடுத்த நாட் காலை அப்பு ஆத்திரமும் ஆவேசமும் கொண்டவராகக் காணப்பட்டார். "நான் நட்ட ஈடு பெற்றே தீருவேன். இவங்களை கோட்டிலே ஏத்தியே தீருவேன்" என்று அப்பு, தான் றங்குப் பெட்டியில் பத்திரமாக வைத்திருந்த அந்தப் பேப்பரையும் கொண்டு புறப்பட்டார்.

அப்பு நேராக அப்புக்காத்து கந்தசாமியார் வீட்டுக்குத்தான் போய்க் கொண்டிருந்தார். தாக்கப்பட்ட ஆவேசங்கொண்ட வேங்கையின் சாயல் அவரில் இருந்ததைக் கண்டேன். அப்பு கட்டாயம் வெல்லுவார் எண்டு எனக்குத் தெரியும். •


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆ..! இயற்கை தந்த ஜில்..!

## *King Coconut!*

அது செவ்விளநீர்!

சாதாரண இளநீரும் தேங்காயோடு ஒப்பிடுகின்ற போது King தான்.

தென்னம் பூ பழமாக மாறி சுவை தரும். அதன் இனிய தண்ணீர் பல விதத்திலும் எமக்கு ஆரோக்கியத்தையும் உற்சாகத்தையும் தரும்.

இயற்கையின் அற்புத படைப்புகளில் ஒன்றுதான் இளநீரும்.

கொலரா, காய்ச்சல், வாந்திபேதி போன்றவற்றுக்கு நீராகாரமாய் மருத்துவர்கள் சிபார்சு செய்யும் இவ்விளநீரில் காபோவைதரேற்று, சிறிதளவு புரோட்டின், கொழுப்பு, விட்டமின் சி, கல்சியம், பொஸ்பரஸ் மற்றும் இரும்பு போன்ற தாதுப் பொருட்களும் அடங்கியுள்ளன.

அதிகாலையில் தேநீர் குடிப்பதற்குப் பதிலாக இளநீர் அருந்துவது உடம்பின் சூட்டைக் குறைக்க பெருமளவில் உதவும்.

கொழும்பு நகரில் பஸ் தரிப்பிடங்கள் தோறும் சிறு வண்டிகளை வைத்துக் கொண்டு இளநீர் விற்கும் வியாபாரிகளைக் கண்டிருப்போம்.

கொழும்புக்குக் கொண்டு வரப்படும் பல்லாயிரக்கணக்கான இளநீர் எந்த விளம்பரமுமின்றி ஒரே நாளில் விற்றுத் தீர்கின்றன.

கொழும்பின் சுற்றுப்புறத்தில் அநேகமாக இளநீர் விற்கும் இடங்களில் தோட்டப்புற தமிழ் இளைஞர்கள் கூலிக்கு வேலை செய்கிறார்கள். அத்தோடு சிங்கள, முஸ்லிம்களும் வேலை செய்கிறார்கள்.

சிலர் சொந்தமாகவே தொழிலைச் செய்கிறார்கள். சில முதலாளிமார் பலரைக் கூலிக்கு அமர்த்தியும் இவ் வியாபாரத்தைச் செய்கின்றனர்.

வசந்தன் என்ற இளைஞன் எங்களோடு சிங்களத்திலேயே கதைத்தான். 25 வயதுடைய அவன் வீட்டை விட்டு வந்து ஏழு வருடங்களாகின்றனவாம். ஒரு சின்னத் தகராறில் வீட்டை விட்டு வந்த நான் பல்வேறு தொழில்களையும் செய்துவிட்டு கடைசியில் இளநீர் வெட்டும் தொழிலில் சேர்ந்தேன். வேறு தொழில் சரியாக அமையாததினாலேயே இதனைத் தெரிந்தெடுத்தேன். ஏனைய இளைஞர்களைப் போன்று அழகாக உடுத்தி அலங்கரித்திருக்க எனக்கும் ஆசைதான். ஆனால் எனக்குக் கிடைக்கும் வருமானம் போதவில்லையே. வாழ்க்கை எந்நாளும் இந்தக் கோலத்திலேயே கழிகிறது என்றான். அழுக்கு சேட்... தொடர்ச்சியாக அதையே துவைத்து துவைத்து உடுத்திருப்பது தெரிந்தது.

சரியாக காலை ஆறரை ஏழுக்கு எமது வியாபாரம் ஆரம்பித்துவிடும். மாலை 7.00 மணியளவில் நிறைவுறும்.

எங்களுக்கு மேலதிகப் படியொன்றும் வழங்கப்படுவதில்லை. மண்டை உருகும் வெயிலில் காய வேண்டும். மழை காலங்களில் தெப்பமாய் நனைய வேண்டும்.

வெயிலின் கொடுமைக்கு கொஞ்சம் குளிராக நம்மிடமிருக்கும் இளநீரில் ஒன்றை வெட்டிக் குடிக்கவும் எங்களால் முடிவதில்லை. சரியாக எண்ணிக் கொடுத்த அளவிற்கு காசு கொடுக்க வேண்டும் என்றார் பாலு.


விற்பவர்களுக்கு கோடை காலங்களில்தான் கொள்ளை லாபம். மழை காலங்களில் விற்பனை மந்தமாகி விடுகிறது.

இளநீர் மரம் காய்க்கத் தொடங்கியவுடன் 2 வாரங்களுக்கொரு முறை குலை வெட்டலாம். எனவே இது எல்லாக் காலத்துக்கும் விற்பனை செய்யக்கூடியதொன்று.

நாம் வியாபாரிகளிடம் 4 - 5 ரூபா வரையில் கொடுத்து வாங்குவோம். 8 ரூபாவிற்கு விற்போம். நாங்களே சொந்தமாக ஓரிடத்தில் இருந்து இளநீர் வெட்டினால்தான் அதிக லாபம். அல்லாமல் கூலி கொடுத்துவிட்டால் எமக்கு எதுவும் மீதமில்லை என்றார் ருவண் என்பவர்.

'எங்களுக்கு ஒரு நாளைக்கு 200 ரூபா தருகின்றார்கள். அவ்வளவுதான். லீவு எடுக்க முடியாது. போயா விடுமுறை தினங்களிலும் வேலைதான்.

வருடத்துக்கொரு முறை வரும் பெருநாட் தினங்களில் வீடு போய் வருவேன். அது தவிர வீடு செல்வதும் இல்லை. இளநீர் குடிக்க வரும் பொதுமக்கள் நாங்கள் தான் இதன் சொந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்ல விலைக்கு வில்!

காரர்கள் என்று நினைத்து விலையைக் குறைத்துக் கேட்பார்கள். சுவையில்லாவிட்டால் ஏசுவார்கள். வீணாக காசைத் தந்துவிட்டதாகச் சொல்வார்கள்.

உள்ளே எப்படியிருக்குமென்று வெளிப் பார்வையில் எங்களாலும் சொல்ல முடியாதுதானே என்றார் சமன் என்பவர்.

சமனோடு பேசிக் கொண்டிருக்கும் போதே நம்மருகே குடித்துவிட்டு வீசிய இளநீர்க் கோம்பைகளை வெட்டி அதனுள்ளிருந்த வழுக்கையை வழித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவனை யாரென்று கேட்டேன்.

அவன் அதே தெருவில் செருப்புத் தைப்பவன். தினமும் இவனது காலையுணவு இது. அவன் மட்டுமல்ல அந்தத் தெருவில் செருப்புத் தைக்கும் பலரும் இப்படித்தான் காலையுணவை சமாளித்துக் கொள்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டோம்.

புறக்கோட்டைப் பகுதியில் தோட்டப்புற இளைஞர்களை சொற்ப அளவு கூலியில் வேலைக்கமர்த்தி லாபம் சம்பாதிக்கும் முதலாளிகளும் இருக்கிறார்கள்.

விநோத் என்ற பையனுக்கு மாதத்திற்கு 1000 ரூபாய்தான் கூலி கொடுக்கப்படுகிறது. மூன்று வேளை சாப்பாடும் தங்குமிடமும் இலவசம். சிறு வயதிலேயே குடும்பச் சுமையினால் ஏற்பட்ட விரக்தியில் வீட்டை விட்டுக் கிளம்பி இரண்டு வருடமாக கொழும்பில் அலைந்து திரிந்து இந்தத் தொழிலில் சேர்ந்தேன். எனது தாய், தந்தைக்குப் பாரமாய் இருக்கக்கூடாதென்றுதான் இப்படிக் கஷ்டப்படுகிறேன் என்றான் அவன்.

ஜா-எலயைச் சேர்ந்த ரோகன என்ற வாட்டசாட்டமான இளைஞன் கொழும்பு பஸ் தரிப்பிடத்தில் இளநீர் விற்பவன்.

நான் இந்தத் தொழில் செய்ய வெட்கப்படுவதில்லை. இன்று எத்தனையோ படித்த இளைஞர்கள் தொழில் வாய்ப்பின்றி அலையும் போது நாம் இதைச் செய்தால் என்ன? இருந்தாலும் இந்த வருமானம் எனது குடும்பத்தை பராமரிக்கப் போதாது. எனவே நான் இராணுவத்தில் சேரப் போகிறேன் என்றான்.

கொழும்புக்கு வரும் இளநீர் ஒல்கொட் மாவத்தையின் நடைபாதையோரங்களிலும், புகையிரத நிலைய வீதியிலும் மாலை 6.00 மணியிலிருந்து அதிகாலை 7.00 மணி வரை குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும்.

சுமார் 7-8 வாகனங்களில் கொண்டு வரப்படும் 12 ஆயிரத்துக்கும் அதிகமான இளநீர் அடுக்கப்பட்டு விற்பனைக்கு இருப்பதைப் பார்ப்பதே ஒரு கண்கொள்ளாக் காட்சிதான்.

தூர இடங்களிலிருந்து இளநீர்க் குலைகளைக் கொண்டு வந்தவர்களிடம் பேச்சுக் கொடுத்தோம்.

"எங்களுக்கு இதில் அதிக இலாபமில்லை. இதை வாங்கி விற்பவர்கள்தான் அதிகமாக உழைத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு நாம் படும் கஷ்டம் விளங்குவதில்லை. இரண்டு மடங்கு இலாபம் வைத்து விற்கிறார்கள். வாகனக் கூலி, மரம் ஏறுபவர்களுக்குக் கூலி.... எமக்கு அன்றன்றைப் பாட்டுக்கு மட்டும்தான் வருமானம் என்றார் சாந்த என்பவர்.

இவர்கள் இளநீர்த் தோட்டங்களிலிருந்தும், வீட்டுத் தோட்டங்களிலிருந்தும் 2.50 - 3.00 ரூபா வரையில் விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

ஒரு மரத்தில் ஏறுவதற்கு கூலியாக 10 ரூபா கொடுக்க வேண்டும். கொழும்புக்கு இளநீரைக் கொண்டு வந்து சேர்க்க 1000 ரூபா வாகனக் கூலி கொடுக்க வேண்டும்.

மழை காலங்களில் இளநீர் குடிப்பது குறைவானாலும், தொடர்ந்து இளநீர் சப்ளை செய்யும் தோட்ட உரிமையாளர்களிடமிருந்து இளநீரை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு இருக்கிறதாம். எனவே மழைகாலங்களில் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லையென்று இதைத் தொடர்கிறோம் என்றார் சாந்த.

கோடை காலங்களில் 4 - 5 ரூபா வரை வலை கொடுத்து வாங்கி, 7 - 9 ரூபா வரையில் விற்கலாம். மழைகாலங்களில் அப்படியில்லை.

ஆனால் எப்படியோ இவர்கள் கொழும்புக்கு கொண்டு வருவதையெல்லாம் நஷ்டத்துக்காவது விற்றுவிட்டே செல்கிறார்கள். இளநீரைக் குலை வெட்டியதிலிருந்து 2 நாட்களுக்கு மேல் வைத்திருக்க முடியாதாம்.

மேலும், கீழே விழுந்து வெடிப்பது, வீச வேண்டியேற்படுவது எல்லாமே வரும் இலாபத்தில் செலவாகிறது. ஒரு நாளைக்கு மொத்த வியாபாரம் இரண்டு தடவை நடக்கிறது. இரவில் முடிந்தவுடன் திரும்ப அதிகாலை 3.00 மணி தொடக்கம் 7.00 மணி வரையில் வேறோர் இடத்தில் விற்பனை நடக்கும். இங்கும் சுமார் 12,000 இளநீர் இறக்கப்படுகிறது. இது தினம் தினம் நடக்கிறது.



கொழும்புப் பிரதேசத்தில் ஒரு நாளைக்கு சுமார் 25,000 இளநீர் விற்கப்படுகிறது.

இவ் ஆரோக்கிய மிக்க, சுவை மிகு இனிய பானத்தை பல்லாயிரக் கணக்கான மக்கள் அருந்துவதற்கு சரியான முறையில் திட்டமிட்ட முதலீட்டாளர்களும், சிறந்த தொழிலுக்கான முதலீடுகளைத் தேடிக் கொண்டிருப்பவர்களும் முயற்சிப்பார்களேயானால் இதன் விற்பனை இன்னும் பெருகும்.



அதுமட்டுமல்ல, பல்வேறு வகையான செயற்கைப் பானங்களை அருந்தி சிறிது நேரம் இன்பம் பெறுவதை விட சத்துள்ள இளநீரைப் பருகுவதற்கு நாமும் தயாராவோம். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் இந்த வருடம் ஏப்ரல் மாத இறுதியிலிருந்து மூன்று வாரங்கள் நகைச்சுவைக்குரிய காலமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. ஈழத்தில் முற்போக்கு இலக்கியவாதியாக தன்னை அடையாளம் காட்டிக்கொண்ட திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் "உதயன்" விழாவிற்கு பாடலாசிரியர் வைரமுத்துவை அழைத்ததிலிருந்து இந்த நகைச்சவைக் காலம் ஆரம்பமாயிற்று.

"குயிலின் இழப்பிற்கு
குரலெழுப்பி அழா வண்ணம்
மண் மீது உள்ளவரின்
வாயெல்லாம் பூட்டு
வரியெல்லாம் மௌனம்
பேயுலாவும் மண்ணின்
பொழுதெப்போ விடியும்"

என ராஜினி திரணகமவின் மரணத்திற்காக எழுதிய இந்த முன்னாள் முற்போக்குவாதி "முற்போக்கை" எல்லாம் எங்கோ தொலைத்துவிட்டு வைரமுத்துவின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்ததுடன் இந்த "நகைச்சுவைக்காலம்" உச்ச நிலையை அடைந்தது. இந்தநகைச்சுவைக் காலம் பற்றி முதலிலிருந்து....

மேற்கு நாடுகளில் பாரிய வியாபாரநிறுவனங்கள் தமது மலிவு விலைகளை அறிவிக்கவும், புதிதாக அறிமுகப்படுத்தும் பொருட்களை விளம்பரப்படுத்தவும் பிரசுரங்களை வாரா வாரம் வெளியிடும்.

இவ்வகையான பல பிரசுரங்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு பொலித்தீன் பைகளில் போடப்பட்டு வாரந்தோறும் வீடுகளுக்கு விநியோகிக்கப்படுவதுண்டு.

தமிழில் இவ்வகையான விளம்பரத் தொகுப்பொன்று பிரதி வெள்ளிக்கிழமைகளில் கனடாவில் வெளிவரும். கனேடிய தமிழ்ப் பெருங்குடி மக்கள் சிலர் இதற்கு பத்திரிகை எனப் பெயரிட்டு "உதயன்" எனவும் அழைப்பார்கள்.

(68 பக்கங்களில் 5 அல்லது 6 பக்கங்களுக்கு செய்திகள் என்னும் பெயரில் சில அறிவித்தல்களைத் தருவதாலோ என்னவோ) இந்தத் தொகுப்பினை வெளியிடுவோர் ஒரே நாளில் பல ஆயிரங்களைச் சேகரிக்கும் முகமாக, கனடாவுக்கு பிரபல சினிமா பாடலாசிரியர் வைரமுத்துவை அழைக்க முடிவு செய்தனர்.

மற்றவர்களை விடவும் வைரமுத்து வருவதால் பெருத்த லாபம். வைரமுத்து தனியே வருவார். பாடகர்களென்றால் வாத்தியக் கலைஞர்கள் இத்தியாதி என அதிகம் செலவு செய்ய வேண்டும். அவ்வகை நிகழ்ச்சிகளுக்கு அதிக செலவு.

வைரமுத்துவை வைத்து ஒரு கவியரங்கு வைத்தால் உள்ளூர்க் கவிஞர்கள் என்ன பணமா கேட்கப் போகிறார்கள்? (எனினும் கனடாவில் இருக்கும் ஒரு பிரபலமான ஈழத்துக் கவிஞர் 8,000 டொலர் கேட்டதாகக் கேள்வி) வைரமுத்துவுக்கு வழங்கப்படும் 10,000 அமெரிக்க டொலர்களுடன் விடயம் முடிந்தாயிற்று.

ஏறக்குறைய 4, 5 மாதங்களுக்கு முன்பிருந்து இவ் "உதயன்" விளம்பரத் தொகுப்பு, வாரம்தோறும் வைரமுத்து வருகிறார்... பராக்... பராக்... என்ற வகையில் பக்கம் பக்கமாக விளம்பரங்களை வெளியிட்டுத் தள்ளியது.

கவியரங்கில் கவிஞர் கந்தவனம் (கனடாவின் தேசிய கீதத்தை தன் இஷ்டத்துக்கு மொழிமாற்றியதில் கனடாவின் தாகூர் என கிரீடம் சூடிக்கொண்டவர்), சிவா சின்னத்தம்பி (கிட்டு ஒரு மொட்டு பட்டு பட்டு என அவன் சுட்டதில் கட்டுக் கட்டாய் மட்டு இல்லாத சட்டு... என எழுதியதில் கனடாவின் அதிரடிக் கவிஞரானவர்), சுமதி ரூபன் (பெண்விடுதலைக்காககுரல்தரும் கவிஞர்), சக்கரவர்த்தி (நவீன சிறுகதை மரபில் ஈழத்தை அடையாளப்படுத்தும் கதைஞர்), பொன்னையா விவேகானந்தன் (வானொலி நிகழ்ச்சிகள் ஊடாக பிரபலமானவர்) ஆகியோர் கலந்து கொள்வர் என 4 மாதமாக விளம்பரஞ் செய்யப்பட்டது.

இவர்களில் சக்கரவர்த்தியை கடந்த 4, 5 வருடங்களில் எங்காவது மேடையில் கண்டதாக எனக்கு ஞாபகமில்லை. சுமதி ரூபன் இப்படியான கவியரங்குகளுக்குப் புதியவர். மற்றவர்கள் பெரும்பாலும் மேடையிலும் சில நேரத்தில் வீடுகளிலும் இருப்பவர்கள்.

இடையில் ஏதோவொரு காரணம் கூறி பொன்னையா விவேகானந்தன் விலகிக் கொள்ள கவிஞர் தொகை நான்காயிற்று.

# ஒரு கவிதையும் சில ஈசல்களும்

வீணைக்கொடியோன்




வைரமுத்து கலந்து கொள்ளும் விழாவினை கனடாவின் 20 தமிழ் வணிக நிறுவனங்கள் ஸ்பொன்சர் செய்தன. (ஒவ்வொருவரும் 1000 டொலர் வீதம் வழங்கியதாகத் தகவல்)

இதைத் தவிரவும் மண்டபம், இருக்கைகள், மாலை, மேள வாத்தியங்கள் அது இதுவென ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஸ்பொன்சர்கள் பெறப்பட்டன.

வைரமுத்து வருவதற்கு முன் வாரக்கணக்கில் பெரும் மனிதன், புனிதன் என்கிற வகையில் கட்டுரைகள் எழுந்தமானத்திற்கு எழுதித் தள்ளப்பட்டன.

வைரமுத்து றொறொன்ரோ மண்ணில் கால் வைக்கவும் வேடிக்கை இன்னமும் அதிகமாயிற்று.

விமான நிலையத்திலிருந்து நேரடி ஒலிபரப்பு, விமான நிலையத்திலிருந்து கனேடிய தமிழ் மக்களுக்கு வைரமுத்து செய்திவழங்குவார் என ஒரே அமர்க்களம்.

பாரதிதாசனின் "வீரம்கொள் தமிழர்" கூட்டம் கவிதையை வைரமுத்து அங்கு மாற்றி, இங்கு கழித்து, "திரண்டு வருக" என விமான நிலையத்திலிருந்து எழுதி முடிக்க, அது வேறு விளம்பரத் தொகுப்புக்களின் முன் பக்கமாக நிறைந்து கிடந்தது.

உதயன் விழா மே மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. (இரண்டு தினங்களும் ஒரே நிகழ்ச்சிகளுடன்தான்) விழா மண்டபத்தின் வாசலில் இருந்து மேள தாளங்கள், மாலை, சுற்றிவர அபிமானிகள், பாதுகாவலர்கள் எனக் கோலாகலமாக வைரமுத்து அழைத்துவரப்பட்டார்.

தமிழக 3ம் தர அரசியல்வாதியை அப்பட்டமாகப் பிரதிபண்ணிய வைரமுத்து குழந்தைகளுக்கு குனிந்து கை அசைத்தும், இரண்டு கைகளை உயர்த்தி வணக்கம் சொல்லியும் ஆரவாரமாக உள்ளே நுழைந்தார்.

விழிக்கும் போது வேறு "மாண்புமிகு"வும் "மேன்மை தங்கிய"வும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வைரமுத்து ஏகமாய்க் குளிர வைக்கப்பட, முதலில் பேச வந்த கனேடிய தமிழ் விளம்பரத் தொகுப்புக்களின் மா.்.பியாத் தலைவர் எஸ். திருச்செல்வம் "அவரை பெயர் சொல்லிக் கூப்பிடவே கூசுகிறது" என்ற வகையில் மானத்தை குழி தோண்டாமலே புதைத்தார்.

இவ்வகையில் இத்தியாதி புலம் பல்கள்கனடாவிற்கேஉரிய "எனது முதுகை நானே சொறிதல்" போன்றவை நடந்து முடிய "சின்னச் சின்ன ஆசை" கவியரங்கு ஆரம்பமாயிற்று.

கவியரங்கில் கவிஞர்களை அறிமுகம் செய்த உதயன் தொகுப்பாளர் லோகேந்திரலிங்கம்: சக்கரவர்த்தி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் என்றும், மட்டக்களப்பில் இருந்து யாராவது இடம்பெற வேண்டும் என்பதாலேயே இவரை அழைத்தோம் எனவும் தனது அறிவு முதிர்ச்சியைக் காண்பித்துக் கொண்டார். எப்போதோ தான் எழுதிய கவிதை ஒன்றுக்கு புதுச்சாயம் பூசி உலவவிட்டவைரமுத்து இடையிடையே "தமிழுணர்வு" பொங்கிவர உதிர்த்த முத்துக்கள் சில...

**1. ஈழத் தமிழரின் வீரப் போராட்டத்தைக் காவியமாக்குவேன்.**

"டோன்ற் வொறி அநேகமாய் டேக் இற் ஈஸி ஊர்வசி ஸ்ரைலில் ஒரு காவியம் மேக் ஆகலாம்"

**2. அதையும் வன்னியில் போய் வாழ்ந்துவிட்டே காவியமாக்குவேன்.**

"வன்னியில் எங்காவது தாஜ், கன்னிமரா அல்லது ஹில்டன் ஹோட்டல்கள் இருந்தால் வைரமுத்துவிற்கு வழிகாட்டுங்களேன் ப்ளீஸ்" (வன்னியில் வாழப் போவதாகக் கூறும் வைரமுத்து விமானத்தில் முதலாம் வகுப்பு ஆசனம் இல்லையானால் கனடாவுக்கு வருவது கடினம் என்ற வகையில் பேரம் பேசியதாகத் தகவல்)

**3. அக்காவியத்தை கனடாவிற்கு எடுத்து வந்து இங்கேயே அரங்கேற்றுவேன்.**

"இன்னுமொரு 10,000 அமெரிக்க டொலர்களுக்கு வருமானம் தயார்"

**4. 21ம் நூற்றாண்டில் தமிழனின் முகவரியை எழுதப் போவது ஈழத்தமிழனே...**

"அதைத் தானேயையா ஏற்கனவே சுவிஸிலிருந்து கனடா வரை ஒவ்வொருவரும் முகவரி, முகவரியாக எழுதித் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்."

அடுத்துக் கவிபாட கவிஞர் கந்தவனம் வந்தார். அவர் பாவம்! என்ன சொன்னார் என்பதே பலருக்கு, ஏன் அவருக்கே புரியவில்லை. வயகரா, விஜய், ஐஸ்வரியா என்ற வகையில் கந்தவனம் பாட, "மாஸ்ரர் பெரிய மனுஷன். கவிதை சொல்லேக்க எங்கையாவது கைதட்டாட்டி என்ன நினைப்பார்" என்ற வகையில் சிலர் கைதட்டி முடித்தார்கள்.

அடுத்ததாக சக்கரவர்த்தியின் கவிதை. இன்றைய இருத்தலையும், யுத்தத்தின் யாதார்த்தத்தையும் சுட்டிய இது போன்றதொரு கவிதைக்குத்திரு.வைரமுத்துஅவர்கள் 20 வருடங்கள் பின் நிற்பதாகவே பட்டது. அது முக்கியமாக ஐந்து விடயங்களை சாடி நின்றது.

1. வடக்கிலும் கிழக்கிலும் இருந்த தமது ஒவ்வொரு உறவினரையும் பத்திரமாக மேற்கு நாடுகளுக்கு அழைத்துவிட்டதன் பின் பியர் போத்தல்களுடன் தமிழுணர்வு மெத்தி "பொறுத்தது போதும் எடடா வாளை" என்று போர்ப்பரணி பாடும் பரணிக் கவிஞர்கள்.

2. கேள்விப்படாத நாடுகளில் தெரியாத மொழிகளைப் படித்து, புரியாத நடைமுறைகளுடன் வாழும் போது தெரிந்த இரண்டு இனங்கள், சொந்த நாட்டில் வாழ முடியாமல் போனமை.

3. வடக்கிலிருந்து புலிகளால் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டமை.

4. எமது மதங்களிலும், இலக்கியங்களிலும் பரவிக் கிடக்கும் வன்முறைக் கலாசாரம்.

5. பாலகர்கள் யுத்தத்தில் பயன்படுத்தப்படல்.



## முயலாய் பிறந்த சாபம்

என்ன, முயலும் நாய்களும் ரேஸ் ஓடுகின்றன என்று பார்க்கிறீர்களா? இல்லை....! "மரண ஓட்டம்", 'உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓட்டம்' என்றெல்லாம் கூறுவோமே இதுதான் அது. உற்றுப் பாருங்கள் சுற்றிவர இன்னும் சில கொடிய மிருகங்கள் சுற்றியிருந்து இதைப் பார்த்து ரசிப்பது தெரியும். வேறு யாருமல்ல மனிதர்கள்தான் அது.

இங்கிலாந்தில் வருடா வருடம் நடைபெறும் "வோட்டர் லூ கப்" (*Water loo Cup*) ற்கான *Hare Coursing* என்னும் போட்டிதான் இது. திறம்பட பழக்கப்பட்ட வேட்டை நாய்களைக் கொண்டு அப்பாவி முயல்களை ஓடவிட்டு பிடிக்கச் செய்வார்கள். நாய்களின் கழுத்தில் வர்ணப் பட்டிகள் கட்டப்பட்டிருப்பது யாரின் நாய் முதலில் பிடிக்கிறது என்பதை ரசிகர்கள் கண்டு குதூகலிக்க.

இது கடந்த பெப்ரவரி மாதம் 23ம் திகதி லண்டனில் நடைபெற்ற 153வது வோட்டர் லூ கப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள். மிருகங்களின் உரிமைகளை பாதுகாக்கும் இயக்கம் இம் மைதானத்திற்கு வந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றைச் செய்தது. ஆனால் குரூர ரசனை கொண்ட மனித மிருகங்களின் முன்னால் அது எடுபடவில்லை.

154வது பந்தயமும் நடக்கலாம்........!



கவியரங்கில் அதிக வரவேற்பைப் பெற்ற இக்கவிதைக்கு பலர் புரியாமல் கைதட்டி முடித்தார்கள் என்பதே உண்மை. கவிதையில் எழுப்பப்பட்ட பல கேள்விகளுக்கு அரங்கமே உறைந்துபோய் அமைதி காத்தது. எவராலும் உதட்டளவில் மறுக்கப்பட்டாலும் உள்ளத்தில் யுத்தத்தை கேள்விக்குள்ளாக்கியது கவிதை.

**"தண்ணீர் தேசத்தை**
**மட்டும் கவி பாடிவிட்டு**
**எங்கள் கண்ணீர்**
**தேசத்தை கைகழுவி**
**விட்ட வைரமுத்து ஐயா**
**அவர்களுக்கும்...."**

எனத் தொடங்கிய கவிதை பரணிக் கவிஞர்களைப் பார்த்து இப்படித் தொடர்ந்தது.

**"போரின் பகைப்புலம் அறியாது**
**போர்ப் பரணி பாடும்**
**பாட்டுக்காரர்கள்**
**எவரோ - அவரே என் தேசம்**
**இன்னமும்**
**எரிந்து கொண்டிருக்க**
**முதற் காரணி என்பேன்"**

**"பாலகனின் ரத்தத்தில் தாகம்**
**தணிக்கும் என் தமிழனனையே**
**நீ தாய் என்பதில் எனக்குச்**
**சந்தேகம் வந்துவிட்டது"**

இவ்வாறு தொடர்ந்த கவிதையில் -

**"......**
**87இல் என் சகோதரியை**
**துரத்தித் துரத்தி**
**முலை கடித்த**
**இந்தியன் இன்று என்**
**எதிர் வீட்டுக்காரன்.**
**எதிரி எனப்பட்டவன்**
**எதிரே இருந்தும்**
**அவனை நாம்**
**புன்முறுவலுடன்**
**வரவேற்கவில்லையா"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என சக்கரவர்த்தி வைரமுத்து வைப் பார்த்துக் கூற வைரமுத்து விற்கே சிரமமாய்ப் போயிற்று. அரங்கமோ கரலொலியால் பிதுங்க, அமைப்பாளர் முகத்தில் (ஈ இல்லாதபடியால்) காற்றே ஆடவில்லை.

கவிதைக்கு விசித்திரமாய் பதிலளித்த வைரமுத்து "மனிதா சிங்களத்தின் சிறைக்குள் இருந்து வெளியேறிய நீ விரக்தியின் விளிம்பிலிருந்து இன்னும் வெளிவரவில்லை. இது விரக்தியின் வெளிப்பாடு... மனிதா பள்ளத்தாக்குகளில் பள்ளம் தோண்டாதே. சிகரங்களில் கூடு கட்டு" என்ற வகையில் ஏதோ கூறினார்.

விரக்திக்கும் இக்கவிதைக்கும் என்ன தொடர்பு....மூச்!

இதைத் தொடர்ந்து பாட வந்த கவிஞர் சிவா சின்னத்தம்பி சுரத்தில்லாமல் ஒரு பரணிக் கவிதையைப் பாட எந்த வரவேற்பும் கிடைக்காமல் போயிற்று.

சுமதி ரூபனின் கவிதை அருமையானது. புத்தகங்களுக்குப் பொருத்தமாய் இருந்திருக்கலாம். சொல்லப்பட்ட முறையிலோ என்னவோ கவியரங்கில் சோபிக்கவில்லை.

இதைத் தொடர்ந்து வைரமுத்துவுக்கு கனடாவின் பிரபலமான ஐந்து வணிக நிறுவனங்கள் தங்கப் பதக்கம் சூட்டி மகிழ்ந்தன.

பதக்கங்களுடன் ஒலிவாங்கிக்கு முன் வந்த வைரமுத்து "இந்தத் தங்கத்தை நான் மதிக்கிறேன். ஆனால் இதை விடவும் ஈழத்தில் போராளிகளின் கையிலுள்ள இரும்பை இன்னமும் மதிக்கிறேன். இங்கே ஒரு மனிதனாய் இருப்பதைவிட ஈழத்திலே ஒரு கல்லறையாய் இருக்கவே விரும்புகிறேன்" என்றவாறு தன் ஈழ அபிமானத்தைப் பிரகடனம் செய்ததுடன் பதக்கங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழககங்களுக்கு வழங்க முன்வந்தார். சிவாஜி, கமலஹாசனெல்லாம் செத்தார்கள் போங்கள்.

சக்கரவர்த்தியின் கவிதையுடன் கொஞ்சம் நொந்து போயிருந்த அமைப்பாளர்கள் வைரமுத்துவின் ஈழ அபிமானத்தைக் கண்டுமகிழ்ச்சியில் திணறியே போனார்கள்.

கனடாவின் 24 மணி நேர தமிழ் வானொலிகளில் ஒன்றான கீதவாணி, நிகழ்ச்சிகளை நேரடியாக ஒலிபரப்பியது. அவுஸ்திரேலியாவிலும் ஏதோ ஒரு வானொலியால் கொண்டு செல்லப்பட்டது.

விழாவிலே இடையிலே வந்த அறிவிப்பாளர் 'கனேடிய நகரங்களிலிருந்தும், அவுஸ்திரேலியாவிலிருந்தும் கீதவாணி வானொலிக்கு ஃபக்ஸ் வந்து குவிந்து, ஃபக்ஸ் இயந்திரமே உடைந்து, கூரையே வெடித்து....' இவ்வாறாக ஏதோ சொல்லிக் கொண்டே போனார். சுயதணிக்கைக்குப் பிரபலமான கனேடிய தொடர்பூடகங்களில் ஒன்றான கீதவாணியில் எல்லா நிகழ்ச்சிகளும் நேரடி அஞ்சல் செய்யப்பட்டும் சக்கரவர்த்தியின் கவிதை மட்டும் ஒலிபரப்பப்படவில்லை.

இக்குழுவின் நிகழ்ச்சியுடன் விழா முடிந்தது. கனடாவிலுள்ள பல வீட்டுத் தொலைபேசிகள் சிணுங்கியபடியே இரவைத் தொலைத்தன. பரலது மூளைகள் இரவிரவா



கத் திட்டமிட்டன. காலையில் சக்கரவர்த்தியிடம் கவிதையை சற்றே குறைக்கும்படி கோரிக்கை விடப்பட்டதாம். மறுக்கப்படவே கவியரங்கு ரத்தானது. பலர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

மறுநாள் வைரமுத்து சற்றே பேச ஆசைப்படுகிறார் எனக் காரணம் கூறி கவியரங்கு ரத்தானதற்கு விளக்கம் தரப்பட்டது.

இனி வைரமுத்து தன்னை அழைத்தவருக்கு நன்றி சொல்ல வேண்டுமல்லவா? ஆகவே உதயன் சார்பில் அதன் ஆசிரியரும் (?) நிருவாகியும் ஆனவருக்கே பதக்கம் வழங்கப்பட்டது. (நானே எனக்கு விருது வழங்கல்).

பதக்கத்தைச் சூட்ட முன்பு "இவர் ஒருகறுப்புத் தங்கம், முத்து, வைரம், வெள்ளி, பொன், உள்ளி, மிளகு..." என்று வைரமுத்து புளுகித்தள்ள உணர்ச்சிவசப்பட்ட உதயன் தொகுப்பாளர் வைரமுத்துவின் காலில் விழுந்து தன் நன்றிகளையும் அபிமானத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

இதற்குப் பின் பேசிய, கனடாவில் தமிழர்களுக்கு **வலி**காட்டியாகத் திகழும் செல்லையா செந்திலாதன், உதயனின் இந்த விழா தமிழ் வரலாற்றில் இதுவரையில் இல்லாதது எனப் பேசி, "உதயனே, கலைஞர் கருணாநிதியையும் இங்கே அழைக்க வேண்டும்" என வேண்டுகோள் விடுத்து அமர்ந்தார். (தனக்கு காலில் விழ சந்தர்ப்பம் தரவில்லை என்ற கோபமோ என்னவோ?)

விழாவிற்கு இரண்டாம் நாள் வந்தோருக்கு கவியரங்கு ரத்தானது ஏமாற்றத்தையே தந்தது.

கனேடிய தொடர்பூடகங்கள் யாவும் இந்த வேடிக்கை விநோதங்களைப் பார்த்து ஆஹா, ஓஹோவென்றிருக்க விடுதலைப் புலிகளின் ஆதரவு ஏடான "முழக்கம்" பத்திரிகை மாத்திரம் ஈழப் போரில் சவாரி செய்யும் வைரமுத்து பற்றி விமர்சனத்துடன் கட்டுரை வரைந்தது. "வைரமுத்து கனடாவிலிருக்கும்போதே எதிர்ப்புக் குரலா" என்று அமைப்பாளர்கள் கொதித்துப் போனார்கள்.

இதுவரையில் விளம்பரங்களையே எழுதி வந்த பேனாக்களுக்கு பதிலும் எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. "நீ யார்? உனது பூர்வீகம் யாது? உனது முகத்திரையைக் கிழிக்கிறேன்" என்ற வகையில் பதில் எழுதிமகிழ்ந்துகொண்டார்கள்.

பத்திரிகை உலகில் விமர்சனம் என்பதாக ஒன்று உண்டு என்பதை மறந்து போனார்கள். உதயனும் முழக்கமும் ஒன்றையொன்று காட்டமாக சாடிக் கொண்டன.

இதனிடையே மறுவாரம் மொன்றியால் நகரில் இதே கவியரங்கு ஒழுங்கு செய்யப்பட்டு, விளம்பரங்களும் வெளிவந்திருந்தன (சக்கரவர்த்தி உட்பட). கவிதையில் குழப்பம் விளைவித்தமையால் சக்கரவர்த்தியும், ஏதோ ஒரு காரணத்தால் சுமதி ரூபனும் தவிர ஏனையோர் கலந்துகொள்ள அங்கும் கவியரங்கு மேடையேறிற்று.

இப்போது இன்னும் தன் ஈழ அபிமானத்தைக்காண்பிக்கமுனைந்த வைரமுத்து "மலரப்போகும் தமிழீழத்தின் தேசிய கீதத்தை நானே இயற்றித் தருவேன்" என்று மிகப் பெரிய நகைச்சுவை ஒன்றை உதிர்த்தார். போச்சுடா! ஏற்கனவே அதை யார் இயற்றுவது என்பதில் இருவருக்கிடையே போட்டி... இப்போது வைரமுத்துவுமா?

இங்கு வெளிவரும் விளம்பரத் தொகுப்புகள் இதை தலையில் வைத்துக் கொண்டாடி முன்பக்கத்திலேயே வெளியிட்டு மகிழ்ந்தன. யாராவது "தமிழீழத்தின் தேசிய கீதம்" என்று ஏதும் படம் எடுக்கிறார்களோ தெரியவில்லை.

எங்களுக்கெல்லாம் ஒரு வியாதி! தென்னிந்தியப் பிரபலங்கள் சொல்லுவதெல்லாவற்றையும் தலையால் கேட்டு வணங்கி அவர்களை வாழ்த்தி... ஒரு கவிதை ஞாபகம் வந்தது.

"சிகரங்களைத் தொடுவதல்ல
எங்கள் நோக்கம் - அடுத்தவன்
பாதங்களைத் தொடாதிருப்பதும்
- அவன்
வாயு பறியும் போது
ஆனந்தம் என்று அள்ளிப்
பருகாதிருப்பதுவுமே
எங்கள் பாதை"

- நன்றி : எக்ஸில் - 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CF

உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான
"சென்றல்"
இடம்
வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

..............................................
லீசிங்
..............................................
காப்புறுதி வசதிகள்
..............................................
வாடகை உரித்து
..............................................
கழிவு பற்றுச் சீட்டு (பில்):
..............................................
ஃபினான்ஸ் வர்த்தகம்
..............................................
செயற்பாட்டு வரி
..............................................
வீடு, சொத்து கடன்
..............................................

CF

**வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்**

தலைமை அலுவலகம்
84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000

நகர அலுவலகம்
270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555

காட்சியறை
254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235


கிளை அலுவலகம்
அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருநாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை

**செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்**


10814



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் தூவிய மலர்கள்

### சூரியன் உதிக்காத தேசமிது

முகத்தில் மஞ்சள் அப்பிய
முழுநிலா
என் தலைக்கு மேலாய்
தவமிருந்தது

வேப்ப மரக் கிளையில்
பாய் விரிக்கும் காகமோ
மௌனத் திரையகல
காட்டுக் கத்தல்
கத்தி ஓயும்

கோட்டைமுனைப் பாலத்தின்
காவலரணகளில் கண்விழித்திருக்கும்
துப்பாக்கி விழிகளெல்லாம்
நாளைய இரவை நினைத்தேங்கும்

இருளின் போர்வைக்குள்
தலை சாய்க்கும் வாவியோ
மீன்களின் துள்ளலில்
தூக்கம் கலைக்கும்

கடல் லாம்பின் ஒளியில்
கதை பேசும் மீன்கள்
கூட்டுக்குள் புகுந்து
பொறியில் சிக்கும்

வாவிக்கப்பால்
வயல்வெளிகளைக் கடந்து
கிறவல் தெருவொன்றின் முனையிலே
மரக்குடையின் கீழிருக்கும்
கண்ணகை அம்மன்
அதிகாலைப் பூசைக்கு முன்னே...
நாட்டுக்கூத்தின் பாட்டும் தாளமும்
நகரத்து செவிகளில்
செல்லமாய் நுழையும்

ஆக்காண்டியின் அலறல் கேட்டு
வாடிப்பறணில் தூங்கியவன்
எழுந்து காட்டுப்பன்றி துரத்தி
களைத்துத் திரும்புவான்

சக்கரத்தின் முள்ளாய்
நகர்ந்தோம்... நகர்ந்தோம்...
முடிவேயில்லா கவலைகளோடு
வெளிச்சம் தேடி
அலைந்து களைத்தோம்

தலையில் ஏறிய சுமையினைத்
தாங்கிக் கொள்ள எவருமில்லை
இந்த இரவல் வாழ்வு
இன்னும் தொடரும்

இந்த இரவும் இனிவரும் இரவும்
எங்களுக்கில்லை... தோற்றோம்
அவலை நினைத்து உரலை இடித்து
வாழ்வையே இழந்தோம்

- செங்காவலன், ஏறாவூர்.

---

வேலை வேண்டி மலைக்கு வந்து
கங்காணிக்கு கையெடுத்து கும்பிட்டு
கணக்கப்பிள்ளையின் கால்பிடித்து
கோப்பி தேயிலை கொத்தி நட்டு
வியர்வைதனை சொட்ட விட்டு
சம்பளநாள் பல்லிளித்து பணம் பெற்று
கடனுக்கு கொஞ்சம் காசு கொட்டி
பிள்ளையின் பள்ளிக்கு மீதி கொடுத்து
மிஞ்சுவதில் எஞ்சுவது கால்வயிற்றுக் கஞ்சி

- கிருஷ்ணமூர்த்தி சேரன்.

---



### ரோஜா

முட்செடியின்
வியப்பான சிரிப்பு...
வண்டுகளின்
உல்லாச விடுதி...
பனித்துளி தூங்கும்
விலையுயர் மெத்தை...
கண்கவர் கன்னிக்கு
கவிஞனின் உவமானம்...
மோனாலிசா புன்னகையை
தோற்கடிக்க -
இறைவனின் ஓவியம்...
மலர்க் குடும்பத்தில்
இவள்தான் செல்லப்பிள்ளை...
காதலர் கைமாறும்
சர்வதேச முத்திரை...
கருங்கூந்தலில் இயற்கையின்
இலவச கிரீடம்...

- பாரதிப்பிரியன், விருதோடை.

---

### மரணித்துப் போ

சாராயச் சந்தையிலே
சம்பளத்தைத் தொலை
பெண்டாட்டி கேட்டால்
முகரையைப் பிள
முணுமுணுக்கும் மூத்தவனின்
முஞ்சியில் போடு
சாமம் முழுக்கத் திட்டித்தீர்
காலை வந்து கதவைத் தட்ட
படுக்கைப் புழுதியை விட்டு
புரண்டு எழு!
மறுபடியும் உன்
தொழிலுக்குப் போ
மத்தியானம் கொஞ்சம்
மனிதனாகி வீடு திரும்பு
வீட்டுக் கஞ்சி குடித்து...
திரும்பவும் தலைகுனிந்து
முகம் புதைத்து கடன் கேள்
மீண்டும் குடி
மீண்டும் உதை
கடன் திருப்ப முடியாது
யதார்த்தம் புரியாது
கழுத்தில் தூக்கிட்டு
மரணித்துப் போ
மனைவி ஒப்பாரி வைப்பாள்
மகன் உன்வழி தொடர்வான்
சாராயச் சந்தையில்
சம்பளத்தைத் தொலைத்து
சரித்திரத்தில் புதைவான்

- ஏ. ராஜ்குமார், கட்டப்புளா.

---

### ஆசிரிய பென்சனியர்

நரைத்துப் போன மயிர்
திரைத்துப் போன தேகம்
கரைந்து போன சேட்
கழுத்து மடிப்பில்
அழுக்கேறிய அடையாளம்
பத்திரிகை படிக்க நிதம்
பக்கத்து வீட்டில் தஞ்சம்
கடிதத்துக்குப் பதில் அனுப்ப
பழைய கடிதங்களில்
முத்திரைக்குத்துக்குத் தப்பித்த
தபால்தலை வேட்டை
முன்பு,
அலட்சியமாக எறிந்த
சில்லறைகளை
அறையெங்கும் தேடி எடுத்து
நாலுமுழத்துக் கிழிசல்
சண்டிக்கட்டில் மறைத்து
பசியைப் போக்கச் சிறிய
டீக்கடைக்குப் போனால்
என்னைப் போலவே
குனிந்த தலைக் கூட்டம்
அட, அவர்களும்
ஆசிரிய பென்சனியராம்!

அரச ஊழியர்க்கு
அதிகரித்த சம்பளம்
ஆசிரியருக்கோ இன்னும் அதிகம்
ஓய்வுபெற்ற ஊழியர்க்குச்
சம்பள உயர்ச்சி ஏன் இல்லை?

- ந. சிவபாதம் "புத்தொளி"

---

### எல்லாம் உனக்காக

நிர்மலமாய் இருந்த மனம்
குப்பையாக,
நீ இணைந்த வேளையெல்லாம்
நினைத்திருந்தேன்

தோல்விகளை எனக்காகச்
சேர்த்துக் கொண்டு
தொடருமென்தன் வெற்றிகளை
உனக்குச் சேர்த்தேன்

விடியாத பாழிருட்டில்
தவித்திருந்தும் - என்
வெளிச்சத்தை உன்னிடமே
கொடுத்து வைத்தேன்

என் துயரில் நீ களிக்க
எரியும் தேகம்
என்னுடைய தெல்லாமே
உனக்குத் தந்தேன்

பார்த்திருந்து நீ மகிழப்
பொழுதைப் போக்கப்
பைத்தியமாய் ஆக்கினையோ
பதற வைத்தாய்

என் நினைவில் நீ
உனக்கென்னைத் தந்தேன்
என் மரணம் உனக்கினித்தால்
அதுவும் இன்பம்

- நெடுந்தீவு மகேஷ்

---

### மின்னல்

கல்லில் கல்லடித்து
நெருப்பெடுத்தது
பூமி!
நீரில் நீரடித்து
நெருப்பெடுக்குது
வானம்!

- எஸ். நளீம், மீராவோடை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

தன்னுடன் கல்லூரியில் படிக்கும் பிள்ளைகள் தெருவிலே தொல்லையென்று ஓடியோடி வீட்டுக்குச் செல்ல தான் மட்டும் வீட்டிலே தொல்லையென்று தெருவிலே நேரத்தைக் கடத்திய காலங்களை அவள் மனம் எண்ணிப் பார்க்கிறது. அவள் கண்களிலும் கண்ணீர். தன்னைத் தூக்கி அணைத்துக் கொண்டு கண்ணீர் விடும் அக்காளின் பிடியைத் தளர்த்திக்கொண்டு நடந்தாள். நடக்க முடியவில்லை. சந்தோச நாளிலும் மனம் கனத்தது.

அவள் மனதிலே அந்த பழைய நாட்கள். அவலத்தின் விளிம்பிலே அதுவும் ஆருக்கும் சொல்ல முடியாத அசிங்கத்தின் பிடியிலே தவித்த நாட்கள் படமாக ஓடுகின்றன.

அமலி உன்னையும் அம்மாவையும் தம்பியையும் கூப்பிட முப்பதாயிரம் முடிஞ்சுது. இவருக்குத் தெரிஞ்ச பொடியன் ஒன்று தன்ரை அம்மா தங்கச்சி என்று பொன்சர் பண்ணித் தந்தபடியால் உந்தளவில் முடிஞ்சுது. இல்லாட்டில் இன்னும் கூட முடிஞ்சிருக்கும்.

மெய்யே மோனை முப்பதாயிரம் டொலர் யாழ்ப்பாணத்திலே கனக்கவோ மோனை?

பத்து லட்சத்துக்கு மேலே அம்மா.

மோனை நான் கேட்கிறன் என்று குறை நினைக்காதே. நீ உவ்வளவும் செய்ய அவர் ஒன்றும் சொல்லல்லையே?

சீ! அவர் நல்லவரம்மா. அவர்தான் ஓடியாடி எல்லா அலுவலும் பார்த்தது. நீங்கள் ஏறிவிட்டியள். அந்த இரவு முழுக்க மனுசன் ஒரு கண் நித்திரை கொள்ளவில்லை என்றால் பாரன்.

அத்தான் பாவம் அக்கா.

அந்த மனுசன் நல்ல குணமானது என்றபடியால் இவ்வளவு காசையும் கட்டி எங்களை இங்கே கூப்பிட்டது. இல்லாட்டில் அந்தச் செல்லடியிலே ஊர் ஊராக அலைஞ்சு அன்னந் தண்ணி இல்லாமல் செத்திருப்பம். எனக்கு இவள் அமலியாலை தானே மோனை ஒரு கண் நித்திரையில்லை. இந்தியன் ஆமிக்காரர் இரண்டு பேர் ஒரு நாள் அறைக்குள்ளே வா சோதிக்க வேணும் என்று நிற்கிறான்கள். எல்லாரும் குளறிக் கூத்தாடித் தான் தப்பினது. இல்லாட்டி அன்றைக்கே இது நாசமாய் போயிருக்கும். நான் வந்ததல்ல. இதைக் கொண்டு வந்து சேர்த்ததுதான் பெரிய நிம்மதி மோனை.

அம்மா அக்காவுக்கு நிம்மதிப் பெருமூச்சுடன் அப்படிச் சொன்ன போது அமலிக்கும் அது சரியாகவே பட்டது. ஆனால் எண்ணெய்க்குத் தப்பி அடுப்பிலே வீழ்ந்த கதை போல இந்தியன் ஆமியை விடக் கேவலமான ஒரு அத்தானின் குகைக்கு வந்து சேர்ந்திருக்கிறேன் என்பதை உணர அவளுக்கு மூன்று மாதங்கள் பிடித்து விட்டது.

அவள் உணர்ந்துகொள்ளத்



# மௌன யுத்தம்

இரா. சம்பந்தன்

தான் மூன்று மாதங்கள் எடுத்தனவே ஒழிய அந்த வலைவிரிப்பு வேலைகள் தான் வந்தவுடனேயே ஆரம்பமாகிவிட்டன என்று இப்பொழுது அவளுக்கு நன்றாகப் புரிகின்றது.

தற்செயல் நிகழ்ச்சிகள் என்று ஒதுக்கிவிட்ட எத்தனையோ விசயங்கள் அவளுக்கு இன்று நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட நாடகங்கள் என்று புரிகின்றது.

அன்று ஒரு சனிக்கிழமை. அக்காளின் பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டு அம்மா வீட்டில். அக்காவுக்கு உடம்பு சரியில்லை. வீட்டுக்கு சமையற் பொருட்களை வாங்க அத்தானுடன் காரில் புறப்பட்டாள் அமலி.

மெல்லிய குளிர். பெற்ற தகப்பனுக்கு சொந்த அண்ணனுக்கு சமமான அவனின் பாசம் பின் சீட்டில் ஏற வேண்டும் என்ற உணர்வு தரவில்லை அன்று. இப்போதெல்லாம் பின் சீட்டில் ஏறுவது மட்டுமல்ல. கண்ணாடியிலே தன்னைப் பார்த்து விடாதபடி இருக்கவும் அவளுக்குத் தெரியும்.

அமலி! எப்படி ஸ்கூல் எல்லாம் போகுது?

நல்லாய்ப் படிக்கிறேன் அத்தான். ஆனால் இங்கிலீஸ்தான் கஷ்டம். இங்கே எல்லாரும் வேறு மாதிரி கதைக்கினம்.

இங்கே எல்லாமே வேறு மாதிரித்தான் அமலி. எங்கன்ரை சனங்களே எவ்வளவு முன்னேறி விட்டது.

அதெண்டால் உண்மைதான் அத்தான். பொம்பிளையள் எல்லோரும் ஜீன்ஸ் அப்படித்தான் போட்டுக் கொண்டு வருகினம்.

கொஞ்ச நாள் போனால் குளிர் வந்திடும். நீரும் போடத்தானே வேணும்.

சீ! போங்கோ அத்தான். நான் செத்தாலும் போடமாட்டன்.

அப்படிச் சொல்லாதையும் அமலி! ஏன் சொல்லும் பார்ப்பம்? என்று தொடங்கி கனடாக் காலநிலைகள் பற்றியும் உடுப்புகள் பற்றியும் அத்தான் சொன்ன புதிய செய்திகளை ஆவலோடு கேட்டாள் அவள். உம்முடைய உடம்பு இப்படி என்றபடியால் நீர் இப்படிப்பட்ட உடுப்புப் போட்டால் தான் வடிவு என்று அத்தான் உள்ளாடைகளைப் பற்றிச் சொன்னபோது ஒருபுறம் வெட்கமாக இருந்தாலும் உம்பெல்லாம் என்னவோ பரவுவது போல உணர்ந்தாள் அமலி.

இதையெல்லாம் ஏன் கதைக்கிறார்? எதற்குப் பாதை போடுகிறார்? என்ற விளக்கம் அப்போது அவளுக்கு இல்லை. அவர்தானே வாங்கித் தரவேணும். அதனால்தான் கதைக்கிறார், கேட்கிறார் என்று நினைத்துக் கொண்டாள். கடை கண்ட இடமெல்லாம் கை நிறையப் பொருட்கள், சாப்பாடுகள்.

ஒரு கேள்வி. அம்மாவும் அக்காவும் கூட வராத சமயத்தில் ஏன் இதைச் செய்யணும்? அந்தக் கேள்வி பிறக்க அவளின் இதயப் பெண்ணிற்குச் சிந்தனைக் கணவன் கிடைக்கவில்லை. அதனால் சந்தேகக் குழந்தையும் பிறக்கவில்லை.

தொடரும் கார்ப் பயணங்கள். அதிலும் திட்டமிட்ட தனிப் பயணங்கள். பக்கத்தில் வாங்கக் கூடிய பொருட்களையெல்லாம் பல மைலுக்கு அப்பால்.... அப்போதெல்லாம் எத்தனையோ காது கூசும் கதைகள், கேள்விகள். ஒவ்வொரு பேச்சின் முடிவிலும் அக்கா சரியில்லை. நீர் தான் நல்ல பிள்ளை என்ற முனைப்பு.

அன்றும் அமலி அத்தானுடன் சென்று கொண்டிருந்தாள். இப்பொழுதெல்லாம் செல்ல விருப்பம் இல்லைதான். அக்காவின் சொல்லுக்காக கூடப் போனாள்.

அமலி ஒன்று சொல்றன். கோவிக்க மாட்டேன் என்று சொல்லும். இல்லைச் சொல்லுங்கோ அத்தான்.

உம்முடைய நல்ல குணங்களைப் பார்க்கப் பார்க்க முந்தியே அக்காவுக்கு முதல் உம்மைக் கட்டியிருக்கலாம் போல இருக்குது. எல்லாம் என்ரை தலைவிதி.

கட்டியிருக்கலாம் என்று படுதோ, கட்டலாம் என்று படுகுதோ. சும்மா விசர்க்கதை ஒன்றும் கதைக்க வேண்டாம். சொல்லிப் போட்டன்.

நீண்ட மௌனம். போய்த் திரும்பும் வரையில் அவள் கதைக்கவேயில்லை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தான் இவ்வளவு நாளும் கதைத்த கதைகள் எதுவுக்குமே உள் நோக்கம் இல்லை என்கிறது போன்ற எத்தனையோ கதைகள். எதுக்குமே அமலி காது கொடுக்கவில்லை. அழுது கொண்டிருந்தாள். காது வெந்துவிடும் கதைகளை மட்டும் கேட்டுப் பழகிப்போன காரில் கோயில் கதைகள், பாசக் கதைகள், பழைய அசிங்கங்களுக்குப் பலகை போட்டு மறைக்கும் முயற்சி. கிட்டாதாயின் வெட்டென மற என்ற தத்துவ அரங்கேற்றம். அமலி தலை கவிழ்ந்து இருந்தாள்.

அமலிக்கு அழுகை மட்டுமல்ல ஆத்திரமுமாக இருந்தது. என்ன இப்படியும் சனங்கள் இந்தக் கனடாவிலே இருக்குதுகளா? இடங்கள் சிறியதாய் போனதாலே இதயங்களும் சிறுத்து விட்டனவா? குளித்துவிட்டு வரும்போது இடிபடும் ஓடைகள். அது காரணமா? இவன்களின் இந்த அலைவுக்கு அளவுமீறிய ஆசைக்கு என்னதான் காரணம்?

தனது கோபத்தைக் காரின் கதவிலே காட்டிவிட்டு வீட்டிற்குள் நுழைந்தாள் அவள்.

என்னடி ஒரு மாதிரி வாறாய்? ஏன் சாமான் ஒன்றும் வாங்கலையா?

எனக்குத் தெரியாது. அத்தானைப் போய்க் கேள்.

என்னப்பா ஏன் இவள் சீறிக் கொண்டு போறாள். இது அக்கா.

இப்ப உள்ள பிள்ளைகளுக்கு நல்லதுக்கு ஏதாவது சொன்னால் பிடிக்காதே!

எவ்வளவு அழகான பதில்.

பாவி! முழு விசயத்தையும் அக்காவுக்குச் சொன்னால் இதுதான் உன்னுடைய கடைசி உறவாக இருந்திருக்கும். போ.

"கண்டறியாத பள்ளிக்கூடத்துக்குப் போய்த்தான் சீர்கெட்ட பழக்கங்கள், மட்டுமரியாதை இல்லாத கதைகள்'' தன் பங்கிற்கு அம்மா கத்தினாள். அக்காவைப் போல அதுக்கும் வெள்ளை மனசு. அப்படித்தான் சத்தம் போடுவா.

அறைக் கதவைப் பூட்டிவிட்டு படுக்கையில் இருந்தாள். எப்படியும் இன்றைக்கு கதவுக்கு உட்பக்கம் கொக்கி போடணும். கைகள் நடுங்கின. இத்தனை நாளும் நடைபெற்ற அத்தனை நிகழ்ச்சிகளும் சங்கிலித் தொடராக மனதில் ஓடின.

ஒருநாள் குளித்துவிட்டு உடைமாற்றிக் கொண்டிருந்தாள் அவள். திடீரென்று கதவைத் திறந்து கொண்டு அக்காளின் கணவன். என்ன? என்னத்தான்? அதிர்ந்து போய்க் கேட்டாள். அதற்குள் மார்பைப் பொத்திக் கொண்டு எத்தனையோ அதிரடி நடவடிக்கைகளைக் கைகள் எடுத்துவிட்டன. நல்ல காலம் ஒரு நிமிடம் முந்தியிருந்தால்? நினைத்துப் பார்க்கவே வெடவெடத்தது உடம்பு.

அடடே நீர் நிற்கிறீரா? நீர் குளிக்கிறீர் என்று நினைச்சன். 'அயன் பொக்ஸ்' உங்கே இருக்கா?

இல்லை. இல்லை நான் எடுக்கவில்லை.

எங்களின்ரை ரூமிலும் காணல்லை... உரையாடல் நீண்டதே ஒழிய வெளியே போவம் என்ற எண்ணத்தை துளியும் காணோம்.

அன்று இந்த நிகழ்ச்சி குற்றமாகத் தெரியவில்லை அமலிக்கு. சர்வசாதாரணமாக ஒதுக்கி விட்ட அந்த நிகழ்ச்சிக்கு ஆயிரம் அர்த்தங்கள் பிறந்து அவளை இன்று ஆத்திரத்தால் துடிக்க வைத்தது. அக்காவுக்குத் தெரியாமல் அத்தான் வாங்கித் தந்த எத்தனையோ பொருட்கள். அக்கா கேட்ட போதெல்லாம் "வெல்.'.பெயர்" காசிலே வாங்கியது என்று பொய் சொன்ன உடுப்புகள் எல்லாம் அவமானச் சின்னங்களாக அறை முழுவதும் பரவிக் கிடப்பது போன்ற ஒரு உணர்வு அமலிக்கு.

அத்தான் அத்தானென்று பாசத்தோடு நடந்த எனக்கு அந்த மனுசன் காட்டிய ஆதரவு போதும். அக்காவுக்குச் சொன்னால் வீணா அந்தக் குடும்பத்திலே பிரச்சினை. அம்மாவுக்குச் சொல்லலாம். கடைசிக் காலம். அது தெய்வம் சாமி என்று எண்ணி சமைச்சு சாப்பாடு எல்லாம் கொடுத்து ஏந்தி வைத்திருக்கும் இவனைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டு சாகும்.... போகட்டும் எல்லாம் எனக்குள்ளே

**மரங்கள் ஓய்வுபெற விரும்பினாலும் காற்று அதனை விடுவதில்லை.**
**- மாவோ**

புதைந்து போகட்டும். இந்த நயவஞ்சகங்கள் என்னோடு மறையட்டும். மௌனமாக இருந்து கொண்டு இந்த மிருகத்தை எதிர்த்து ஒரு மௌன யுத்தம் செய்ய வேண்டியதுதான். அமலி முடிவு செய்து கொண்டாள்.

அந்த மௌன யுத்தத்திலே எத்தனை அடக்குமுறைகள். என்னப்பா உன்னுடைய தங்கச்சி கண்டபடி திரியிறாள் என்பதில் தொடங்கி ஒவ்வொரு அசைவிலும் குற்றம். நிராயுதபாணியாக நிற்கும் அவள் மீது எத்தனையோ வார்த்தை ஆயுதங்கள். அக்காவையும் அம்மாவையும் எதிராகத் திருப்பி அவளைத் தனிமைப்படுத்திப் பணியவைக்கும் தந்திரங்கள்.

கண்ணீர், கவலை, சாப்பாடு இருந்தும் சாப்பிட மனம் பிடிக்கா நாட்கள். உடம்பிலே தண்ணீர் ஊற்றும் ஒவ்வொரு கணமும் ஆயிரம் தடவை கதவுப் பூட்டைப் பார்த்து நடுங்கும் அவலம். தனக்குக் கிடைக்காத ஒன்று எப்படியாவது சீரழிந்து போகட்டும் என்பது போன்ற கீழ்த்தர உத்திகள். அந்த மனுசனாலே தான் நீ கனடா வந்து நல்லாக இருக்கிறாய். அதை மறந்து போகாதே என்ற அம்மாவின் செல்வீச்சுக்கள். போடி போ. நீ இப்ப என்னுடைய தங்கச்சி அமலி இல்லை. அக்காவின்ரை ஏவுகணைகள்.

எல்லாத் தாக்குதல்களையும் பொறுமைப் பங்கருக்குள் கிடந்து கடந்தாயிற்று. அந்த மௌன யுத்தத்திலே இவர்களின் அதிகாரத்தின் கீழே வாழும் நிலையில்லை.

நல்ல காலம் எனக்கும் ஒரு தங்கச்சி இல்லை. இருந்தாலும் நாளைக்கு என்ரை மனுசனும் அவளுக்கு என்ன செய்யுமோ தெரியாது. கடவுளுக்கு உண்மையிலேயே நன்றி.

சரி நேரமாவது அக்காவும் தங்கச்சியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தால் என்ன மாதிரி. போவோம். மாப்பிள்ளை வீட்டாரின் அழைப்புக் கேட்டு சுய நினைவுக்கு வந்தாள் அமலி.

அக்கா போட்டு வாறன், அத்தான் போட்டு வாறன். மௌனமாக நடந்தாள் அவள். அவளின் வார்த்தைக்கு ஆயிரம் அர்த்தங்கள்.

**- நன்றி : ழகரம் -2**




## பாம்புக்கு முட்டை வார்ப்பு

பாம்புக்கு பால் வார்ப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். இதென்ன முட்டை? மலேசியாவைச் சேர்ந்த மொஹமட் நூர் அப்துல்லா தான் வளர்க்கும் பாம்பிற்கு முட்டைகளில் மாத்திரைகளைக் கலந்து ஊட்டச் சத்து கொடுக்கிறார். 51 வயதான இவர் ஒரு சாதனையாளர். 250 விஷப் பாம்புகளுடன் மெல்லிய கண்ணாடிக் கூண்டுக்குள் 35 நாட்களை கழித்தார். இவர் உடைத்தது, 150 நாகப்பாம்புகளுடன் 27 நாட்கள் கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்து சாதனை படைத்த தன் மருமகனின் சாதனையை என்பது இன்னுமொரு பெருமை. பாம்பு இவர்களுக்கு வாழ்வளிக்கிறது. இவர்கள் பாம்புக்கு வாழ்வளிக்கிறார்கள், அவ்வளவுதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோள்களைப் பற்றினான்.**

**திரும்பினாள் ஸ்நேகா.**

**முறுவலித்தான் கணேஷ். "ஸ்நேகா இந்த தொடுதல் காமமில்லை. ஓர் பாதுகாப்பு.... பல்லாயிரக்காணக்கான பக்த கோடிகளின் அலையில் வழி தவறி விலகி விடுவோமோ என்ற பயம்..."**

**பூவானாள் ஸ்நேகா....**

மாத்தளை நகரெங்கும் பக்தியின் மனசு "ஓம்" என்ற ஓங்கார நாமத்தை காற்றலைகள் எங்கும் பரப்பிய வண்ணம் நல்லடியார்கள்.

வெள்ளை காவி, பச்சை வர்ண வேட்டிகளோடு ஆடவர்களும் - பாவாடை சட்டை, பட்டுச் சேலைகளில் பெண்களுமாக - எல்லோர் முகங்களிலும் பக்தியின் பரவசம். உதடுகள் பிரித்து "முருகனுக்கு அரோகரா"....... தெய்வீக வாசம் வெளியெங்கும் வீசியது.

"கணேஷ் என்ன முழிக்கிற...."

"சந்தோஷம் ஸ்நேகா. நம் இனம் எவ்வளவு ஒற்றுமையா மனசு முழுக்க நல்ல எண்ணங்கள் நிரப்பி பல திசைகளிலுமிருந்து ஒன்றுகூடித் தேர்த்திருவிழா கொண்டாடுகிறார்கள். எவ்வளவு சுதந்திரம், படபடக்கும்பட்டாம்பூச்சிகள்போல் பக்தர்கள், வியாபாரிகள்... சுகம்... சுகம்... ஸ்நேகா..."

"ஸ்நேகா"

"ம்..."

"கலையும், வழிபாடும் நம் கலாசாரத்தில் பிரிக்க - பிரித்துப் பார்க்க முடியாதவை. நம் மத உணர்ச்சியோடு அழகியல் உணர்ச்சியும் இணைந்து கலைகள் எவ்வளவு வளர்ந்துவிட்டது....

ஸ்நேகா. எவ்வளவு அழகான தேர்களின் அணிவகுப்பு, ஆயிரக் கணக்கான பக்தர்களின் ஊடே கண்கொள்ளாக் காட்சியா.... இரு விழி போதாது ஸ்நேகா....

## சிறுகதை

உபநிஷதங்கள் - இனிய கவி வரிகள்...

ஆடலும் பாடலும் - இங்கு தெய்வீகம்...

பக்தி ஆடலாக பாடலாக இறையிடம் அர்ப்பணமாகிறது.

"ஸ்நேகா, காதல் கூட தெய்வீகமானது. காம உணர்ச்சிகளின் வெளிப்பாடுதான் காதல் என்பது அநேகரின் எண்ணம். மனம் - மனங்களின் ஒன்றிய கீதம்தான் காதல்.... உயிர்களை இணைக்கும் உன்னதம்...."

"ஆமா ஸ்நேகா...

தெய்வ சந்நிதானமே நிம்மதி தானே. இத்தனை பல்லாயிரக் கணக்கான அடியார்கள் ஒன்று சேர்ந்து காணும் இன்பம். எல்லோரும் பரவசத்தோடு ஒற்றுமையாதேர் இழுக்கும் -பக்திசுகம் வேறு எங்கு காணக் கிடைக்கும் ஸ்நேகா...

பக்தர்கள் யாவரிலும் பரவசம்! ஒரே மூச்சில் பக்தியோடும் அன்பின் திளைப்போடும் தேர்க் கயிற்றை எத்தனை கைகள் இணைந்து இழுக்கின்றன. உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஆண், பெண் பாகுபாடின்றி இறை சந்திதானத்தில் ஒன்றிணைந்திருப்பது சந்தோஷம் ஸ்நேகா...

வாழ்க்கை ஒரு கலை - வாழ்வதும் ஒரு கலை. பிரகாசமான ஒளி. மனதில் சுகம், நடனம், ஓவியம், சிற்பம், போர், கல்வி, காதல் எல்லாம் பக்தி கலந்த கலை - உயர்ந்த கலை - உள்ளதை உள்ளபடியே சொல்லும் அங்கு காமமில்லை. பார்ப்பவனின் மனதில் - எண்ணத்தில் தான் காமம், விரசம்...

பக்தி கொண்டவனின் மனதில் காதல் கொண்டவனின் மனதில் விரசம் தோன்றாது.... பரவசம் கூடும் ஸ்நேகா..."

"கணேஷ்..."

ஸ்நேகா கணேஷின் தோளில் சாய்ந்தாள். "கால் வலிக்குது. அப்படி ஓரமா உட்காருவோமா..."

தலையசைத்தான்கணேஷ்.

"வாழணும்னு ஆசைப்படுறேன் கணேஷ் முழுமையா வாழணும்... அன்பான கணவன். எந்தவொரு விடயத்தையும் என்னோடு விவாதித்து - என்னை நெறிப்படுத்தி - என்னைப் புரிந்து கொண்டு - என்மீது அன்பு செலுத்துகிறவனாக - என்னை விட அறிந்தவனாக இருக்கணும்னு ஆசைப்படுகிறேன்....

இன்றைய என் பிரார்த்தனை இதுதான். கணேஷ் இவையெல்லாம் வெறும் லட்சியவாத ஆசைகள்தானா? நடைமுறையில் இவையெல்லாம் சாத்தியப்படக் கூடியவையா? அல்லது நான் கனவு லோகத்தில் வாழ்கிறேனா?"

"நம்ம குறையை யாரிடமாவது சொன்னாமனசின் பாரம் குறையும். சந்தோஷம் தோணும். கடவுளை நம்புகிறவர்களுக்கு இன்னும் சுலபம். நம்பிக்கைதான் ஆறுதல். நல்லது நடக்கும் ஸ்நேகா..."



# மனசு

உக்குவளையூர் அம்ரிதா

"யாழ்ப்பாணத்துல இப்பிடி எல்லோரும் ஒன்றுகூடி சுதந்திரமாக சுத்திய மகிழ்ச்சியை இழந்து எத்தனை வருஷமாச்சு. இங்குள்ள மக்கள் குடுத்து வச்சவங்க. ஓரளவாவது சரி நிம்மதியா இருக்க முடியுதேன்னு நினைக்கும் போது சந்தோஷமாகவும் மறுபுறம் பொறாமையாவும் இருக்கு..."

காவடியாட்டம்.

வேல் ஆட்டம்.

நின்று, நிதானித்து - ஒவ்வொரு அசைவுகளையும் அவதானித்தான். அதில் மனதைச் செலுத்திதன்னை இழந்தான் - ஸ்நேகா 'போகலாமா' என்று கேட்கும் வரை.

"கணேஷ் முன்னால் வருவது பிள்ளையார் ரதம், அடுத்து முருகன் - அம்மன் - சிவன் - சண்டேஸ்வரர்...." கணேஷுக்கு ஒவ்வொரு தேரையும் காட்டி பவனி வரும் தெய்வங்களின் வரிசையை விளங்கப்படுத்தினாள்.

ஒவ்வொரு தேரும் கம்பீரமாக மாத்தளை நகரை வலம் வந்து கொண்டிருந்தன. அன்றைய இரவின் இருளை வர்ண பல்புகள் விரட்டிக்கொண்டிருந்தன. நகரெங்கும் விழாக்கோலம்.

வேதசுலோகங்கள் - காதுக்கினிய ரீங்காரம்...

ஒவ்வொரு தேரும் சிவனின் அவதாரங்கள். மக்களை நல்வழிப் படுத்தும் அடையாளங்கள். அடியார்கள் பூக்கள், கற்பூரத் தட்டுகளேந்தி நடந்து ஒவ்வொரு அவதாரத்தையும் பூஜித்தனர்.

'ஓம் சக்தி' கீதம் - மனத்தின் ஆழம் செல்லும் - தெய்வத்தின் அன்புச் சொல் 'ஓம்' - கேட்க மனது நிம்மதிப்படும். சந்தோஷம் கொள்ளும். 'முருகா' என்று கன்னத்தில் போட்டுக் கொள்ளுகையில் ஏற்படுகிற மனத் திருப்தி. 'அரோகரா' என்ற அடியார்களது ஒன்று சேர்ந்த பக்தியின் ஓசை ஆனந்தம்.

"என்ன கணேஷ் மனசெல்லாம் சந்தோஷமா....?" முகமெல்லாம் பூத்திருக்கும் புன்னகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ ஏன் கணேஷ் இன்னும் திருமணம் முடிக்கல்ல..."

"முடிக்கணும்னு தோணல..."

"ஏன் அப்பிடி?"

"ஏனென்றால் நான் நந்தி. கோவில் வாசலை காவல் காக்கும் நந்தி. அட்டைக் கரியைப் பூசிக்கொண்ட அவதாரம். என்னைப் பாரேன்... முகத்திற்குப் பொருத்தமில்லாத குண்டு விழிகள். இதழை ஊடறுத்துபூமிபார்க்கும் அவசரபற்கள்....

இப்ப சொல்லு ஸ்நேகா, என்னை யாரு விரும்புவா...? பணத்திற்காக, என் கல்வித் தராதரத்துக்காக விரும்பலாம். என்னை - என் மனசை, உருவத்தை விரும்புவாளா.... விரும்பாமல் என்னோடு போலியான வாழ்க்கை வாழ வரலாம். சந்தோஷமில்லாத வாழ்வு அவளுக்கும் கசக்கும். எனக்கும் வெறுக்கும். வாழ்க்கை உடையும். சமூகம் சிரிக்கும். என் கனவு செத்திடும். நானும் சிறகுகளை இழந்திடுவேன்...."

கணேஷின் விழிகளில் நீர்க் கோலம்.

"என்னை உனக்குப் பிடிச்சிருக்கா கணேஷ்...?"

மௌனமானான்.

"கணேஷ், என்னை ஏற்றுக்கொள் வாயா சொல்லு....

இதில் காம உந்துதலில்லை. உடலாசையின் வார்த்தையில்லை. பணத்தின் மையலில்லை கணேஷ். மனசு நேசிக்குது. ஏதோ ஒன்று ஈர்க்குது. உன் சாந்தமான பேச்சா. எதற்குமே அலட்டிக் கொள்ளாத தன்மையா....

விளங்கல கணேஷ். இந்த உணர்வு இன்று நேற்றல்ல. பல ஆண்டுகளாக இது உள்ளதா நினைக்கிறேன்..."

மீண்டும் மௌனமாயிருந்தான்.

"ஏன், பிழையா ஏதும் சொல்லிட்டேனா... உன் மனச ரணமாக்கிட்டேனா?"

"தப்பில்லை ஸ்நேகா. ஆனா இது வாழ்க்கை. சட்டென்று தீர்மானிக்கும் விஷயமல்ல....

இன்னும் யோசி... யோசிப்போம். பிறகு முடிவெடுப்போம்....

ஸ்நேகா, நீ நிலா நான் நந்தி. இணைந்தால் கேலிபண்ணும் ஊர். உன் பெற்றோர் கவலைப்படுவாங்க - கிளியை வளர்த்து குரங்கு கையில் கொடுத்து விட்டோமோ என்று...." - புலம்பினான் கணேஷ்.

"நாம வாழறது நமக்காக. ஊருக்காக அல்ல கணேஷ். மனசு தரும் சந்தோஷமே இனிதான வாழ்க்கை... குடும்பம்."

"ஸ்நேகா போகலாமா..."

இருவரும் முத்துமாரியம்மன் சந்நிதானத்தை நோக்கி விரைந்தனர். மாத்தளை முத்துமாரியம்மன் அவர்கள் இருவரையும் விழியால் தரிசித்து ஆசீர்வதித்தாள்....

## விட்டால் பிடிக்க முடியாது!

மகா அலெக்ஸாந்தரின் காலத்துச் சிற்பியான லிஸிபஸ் என்பவன் சந்தர்ப்பம் என்பதற்கு விளக்கமாக வெண்கலத்தில் ஒரு சிலை வடித்தான். அது ஒரு வாலிபனின் சிலை. அவனது தலையின் முன்புறத்தில் சிறிது மயிர் இருந்தது. பின்புறத் தலை வழுக்கை. ஒவ்வொரு காலிலும் இரண்டு இறக்கைகள். பறக்கத் தயாராக நுனிக்காலில் நின்றுகொண்டிருந்தான். கையில் ஒரு கத்தி இருந்தது. அச் சிலையின் கீழ் இப்படி எழுதியிருந்தது....

"நீ யார்?"

"நான்தான் சந்தர்ப்பம்"

"ஏன் பெருவிரல் நுனியில் நிற்கிறாய்?"

"பறக்கத் தயாராக...."

"ஏன் கால்களில் இறக்கை முளைத்துள்ளது?"

"காற்றோடு சேர்ந்து கனவேகமாகப் பறக்க!"

"உன் கையில் கத்தி... இது ஏன்?"

"கத்தி முனையை விட நான் கூர்மையானவன் என்பதை உணர்த்த!"

"முன்புறத்தில் மட்டும் ஏன் முடி?"

"என்னைச் சந்திப்பவர்கள் என்னை உடனே பற்றிப் பிடிக்க"

"பின்புறத் தலையில் வழுக்கை....?"

"நான் திரும்பி விட்டால் என்னை மறுபடியும் ஒருபோதும் உன்னால் பிடிக்க முடியாது"

சந்தர்ப்பம் உன்னை நோக்கி வரும்போது சட்டென்று பிடித்துக்கொள். காரணம் அதன் பின் தலை வழுக்கை!

- தாரகை தௌபீக்

## மனிதரின் நாடாளுமன்ற உறுப்பு!

"பெண்கள் அரசியலில் பங்கேற்பது என்பது ஆண்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதை ஒத்ததுதான். இரண்டுமே இயற்கைக்கு முரணானவை, நடைமுறையில் சாத்தியப்படக் கூடியவை அல்ல" என்று கூறிய புருதோன் என்பவருக்கு, 1832ல் பிரான்ஸில் 'பெண்ணின் விடுதலை' என்ற இதழை வெளிக் கொணர்ந்தவர்களில் ஒருவரான ழான் தெர்வான் கூறிய பதில்:

"குழந்தைகளுக்குபாலூட்டுவதென்னவோ பெண்களால் மட்டும்தான் முடியும். பெண்களின் உடலமைப்பு அப்படி. ஆனால் நாடாளுமன்றத்தில் ஆண்கள்தான்பிரதிநிதிகளாகஇருக்கவேண்டும் என்ற வாதம் வினோதமானது. நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டிய தகுதி ஆண்களுக்கு மட்டுமே உரிய உறுப்புடன் சம்பந்தப் பட்டதா என்ன?"

- 'அன்புள்ள டாக்டர் மார்க்ஸ்' நூலில்.

## நீங்கள் அடக்கமானவளா?

கேள்வி: "நீங்கள் அடக்கமான பெண்ணா?"

'The God of small things' நாவல் எழுதிப் புகழ் பெற்ற அருந்ததிராய் பதில்: "ஆம். ஆனால் எனது அடக்க விதிமுறைகளை நானே உருவாக்குகிறேன். மற்றொருவருடைய விதிமுறைகள் என்னுடையதல்ல"

**புதிய கலைஞன் என்பவன் கலகக்காரனாய் மட்டுமே இருக்க முடியும். சமூகத்தின் மட்டுதட்டிப் போன வெகுஜன ரசனையுடன் முரண்டு பண்ணக் கூடியவனாய் மட்டுமே இருக்க முடியும்.**

**- ஜி. நாகராஜன்**

## வீ(ஈ)ரத்தமிழன்



**மழை பெய்கிறது**
**ஊர் முழுவதும் ஈரமாகிவிட்டது**
**தமிழ் மக்கள்**
**எருமைகளைப் போல எப்போதும்**
**ஈரத்திலேயே நிற்கிறார்கள்**
**ஈரத்திலேயே உட்காருகிறார்கள்**
**ஈரத்திலேயே நடக்கிறார்கள்**
**ஈரத்திலேயே படுக்கிறார்கள்**
**ஈரத்திலேயே சமையல்**
**ஈரத்திலேயே உணவு**
**உலர்ந்த தமிழன்**
**மருந்துக்குக் கூட**
**அகப்பட மாட்டான்**

- மஹாகவி பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹிட்லரென்றால் ஏதோ ஒரு காலத்தில் வாழ்ந்த மிக மோசமான ஒரு தனிநபர் பாத்திரம் மட்டுமல்ல. மாறாக ஹிட்லருக்கு "ஹிட்லர்" ஆகுவதற்கு மனதுக்குள் ஒரு விருப்பம் இருந்த அதேவேளை ஜேர்மனிய சமூகத்துக்கும் ஒரு "ஹிட்லர்" தேவையாக இருந்தது. அதற்கான பதவி வெற்றிடம் என்பதும் அந்த சமூகத்தால் உருவாக்கப்பட்டு முன்வைக்கப்படும் வரை ஹிட்லர் ஒரு சாதாரண மனிதனாகவே அச் சமூகத்தில் வாழ்ந்தான்.**

- புரட்சி தாஸ் -

# ஜேர்மன் தேசிய வெறி



கிறிஸ்தவ மக்களுக்கு லூஸிபர் பிசாசு (சாத்தான்) என்றவுடன் ஏற்படும் பீதி உணர்வைப் போல பல மடங்கு பய உணர்வை ஏற்படுத்தக் கூடிய இன்னுமொரு பிரகிருதி இந்த உலகத்தில் இருந்ததென்றால் அது **அடோல்.ஃப் ஹிட்லர் (Adolf Hitler)** தான். இதில் மிகை எதுவுமில்லை.

ஹிட்லரென்றால் ஏதோ ஒரு காலத்தில் வாழ்ந்த மிக மோசமான ஒரு தனிநபர் பாத்திரம் மட்டுமல்ல. மாறாக ஹிட்லருக்கு "ஹிட்லர்" ஆகுவதற்கு மனதுக்குள் ஒரு விருப்பம் இருந்த அதேவேளை ஜேர்மனிய சமூகத்துக்கும் ஒரு "ஹிட்லர்" தேவையாக இருந்தது. அதற்கான பதவி வெற்றிடம் என்பதும் அந்த சமூகத்தால் உருவாக்கப்பட்டு முன்வைக்கப்படும் வரை ஹிட்லர் ஒரு சாதாரண மனிதனாகவே அச் சமூகத்தில் வாழ்ந்தான்.

அதாவது தன்னுடைய தாய் தந்தையர்கள் கூட யாரென்னும் அடிப்படையான கேள்விக்குக்கூட விடை தெரியாத, ஐரோப்பிய சமூகத்தில் பொஹீமியன் (Bohemean) என அழைக்கப்படுகின்ற பிறப்பு வழி தெரியாத ஒரு பரிதாபகரமான மனிதனாகவே இருந்தான். ஒரு "ஹிட்லர்" ஆக அவன் உருவாகுவதற்கு இதுவே அவனுக்கு இருந்த அடிப்படைத் தகைமை என **வில் ஹெலம் ரைக் (Wilhelme Riche)** என்னும் சமுகவியலாளர் கூறியுள்ளார்.

தன்னுடைய அடிப்படை மூல வேரை அறிந்திராத ஒரு மனிதன் நிச்சயமாக சமூகத்தைப் பற்றி எந்தப் பொறுப்பும் சொல்ல மாட்டாதவனாகவே இருப்பான். எனவே அவன் துணிந்து அச் சமூகத்தைக் கைது செய்து அதனை நிரந்தரமாக காவலில் வைக்கத் துணிவான். இதற்கான அதிகாரத்தையும் பலத்தையும் அவன் ஒரு வரலாற்றுப் பின்னணியிலிருந்தே பெற்றுக் கொள்கிறான். அவ் வரலாற்றுப் பின்னணியை ஆராய்வோம்.

முதலாவது உலக மகா யுத்தம் 1914 இல் ஆரம்பித்து 1918 ஆம் ஆண்டு முடிவடைகின்ற பொழுது அது "இரத்தத்தினாலும் வாளினாலும்" பிஸ்மார்க் என்பவன் கட்டியெழுப்பிய ஜேர்மன் ஏகாதிபத்தியத்தைத் தோல்வியுறச் செய்த வண்ணமே முடிவடைந்தது. அத் தோல்வியின் சாம்பல் மேட்டிலிருந்தே **வெய்மார்க் குடியரசு** என்பது புதிதாக கட்டியெழுப்பப்பட்டது.

1918 ஆம் ஆண்டு பெப்ரவரி 6ம் திகதி பல எதிர்பார்ப்புக்களுடன் வெய்மார்க் குடியரசினால் புதிதாக உருவாக்கப்பட்ட பாராளுமன்றம் நிறுவப்பட்டது.

பல நூறாண்டு காலமாக அயல் நாடுகளை அடக்கியாளுகின்ற ஆட்சி முறையைக் கொண்ட ஆட்சியாளரின் கீழ்தான் "ஜேர்மன் இனம்" வாழப் பழக்கப்பட்டிருந்தது. ஜேர்மனிய இனமானது "உலகின் ஏனைய இனங்களை விட அறிவுள்ளது, கூரிய சிந்தனைத் திறன் மிக்கது, புதிய புதிய விடயங்களைக் கண்டுபிடிக்க வல்லது, போர்க் குணமும் வீரமும் நிறைந்தது" என்பன ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களாகக் கருதப்பட்டன.

நிறுத்துவதற்காக ஒரு யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென ஜேர்மனி யுத்த அதிகார சபையின் ஜெனரல்கள் அரசிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதன்படி 1918ம் ஆண்டு செப்டெம்பரில் ஒரு யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டாலும், யுத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட நீண்டகால அழிவுகளுக்கு முகங்கொடுத்துச் சமாளிப்பதென்பது வெய்மார்க் அரசுக்கு பெரும் தலையிடியாகவிருந்தது.

ஜனநாயக ரீதியான ஒரு ஆட்சியை ஏற்படுத்த முனைந்த இவ்வரசியல்வாதிகள் படிப்படியாக ஜேர்மன் மக்களின் விமர்சனத்திற்கும் கண்டனத்திற்கும் ஆளாகத் தொடங்கினர்.

இவ்வாறான ஒரு தேசிய அகங்காரமானது ஒருவகையில் அவர்களாலேயே தாங்கிக் கொள்ள முடியாத ஒரு வரலாற்று ரீதியான மனோவியல் சுமையாக அம் மக்களுக்கு இருந்ததென்று சொல்லலாம்.

எனவே இவ் எண்ணம் கொண்ட சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது புதிதாக உருவாகிய வெய்மார்க் குடியரசுக்கு இலகுவானதாக இருக்கவில்லை.

அப்போதுதான் -

முடிவடையாதிருந்த முதலாம் உலக யுத்த நிலைமைக்குள் மேற்கத்தேய யுத்த களங்களில் ஏற்படுகின்ற தோல்விகளைத் தடுத்து


அதேவேளை - யுத்த நிறுத்தத்திற்காக கைச்சாத்திடப்பட்ட **வர்சேல்ஸ்** ஒப்பந்தத்தின் காரணமாக பல்வேறு நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டிய நிலை ஜேர்மனிக்கு ஏற்பட்டது.

தோல்வியடைந்த ஜேர்மன் குடியரசானது யுத்த நட்ட ஈடாக பல பில்லியன் மார்க்குகளை செலுத்த வேண்டியிருந்தது.

அதேவேளை தமது கட்டுப்பாட்டிலிருந்த சில ஜேர்மனியப் பிரதேசங்களை அதில் வாழ்ந்த மக்களோடுசேர்த்துக்கைவிடவும்நேர்ந்தது. தான் கைப்பற்றிய சொந்த **றைன்லாந்தை** மீளக் கொடுக்க வேண்டியேற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குழந்தை ஹிட்லர்

நட்ட நடுநிசியில் மிகக் கொடூரமான காடையர்களிடம் அகப்பட்ட பட்டுப்போன்ற ஒரு இளம் பெண்ணுக்கு நடக்கக்கூடிய கதி ஜேர்மன் இனத்துக்கும் ஏற்படும் நிலைமை மெல்ல மெல்ல நெருங்கிக் கொண்டு இருந்தது.

இந் நிலைமையில் எவ்விதமான அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ளுவதற்கு புதிய அரசினால் முடியவில்லை. பணவீக்கம் மிக மோசமாக அதிகரித்தது.

இதனால் சாதாரணமாகவே கலவரப்படுகின்ற நடுத்தர வர்க்க ஜேர்மனியர்கள் பல அழுத்தங்களுக்கு உள்ளாகினர். ஜேர்மனிய இனத்தை அழித்து விடுவதற்கான பணிகளில் யாருடையதோ ஒப்பந்தமொன்றை இந்த அரசு செயற்படுத்துகின்றது என்னும் கட்டுக்கதைகள் பரவத் தொடங்கின. அவை அரசுக்கெதிரான பத்திரிகைத் தலையங்கங்களாகப் பிரசுரமாகின.

அதேவேளை தற்போது அரசிலுள்ள தலைவர்கள் சரியான ஆட்களேயல்ல என ஹிட்லர் அங்கம் வகித்த **தேசிய சோஷலிஸக் கட்சி** கருத்துத் தெரிவித்தது.

பொறுப்புச் சொல்ல வேண்டியது வெய்மார்க் குடியரசுதான் என்ற கருத்து சமூகத்தில் நிலைபெறத் தொடங்கியது.

அரசுக்குள் இருந்த விரல்விட்டு எண்ணக்கூடிய, ஜனநாயக, லிபரல் தலைவர்கள் செய்வதறியாது திகைத்தனர். குறிப்பாக இவ் வேளையில் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியினரும், குடியரசு ஆட்சியைத் தூக்கியெறிவதற்கான காலம் வந்துவிட்டது என்னும் இடதுசாரிக் கருத்தை தீவிரமாக முன்வைத்தனர்.

இந் நிலைமையானது 1929ம் ஆண்டில் முழு உலகமும் முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடியினால் இன்னும் மோசமடைந்தது. 1929ம் ஆண்டில் ஆரம்பித்த பாரிய பொருளாதார வீழ்ச்சியினால் 1930ல் 45லட்சம் ஜேர்மனியர்கள் தொழிலில்லாத நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். இரண்டு வருடங்களின் பின் அது 60 லட்சமாக அதிகரித்தது. சாதாரண பெட்டிக்கடைகளும் தெருவோரச் சந்தைகளும் கூட வெய்மார்க் அரசைச் சபிக்கின்ற அரசியல் பேச்சு மண்டபங்களாக மாறின.

யுத்தத்தில் வெற்றிபெற்ற நட்பு நாடுகள் தோல்வியடைந்த ஜேர்மனியில் ஜனநாயக பூர்வமான ஓர் அரசை உருவாக்கிக் கொடுத்திருந்தாலும் ஜேர்மன் மக்கள் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

அதிதீவிர ஜேர்மனிய தேசியவாதமும் தேசவெறியும் நிறைந்து கிடந்த ஜேர்மன் சமூகமும், நிலப்பிரபுத்துவ பிற்போக்குவாதிகளும், கம்யூனிஸ்ட்டுகளும் கொடுத்த பலத்த தாக்குதலால் இறுதியில் வெய்மார்க் குடியரசு முற்றுமுழுதாக விழுந்து நொருங்கியது.

1921ல் இருந்து தன்னைப் போன்ற இன்னும் பல அப்பாவி இளைஞர்களையும் சேர்த்துக் கொண்ட ஹிட்லர் ஜேர்மனிய இனத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் எனக்கூறி நாடுபூராவும் அரசியல் வகுப்புகள் நடத்திய வண்ணம் இருந்தான். மிகத் திறமையான பேச்சாளியான ஹிட்லர் இடத்துக்கேற்ற விதமாக அழகாகப் பேசி உள்ளூரப் பீதியுற்றிருந்த ஜேர்மனிய சமூகத்துக்குப் பல வாக்குறுதிகளை வழங்கினான்.



யுத்தத்தில் வெற்றிபெற்ற நட்பு நாடுகள் தோல்வியடைந்த ஜேர்மனியில் ஜனநாயக பூர்வமான ஓர் அரசை உருவாக்கிக் கொடுத்தாலும் ஜேர்மன் மக்கள் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அதிதீவிர ஜேர்மனிய தேசியவாதமும் தேசவெறியும் நிறைந்து கிடந்த ஜேர்மன் சமூகமும், நிலப்பிரபுத்துவ பிற்போக்குவாதிகளும், கம்யூனிஸ்ட்டுகளும் கொடுத்த பலத்த தாக்குதலால் இறுதியில் வெய்மார்க் குடியரசு முற்றுமுழுதாக விழுந்து நொருங்கியது.

# உருவாக்கிய...

இதற்கிடையே மீண்டும் ஜேர்மனிய ஏகாதிபத்தியத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற கருத்தை முன்வைத்த **ஜேர்மனிய பூமி புத்திரர்கள்** எனத் தம்மை அழைத்துக் கொண்ட நிலப்பிரபுத்துவ பிற்போக்குவாதிகள் மிக மோசமாக குடியரசு ஆட்சியைச் சாடலாயினர்.

"சரித்திரத்தில் தோல்வியையே சந்திக்காத, வெற்றியடைந்திருக்கக் கூடிய, ஜேர்மனிய இராணுவத்தை இக் குடியரசுத் தலைவர்கள் முதுகில் குத்தி ஜேர்மன் இனத்துக்குத் துரோகம் இழைத்துவிட்டார்கள்" என வெய்மார்க் குடியரசுக்கு எதிராகக் குற்றஞ்சாட்டினர்.

இச் சகல பின்னடைவுகளுக்கும்

ஏதாவதொரு தீர்வை முன்வைக்கின்ற ஆட்சிமுறைக்கு பாரிய எதிர்பார்ப்பு (Demand) அவ்வேளை நிலவியது. ஜேர்மன் இனத்தை இந் நெருக்கடியிலிருந்து விடுவித்து உயர்ந்த நிலைக்குக் இட்டுச்செல்லக் கூடிய மகா புருஷனை அச்சமூகம் வேண்டி நின்றது. அதற்கான 'பதவி வெற்றிடம்' (Vacancy) அச் சமுகத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

ஜேர்மன் இனத்துக்கு, அதன் கௌரவத்தை மீண்டும் ஈட்டித் தருவதாகவும், தொழிலிழந்தவர்கட்கு தொழில் பெற்றுத் தருவதாகவும் ஜேர்மன் இனத்தைத் தோல்வியடையச் செய்தவர்களைத் தான் பழிவாங்கப் போவதாகவும் சூளுரைத்தான்.

ஒரு தூய ஜெர்மனிய ஏகாதிபத்தியத்தைக் கட்டியெழுப்புவதே தன் நோக்கமென உறுதியாகக் கூறினான். இதனால் ஹிட்லரைச் சுற்றி லட்சக் கணக்கில் மக்கள் திரளத் தொடங்கினர். ஹிட்லரின் தேசிய சோஷலிசக் கட்சியின் இத் திடீர் வளர்ச்சியால் ஜேர்மன்கம்யூனிஸ்ட் கட்சிகூடஒருவகையில்நிலைகுலைந்து மண்டியிட்டு விட்டது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நட்ட நடுநிசியில் மிக கொடூரமான காடையர்களிடம் அகப்பட்ட பட்டுப் போன்ற ஒரு இளம் பெண்ணுக்கு நடக்கக் கூடிய கதி ஜேர்மன் இனத்துக்கும் ஏற்படும் நிலைமை மெல்ல மெல்ல நெருங்கிக் கொண்டு இருந்தது.

ஜனாதிபதி **ஹின்டன் பேர்க்** அவர்கள் ஹிட்லரின் வளர்ச்சியைக் கண்ணுற்றாலும் எதுவும் செய்ய முடியாத கையாலாகாத நிலையிலே இருந்தார். தேர்தல் நெருங்கிய பொழுது "தோழர் ஹிட்லர் அவர்களுக்கு வாக்களியுங்கள்" என **ரோஸா லக்செம்பேர்க்** தலைமைத்துவம் கொடுத்த ஜேர்மனியக் கம்யூனிஸ்ட் கட்சிகூடச் சொல்லத் தொடங்கியது.

மிக இலகுவாக பெரு வெற்றியடைந்த ஹிட்லர் 1933ம் ஆண்டு ஜனவரி மாதம் ஜேர்மனியின் சான்ஸிலர் பதவிக்கு ஜனாதிபதி ஹின்டன் பேர்க்கினால் நியமிக்கப்பட்டான்.

ஜேர்மனியில் ஹிட்லரின் வருகையானது வரலாற்றில் சாதாரணமாக நடப்பதுபோல் உணர்ச்சிகளும் எதிர்பார்ப்புகளும் மட்டுமே பொது அறிவாகத் தோற்றமளிக்கின்ற துரதிர்ஷ்டமான வேளையிலேயே நடந்துவிட்ட ஒரு விபத்தாகும்.

பதவிக்கு வந்தவுடன் முக்கியமான இடங்களில் தனக்கு நம்பிக்கையானவர்களைப் பதவியிலமர்த்திய ஹிட்லர், தனக்கு எதிரானவர்களெனச் சந்தேகிக்கின்ற சகலரையும் ஏதோ ஒரு வழியில் கொலை செய்யவும் தொடங்கினான்.

நவீனத்துவம், நவ நவீனத்துவ வாதம் போன்ற புதிய கோட்பாடுகள் பற்றி அறிவு ரீதியான சிந்தனைகளைத் தூண்டிவிட்ட, ஐரோப்பிய அறிவாளிகள் சமூகத்திற்கு ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்த ஃபிராங்ஃபேட் பள்ளி (*Frankfurt school*) யைச் சேர்ந்த கல்விமான்கள் சகலரும் நாட்டைவிட்டுத் தப்பியோடியதுடன் எஞ்சியிருந்தவர்கள் இறக்கவேண்டி வந்தது. அவ்வாறு இறந்தவர்களுள் ஒருவரே **வோல்ட்டர் பெஞ்சமின்.**

சான்ஸிலராக இருந்த ஹிட்லர் 1933ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒரு கொடிய இரவில் தனது மிக நெருங்கிய பாதாள உலக நண்பர்களான **கோரின், கொயபெல்ஸ்** ஆகிய இருவரோடும் சேர்ந்து ரைஃப் டாங்க் என அழைக்கப்பட்ட ஜெர்மனியப் பாராளுமன்றத்தைத் தீயிட்டுக் கொழுத்திவிட்டு, அது கம்யூனிஸ்ட்டுகள் செய்ததாக அறிக்கை விட்டான்.

ஜெர்மன் தேசியம் என்னும் மனநோயால் பீடிக்கப்பட்டிருந்த பத்திரிகைகளும் அவ்வறிக்கையை இன்னும் ஆக்ரோஷமாக வெளியிட்டு கம்யூனிஸ்ட்டுகளை மோசமானவர்களாக மக்கள் முன் காண்பித்தன.

இச் சம்பவத்தைச் சாக்காகக் கொண்டு இவ்வாறான அழிவு வேலை செய்பவர்களைத் தண்டிப்பதற்கான புதிய சட்டமொன்றை ஹிட்லர் கொண்டுவந்தான்.

அதன்பின் ஜேர்மனியில் சுதந்திரமாக கருத்துச் சொல்லுதல், பத்திரிகை வெளியிடுதல் போன்ற சகலதும் முடிவுக்கு வந்தன.

"உண்மையான ஒரு தலைவன் முதுகெலும்பு உள்ளவனாக இருக்க வேண்டும்" என்னும் பாமரத்தனமான ஏமாற்றுக் கோஷத்தை முன்வைத்து ஹிட்லர் செய்த சகல வன்முறை நடவடிக்கைகளையும் மதத் தலைவர்கள்கூட மிக விருப்போடு அங்கீகரித்தனர்.

**ஜேர்மனியில் ஹிட்லரின் வருகையானது வரலாற்றில் சாதாரணமாக நடப்பதுபோல் உணர்ச்சிகளும் எதிர்பார்ப்புகளும் மட்டுமே பொது அறிவாகத் தோற்றமளிக்கின்ற துரதிர்ஷ்டமான வேளையிலேயே நடந்துவிட்ட ஒரு விபத்தாகும். பதவிக்கு வந்தவுடன் முக்கியமான இடங்களில் தனக்கு நம்பிக்கையானவர்களைப் பதவியிலமர்த்திய ஹிட்லர், தனக்கு எதிரானவர்களெனச் சந்தேகிக்கின்ற சகலரையும் ஏதோ ஒரு வழியில் கொலை செய்யவும் தொடங்கினான்.**

"இவன் தான் ஒரு நாளைக்கென்றாலும் நிமிர்ந்து நிற்கின்ற மனிதன். இவனால்தான் ஜேர்மனியைக் கட்டியெழுப்ப முடியும்", எனப் பரப்பப்பட்ட கருத்தால் ஜேர்மனியப் பெண்களது மனங்களிலும் ஹிட்லர் ஹீரோவாக வலம் வந்தான்.

இந்தப் படுமுட்டாள்தனமான தேசிய உணர்வினைப் பாவித்து, தான் விரும்பியவர்களை விரும்பிய நேரம் கைதுசெய்யவும் புதிய புதிய குற்றங்களையும், தடுப்புச் சட்டங்களையும் அறிமுகம் செய்து அதன்படி கைதுசெய்தவர்களைக் கொலை செய்யவும் ஹிட்லரும் அவனின் நாஸி (*NAZI*) படைகளும் தயங்கவில்லை.

எதிர்க் கருத்துக்களுக்கு பொதுவாகவே மதிப்பளிக்க விரும்பாத இளைஞர் சமூகம் சில அறிவாளிகளின் விமர்சனங்களை ஏளனம் செய்ததோடு ஹிட்லர் மீது மோகம் கொள்ளவும் ஹிட்லரின் வழியைப் பின்பற்றவும் மிக வேகத்தோடு எழுந்து நின்றது.


1933ம் ஆண்டு மார்ச் மாதத்தில் "திறமையைப் பெற்றுக் கொடுக்கும் சட்டம்" என்னும் சட்டத்தை புதிதாகத் தயாரித்ததன் மூலம் முழு ஜெர்மனியையும் ஹிட்லரிடம் அடகு வைக்கும் காரியம் நடந்தேறியது.

அதன்படி "ஜேர்மனியைக் கட்டியெழுப்பும் திறமை ஹிட்லருக்கே உண்டு" என ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனையடுத்து 1933 மார்ச் 23ம் திகதியிலிருந்து ஜெர்மனிய பாராளுமன்றத்தின் சகல சுதந்திரமான செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டன.



கோரின்

சட்டங்களை உருவாக்கும் அதிகாரம், நிறைவேற்று அதிகாரம், நிதி, வரவு செலவுத் திட்டத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம், பிற நாடுகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் அதிகாரம் உட்பட அனைத்து அதிகாரங்களும் ஐந்து சரத்துக்களைக் கொண்ட ஒருசட்டமூலத்தினால்ஹிட்லரின் காலடியில் சமர்ப்பிக்கப்பட்டன. **அதாவது ஜேர்மனியில் இருந்த அசையும், அசையாப் பொருட்கள் அத்தனையும் சட்ட பூர்வமாக 'தேசத்தின் தந்தை' யான ஹிட்லருக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டன.** •



கொயபெல்ஸ்

**அதிகாரத்தின் அளவு எந்தளவுக்கு அதிகரிக்கிறதோ அந்தளவுக்கு துஷ்பிரயோகத்துக்கான வாய்ப்பும் அதிகரிக்கிறது!**
- எட்மன் பேர்க்

**அளவற்ற அதிகாரம் அதன் உரிமையாளனைப் பழுதாக்கும்**
- வில்லியம் பிட்

**அதிகாரம் ஒரு பொல்லாத குதிரை. அது தன் எஜமானனை ஒருமுறையாவது கீழே தள்ளாமல் விடாது**
- ஸ்கொட் பழமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரப்பர் வயர் போல் மனிதனால் எப்படி இப்படி வளைந்து நெளிய முடிகிறது! அதுவும் நிலையாக நில்லாது ஓடிப் பாய்ந்து, ஆகாயத்தில் சுழன்று, கம்பிகளில் தொங்கிக் கரணமடித்தபடியே...?

இவர்களுக்கு எலும்பென்ற ஒன்றே இல்லவே இல்லையா? அவை யாவும் எப்படி விற்சுருள்களாக மாறிவிட்டன! கால்கள், கைகள், கழுத்து, உடல் என்ற எந்த வேறுபாடுமின்றி எல்லாமே எல்லாப் புறமும் திரும்பி வளைந்து நெளிந்து முறுகி விநோத சாகசம் புரிகின்றன. அதிலும் ஒரு கணம் தப்பாத அச்சொட்டான காலக் கணக்கீட்டோடு, ஏதோ ஒரு மாயாஜால நடன வித்தை போல....

ஆம்! "ஜிம்னாஸ்டிக்" என்கிறார்களே, அதைத்தான் இப்படி வியக்கிறோம். உடலை ஒரு அட்டைபோல் சுருட்டிக் கொள்வதும், படுத்தபடி பின்புறமாக வளைந்த காலைத் தலை மேல் கொணர்வதும்.... எம்மையொத்த அதே மானிடப் பிறவிகள்தான் இவற்றையெல்லாம் செய்கின்றனவா என உள்ளூர வியந்து, நாமும் ரகசியமாக அதுபோல் செய்ய முடியுமா எனச் சற்று முயன்று பார்த்து, "இது யாரால் இயலும்?" என ஓயச்செய்யும் இந்த வியக்க வைக்கும் கலை உண்மையில் ஓர் உற்சாகம் மிகுந்த விளையாட்டு. அத்தோடு மிக நல்ல உடற் பயிற்சியும் கூட.

வளையங்கள், கம்பிகள் மற்றும் பல உபகரணங்களுடன் மேற்கொள்ளப்படும் இந்தப் பயிற்சி உடலுக்குப் பலத்தையும், வளையும்தன்மையையும், ஒருங்கிணைந்த செயற்பாட்டுத் திறனையும், கட்டுப்பாட்டையும், தேகக் கட்டையும் கொடுக்கிறது.

பழைய கிரேக்கத்தில் முளைவிட்டது இந்தக் கலை. அப்போது பயிற்சிக் கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட எல்லாப் பயிற்சிகளுக்கும் ஒரு பொதுப் பெயராகவே "ஜிம்னாஸ்டிக்" என்று அழைக்கப்பட்டது.

பின்னர் படிப்படியாக மாற்றம் பெற்று பல்வேறு நாடுகளிலும் செல்வாக்குப் பெற்று, தனித்த ஒரு விளையாட்டுக் கலையாகப் பரிணமித்தது.

# ரப்பராய்







நவீன ஜிம்னாஸ்டிக் கலைக்கு அடித்தளமிட்டவர் ஃபிறிட்றிச் ஜான் (Friedrich Jahn) என்னும் ஜேர்மனியர். அவர் பல்வேறு ஜிம்னாஸியப் பயிற்சிகளையும், அவற்றுக்கான கருவிகளையும் உருவாக்கினார். சமாந்தரச் சட்டங்கள், வளையங்கள், நிலைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜிம்னாஸ்டிக் விந்தை





குத்தான சட்டங்கள்
என்பன யாவும் அவ
ரால் கொண்டுவரப்
பட்ட பயிற்சி வகை
களே. அவரது பயிற்
சிகளின் குறிக்கோள்
உடலை வலுவாக்கு
வதையே அடிப்படை
நோக்கமாகக்
கொண்டிருந்தது.

இதையடுத்து இவ்
விளையாட்டுக்குமற்
றொரு பெரும் பங்க
ளிப்பைச் செய்து
அதை வளப்படுத்தி
யவர் **பீற்றர் ஹென்றிக்
லிங்க்** என்னும் சுவீ
டிஷ்காரர்.
அவர் ஜிம்னாஸ்டிக்
கில் ரிதம் (Rhytham)
எனப்படும் காலச்
சீரையும் லாவகத்
தன்மையையும்
(Fluidity) புகுத்தி
இவ் விளையாட்டிற்கு
இரண்டாவது அம்
சம் ஒன்றை ஏற்படு
த்தினார்.

ஜிம்னாஸ்டிக், ஜேர்மனி பூரவும்
பரவி, பின் அமெரிக்காவுக்குச்
சென்றது. அமெரிக்க, பிரித்தா
னிய இராணுவப் பயிற்சிகளிலும்
இது சேர்த்துக் கொள்ளப்பட்டது.
பின் பிரான்ஸ், சுவிட்ஸலாந்து...
என ஐரோப்பா பூராவும் பிரபல்
யம் பெற்றது.
1881ல் ஜிம்னாஸ்டிக்கிற்கான
சர்வதேசப் போட்டிகளை நடத்து
வதற்கான "ஃபெடரேஷன் ஒஃப்
இன்டநேஷனல் ஜிம்னாஸ்டிக்"
(FIG) என்ற அமைப்பு நிறுவப்
பட்டது.

1896ல் ஒலிம்பிக் போட்டிகளில்
ஜிம்னாஸ்டிக் சேர்த்துக் கொள்
ளப்பட்டதும் அதற்கு ஒரு பெரிய
எழுச்சி உலகெங்கும் ஏற்படத்
தொடங்கி விட்டது. ஒலிம்பிக்
கில், ஆரம்பத்தில் ஆண்களுக்
கான ஜிம்னாஸ்டிக் போட்டிகளே
இடம்பெற்று வந்தாலும் 1936
முதல் பெண்களுக்கான போட்டி
களும் ஏற்படுத்தப்பட்டன.

ஆரம்பத்தில் ஒலிம்பிக் போட்டி
களில் ஜேர்மனி, சுவிஸ், இத்தா
லிய, சுவீடிஷ் வீரர்களே ஜிம்னா
ஸ்டிக்கில் முன்
னணி வகித்து
வந்தனர். 1950
முதல் ஜப்பான்,
சோவியத் யூனி
யன், கிழக்குநாடு
கள் ஆகியவை
முன்னணி இடத்
தைப் பிடித்துக்
கொண்டன.
1950 களிலிருந்து
தொடர்ச்சியாக
மிகத் திறமையான
ஜிம்னாஸ்டிக் சாகசங்
களைப் புரிந்துவந்த
பெண் வீராங்கனை
கள் சிலரால் ஜிம்னா
ஸ்டிக் உலகெங்கும்
மக்கள் மத்தியில் பெரும்
பிரபல்யம் பெற்றது. 1970
களில் உலகப் புகழ்
பெற்ற ரஷ்ய ஜிம்னா
ஸ்டிக் வீராங்
கனை **ஓல்கா
கோபட்** மற்றும்
ரோமானியவீரா
ங்கனை **நடியா
கொமானிஸ்** ஆகி
யோர் இதில் மிக
உச்ச சாகசங்களைச்
செய்து இன்றும் பேசப்
படுபவர்களாக இருக்கி
றார்கள்.

என்ன, இத்தகைய உடல்
வளைப்புச் சாகசங்களைக்
காண ஏதோ எமக்குச் சற்று
நெருக்கமான கலையொன்றின்
ஞாபகம் ஏதும் வரவில்லையா?

ஆம், யோகாசனத்தைத்தான்
குறிப்பிடுகிறேன். அதிலும் காலை
கழுத்தூடாக மாலைபோல் போட்
டுக்கொண்டு சர்வ சாதாரணமா
கப் புத்தகம் படிப்பவர்களையும்
நட்டுவாக்காலி போல் தரையில்
மார்பால் ஊர்ந்தபடி காலைத்
தலைமேல் உயர்த்திப் படமெ
டுத்து நிற்பதும், நீரின்மேல் பத்
மாசனம் கட்டி இருந்தபடி மிதப்
பதும்....
ஆம், எம்மவர்களும் சளைத்த
வர்களில்லைதான். ஆனால் ஒரு
வித்தியாசம் என்னவென்றால்
நாம் அதிகம் ஆன்மீக ரீதியில்
இதனைச் செய்கிறோம். அத்து
டன் மருத்துவக் குணாம்சத்
தையும் இதில் உள்ளடக்கியுள்
ளோம்.
ஆனால் ஜிம்னாஸ்டிக்கோ ஒரு
விளையாட்டாக, ஆரோக்கிய
உடற் பயிற்சியாக மேற்கொள்
ளப்படுகிறது. அத்துடன் யோகா
சனத்தில் ஆசனங்கள் பிரதான
மாக இருக்க, இங்கு கால லயத்
துடனான இயக்கம் இணைந்து
ள்ளது.
நாமும் இவ்வகையில் எமது
யோகாசனக் கலையையும் பரவ
லான ஜனரஞ்சகமான ஆர்வ
மூட்டுகின்ற ஒன்றாக மாற்றிய
மைத்தால் உலகம் எம்மையும்
வியந்து திரும்பிப் பார்க்குமல்
லவா!

– கௌசல்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழர்களின் உப கலாசாரம்

# லொட்ஜ்

### புல்லாய்..... பூடாய்..... புழுவாய்.....

– இரட்டைச் சூரியன்

**எல்லோரும் தமிழ் போராட்டத்தைப் பற்றியும் இலங்கை இராணுவத்தின் கெடுபிடிகளைப் பற்றியும்தான் பேசுகின்றனரே யொழிய தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இப்படியானதொரு உப கலாசாரத்தைப் பற்றி - அதன் தாக்கம் பற்றி யாரும் கண்டு கொள்ளவில்லை.**

சூரியன் கொதி தணிந்து புன்னகை தவழவிடும் மிருதுவான பொன்னந்தி மாலை நேரம்.....

அந்தச் சுந்தர சுகம் தரும் சுகமான காற்றைச் சுவாசிப்பதற்கென்றே உலா வருபவர்கள் நம்மில் ஏராளம்.

அதிலும் கொழும்புப் பகுதியில் கடற்கரையோரமாக உடற்பயிற்சி செய்வதற்கும் காற்று வாங்குவதற்கும், ஏன் காதல் ஜோடிகளின் ஊடலுக்கும் தேடலுக்கும் கடற்கரைப் பகுதியே களமாய் அமைந்திருக்கும்.

இந்தப் பொதுவான உல்லாச சனத்திரள்களுக்கிடையே, கண்களில் ஒருவிதப் பீதி கலந்த சற்று வித்தியாசமான ஒரு கூட்டம்...

இரயில் தண்டவாளங்களிலும் புற்தரை மேடுகளிலும் அமர்ந்திருந்தபடி வெட்டிப் பேச்சு பேசி, அல்லது மௌனமாக கடலை வெறித்துப் பார்த்தபடி அல்லது இலக்கின்றி கடற்கரை மண்ணில் அங்குமிங்கும் அலைந்தபடி, நாளாந்தம் பொழுதைக் கழித்து வரும் ஒரு கூட்டம்...

தினமும் சுமார் 4.00 மணிக்கு இந்தக் கூட்டம் கடற்கரையோரமாக உள்ள இரயில் பாதைக்கு வந்து விடுவார்கள்.

தலை சீவி, பவுடர் பூசி ஆனால் சாதாரணமான வீட்டு உடையோடு இவர்கள் கிளம்பி விடுகின்றனர். மாலைப் பொழுதை இப்படிக் கழிக்கும் இவர்கள் காலைப் பொழுதில் அநேகமாக கோயில்களுக்குத் தான் செல்கின்றனர்.

அங்கும் பொழுதைக் கடத்தவே செல்கின்றனர்.

வெள்ளவத்தையிலிருந்து கொள்ளுப்பிட்டி வரையில் கரையோர இரயில் வீதியில் மாலையிலும் கோயில்களில் காலையிலும் பொழுதைக் கடத்தும் இவர்களைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்ந்த போது பல அதிர்ச்சித் தகவல்களை அறிந்தோம்.

இவர்கள் யாவரும் தமிழர்களே! இவர்கள் எங்கிருந்து கிளம்பி வருகிறார்கள் இப்படி புற்றீசல்போல...? அந்தப் பிரதேச தமிழ் நண்பரொருவரிடம் விசாரித்தபோது,

“அவர்களைப் பின்தொடர்ந்து செல், புரியும்'' என்றான்.

நண்பன் சொன்னபடியே அவர்களை அறியாமலே நான் பின்தொடர்ந்தேன்.

பிரிந்து பிரிந்து சென்ற கூட்டத்தினரில் ஒரு கூட்டம் வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியால் சென்று ஒரு கேற்றினூடாக உட்சென்றபோது....

என் கண்களையே நம்ப முடியவில்லை. நான்கு தலைகள் மட்டும் தரை மட்டத்திலிருந்த ஒரு ஜன்னலினூடே வெளியே தெரிந்தன, - உடம்பு துண்டிக்கப்பட்ட தலைகள் போல.

சுற்றும் முற்றும் பார்த்தபோது நான் கண்ட அந்தப் பெயர்ப் பலகையில் எழுதப்பட்டிருந்தது....

“..... லொட்ஜ்''

என்ற வாசகம். (லொட்ஜின் முழுப் பெயரை தணிக்கை செய்ததற்கு மன்னிக்கவும்) மிக அருகில் சென்று பார்த்தபோது நான்கு தலைகளும் நிமிர்ந்து என்னைப் பார்த்தன.

அப்போதுதான் அவர்கள் பரண் அமைத்து, அதில் குப்புறப் படுத்துக்கொண்டே வீதியை நோட்டமிட்டுக் கொண்டிருப்பது புரிந்தது.

மூடிய அறைக்குள் முடங்கிக் கிடக்க முடியாமல், வெளியே நினைத்தபடி திரியவும் இயலாமல் கொழும்பில் வெறுமனே இருந்து தீர வேண்டுமென்பதற்காகத் தஞ்சமடைந்துள்ள புகலிடங்கள்தான் இந்த லொட்ஜ்கள்.

யுத்தத்தின் ஆரம்பமே இந்த லொட்ஜ்காரர்கள் அதிகரிப்பதற்கான காரணம். ஆனால் அன்றிலிருந்து எல்லோரும் தமிழ் போராட்டத்தைப் பற்றியும் இலங்கை இராணுவத்தின் கெடுபிடிகளைப் பற்றியும்தான் பேசுகின்றனரேயொழிய தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இப்படியானதொரு உப கலாசாரத்தைப் பற்றி-அதன் தாக்கம் பற்றியாரும் கண்டு கொள்ளவில்லை.

லொட்ஜ்களில் தங்கியிருக்கும் இந்த மக்கள் அன்றாட அவஸ்தைகளால் உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். சீரழிகின்றனர், சித்திரவதைப்படுகின்றனர்.

இந்த வதை, யுத்தத்துள் நேரடியாகச் சிக்கியுள்ளவர்கள் படுவதில் எந்தவிதத்திலும் குறைவானதல்ல என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்வதில்லை.

முழுக்க முழுக்க பணம் கறக்கவே ஆரம்பிக்கப்பட்ட இந்த லொட்ஜ்கள் சில மாதங்களுக்கு முன் பல்கிப் பெருகியிருந்தன. லொட்ஜ்களில் ஆயுதங்களுடன் சிலரை கைது செய்ததுடன் அவை சற்றுக் குறைந்து விட்டன என்கிறார் பம்பலப்பிட்டியில் லொட்ஜ் நடத்தும் ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் கூட புறக்கோட்டைப் பகுதியிலுள்ள சில மொத்த வியாபார வெங்காயக் கடைகள் நஷ்டமேற்படும் பொழுது திடீர் லொட்ஜ்களாகப் பரிணாமமடைகின்றன.

அங்கு வெங்காய வாடையின் மத்தியில் நெரிசல் மிக்க பெட்டி அறைகளுக்குள் பூட்டப்பட்டவர்களாகவே தங்க வேண்டிய நிர்ப்பந்தம் வதிவாளர்களுக்கு.

ஏன் இவ்வாறு மட்டமாக நடந்து கொள்கிறீர்கள் என்று இவ்வகை லொட்ஜ் உரிமையாளர் ஒருவரிடம் கேட்டேன்.அதற்குஅவர் "நாங்கள் இந்த வசதிகளையாவது செய்து கொடுக்கிறோமே... அதுவே ஒரு சேவைதானே! இதுவும் இல்லாவிட்டால் இவர்கள் எங்கு போவது?" என்று திருப்பிக் கேட்கிறார்.



"லொட்ஜ்களில் தங்குபவர்கள் ஒருபோதும் வீடுகளுக்கோ, உறவினர்களின் வீடுகளுக்கோ சென்று தங்கமாட்டார்கள்." இது இன்னுமொரு லொட்ஜ் உரிமையாளர் கூறியது. "....ஏனென்றால் அவர்களுக்கு இங்கு பூரண சுதந்திரம் இருக்கிறது... வீடுகளில் இல்லை. அநேகமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே லொட்ஜ்களில் தங்குகிறார்கள். யாழ்ப்பாணத்தில் வெளியே நடமாடுவதற்கிருந்த கட்டுப்பாடுகள் இங்கில்லை. கொழும்புச் சூழல் அடுத்த வீட்டில் குடியிருப்பவர் யாரென்று கூட ஆராயாத சூழல். இந்தச் சூழலில் எவர் எப்படிப் போனாலும் கவனிப்பதற்கு யாரும் இல்லை." என்கிறார் அவர்.

"உண்மையில் லொட்ஜ் எமது சமூகத்தில் பாரிய கலாசார தாக்கத்தை உண்டுபண்ணி விட்டது. ஆனால் இது நாமாக ஏற்படுத்திக் கொண்ட விருப்பமான சூழலல்ல. நாம் இதற்கு, -இப்படியான வாழ்க்கைக்குத் தளப்பட்டிருக்கிறோம். லொட்ஜ் வாழ்க்கையில் அனுபவித்தேயாக வேண்டிய சில சீரழிவுகள் எமது பெண்களுக்கும் ஏற்பட்டு விட்டது" என்றார் ரகுவரன் என்பவர்.

"அண்மையில் நான் தங்கியிருந்த லொட்ஜ் ஒன்றில் வெளிநாட்டிலுள்ள தனது மகனுக்கு தெரிவு செய்த மணப் பெண்ணையும் அங்கு அனுப்புவதற்காக கொழும்புக்குக் கூட்டி வந்து தங்கியிருந்தார் ஒருவர்.

மாமனும் மருமகளும் ஆரம்பத்தில் தனித்தனி அறைகள் எடுத்துத் தங்கினார்கள். வெளிநாட்டு விஷயம் இழுபடவே செலவைக் குறைக்குமுகமாக பின்னர் இருவரும் ஒரே அறையில் தங்கினர். நடந்த விபரீதம் என்னவென்றால மகனுக்கு மனைவியாக அழைத்து வரப்பட்ட அந்தப் பெண் மகனின் தந்தையாலேயே கர்ப்பமானார்.

விரும்பியோ விரும்பாமலோ நடந்துவிட்ட இந்த விபரீதத்தை தந்தை மென்று விழுங்கியபடி மகனுக்குத் தெரிவித்தார். அவனோ, 'பரவாயில்லை அவளை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு வேறு ஒருத்தியைப் பார்த்து அனுப்புங்கள்' என்று சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டான்." இப்படி ரகுவரன் சொல்லும்போது அவரது கண்களில் 'நாம் என்னவாகிக் கொண்டிருக்கிறோம்...?' என்ற கவலை தொனித்தது.

அண்மையில் நடந்த மற்று மொரு சம்பவத்தை ரகுவரனின் நண்பர் சொன்னார்: கொட்டாஞ்சேனைப் பகுதியிலுள்ள லொட்ஜ் ஒன்றில் பல மாதங்களாக தங்கியிருந்த ஒரு பெண்ணின் அறையை லொட்ஜ் உரிமையாளர் வெளிப்புறத்தில் மூடிவிட்டு, சத்தம் போட்டு ஏனையவர்களைக் கூப்பிட்டு அந்தப் பெண்ணை அவமானப்படுத்தினார். அந்த அறையில் இன்னொரு ஆடவர் இருப்பதாகப் பழிசுமத்தினார். ஆனால் அந்தப் பெண்ணோ சர்வ சாதாரணமாக, "இந்த லொட்ஜ்காரர் என்னைத் தொந்தரவு செய்து வந்தார். நான் அவருக்கு இணங்கவில்லை. அதனால்தான் இப்படிச் செய்தார்" என்றாள்.

எங்கே, எப்பொழுது பொலிசார் தூக்கி விடுவார்களோ என்ற பயத்திலேயே எப்பொழுதும் லொட்ஜிலுள்ளவர்கள் இருக்கிறார்கள். பாவம், இவர்களைப் பிடித்துச் செல்லுங்கள் என்று பொலிசாரிடமே காட்டிக் கொடுக்கும் (சில) லொட்ஜ் உரிமையாளர்களின் கைகளில்தான் இவர்கள் சிக்கியிருக்கிறார்கள் என்ற உண்மை இவர்களுக்குத் தெரியாது.

அண்மையில் லொட்ஜ் ஒன்றை ஆரம்பித்த எனது நண்பரொருவர் மிக மிக இரகசியமாகச் சொன்ன தகவல் இது:

லொட்ஜ் திறப்பதற்கு லைசென்ஸ் வாங்குவது முதல் லொட்ஜுக்கு வருபவர்களைப் பதிவு செய்வது வரை பொலீஸ் மேலிடத்துக்கும் லொட்ஜ் உரிமையாளர்களுக்குமிடையில் இரகசிய ஒப்பந்தம் நடக்கிறது. லைசென்ஸ் எடுக்க பெருந்தொகைப் பணம் செலவிட வேண்டும். அத்துடன் பொலீசுக்கு மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகை பணமாகவும், போத்தல்களாகவும் ஏன் உடற் தினவைத் தீர்க்கும் ஆசை நாயகிகளாகவும் சப்ளை செய்ய வேண்டும்.


உரிமையாளர்களுக்கும் பொலீசாருக்கும் எவ்வளவுக்கெவ்வளவு நெருக்கம் இருக்குமோ அந்தளவுக்கு பொலீசில் கெடுபிடி, பதிவுப் பிரச்சினைகள் குறைவாக இருக்கும் என்றார் லொட்ஜ் உரிமையாளரான அந்த நண்பர்.

இவர்கள் பொலீசில் சொன்னவுடன் லொட்ஜுக்கு இ.போ.ச. பஸ்ஸில் வந்து அங்கு பேந்தப் பேந்த முழித்தபடியிருக்கும் இளம் வயதினரைத் திரளாக அள்ளிக் கொண்டு - சந்தேகத்தின் பேரில்

## இப்படிச் சொல்லலாமா?

இன்று ஹெயர் ஸ்டைல் பல விதம். நம் தலையிலுள்ள முடியை எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் யார் என்ன சொல்லப் போகிறார்கள். முடி வெட்டைப் பார்த்து எமது தலைக்குள் உள்ளதை யாரும் புரிந்து கொள்ள முடியுமா என்ன?

எமது நாட்டில் சிங்க-புலி சிந்தனை உள்ளவர்கள், வேண்டுமானால் தத்தம் தலைகளில் இப்படியான டிசைன்களில் சிங்க-புலி முகங்களை வரைந்து வைத்துக் கொண்டால் அந்த கருத்துக் களோடு சம்பந்தம் இல்லாதவர்கள் யார் என்பதை அறிந்து கொள்ளுவது இலகுவாக இருக்கும் அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைது செய்வதாகத் தெரிவித்து விட்டுப் போய்விடுவார்கள். பின் லொட்ஜ் உரிமையாளர்கள் போலி இரக்கத்துடன் அவர்களைச் சென்று பார்வையிடுவார்கள். "எப்படியாவது எங்களை வெளியே எடுத்து விடுங்கள்" என்று மன்றாடுவார்கள் கம்பிகளுக்குக்குப் பின் அடைபட்டிருப்பவர்கள். "சரி சரி பெரியவரிடம் பேசிப் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு நேரம் கழித்து வந்து சொல்வாராம், பணம் தேவைப்படும் என்று. எப்படியோ, எவ்வளவு கொடுத்தோ வெளியே வரவே முயற்சிப்பதால் கேட்கும் தொகையைக் கொடுத்துவிட்டு அவர்கள் வெளியே வருவார்கள். இதில் பொலீசுக்கு ஒரு தொகை போகும். மீதி இவர்கள் வைத்துக் கொண்ட கொமிஷன்.

லொட்ஜ்வாசிகள் தொண்ணூறு சதவீதமானவர்கள் வெளிநாடு செல்ல, அதுவும் கள்ள மார்க்கமாகச் செல்லவே வந்திருப்பவர்களாகையால் தலைநகரில் நிற்பதற்குச் சரியான காரணம் சொல்ல முடியாதவர்களாகவே இருப்பார்கள். அத்துடன் அவர்களின் ஆவணங்களும் பயணத்துக்கேற்ற மாறுதல்களுடனேயே இருக்கும். பயணத்துக்கான பணமும் கைவசம் இருக்கும். இதை நன்கறிந்த இந்த லொட்ஜ் உரிமையாளர்களும், பொலீசாரும் அவர்களை மிரட்டிப் பணம் பறிக்க இப்படியொரு கீழ்த்தரமான தந்திரத்தைக் கையாளுகிறார்கள்.

குறைந்தபட்ச தொகையாக ஒரு ஆளிடம் 1000 ரூபாவை அறவிடுவார்கள். பொலீசுக்கு 500 ரூபா லொஜ்காரருக்கு 500 ரூபா. இப்படி லொட்ஜில் தங்குபவர்களை கைது செய்ய வைத்து அதில் கிடைக்கும் கமிஷன் தொகையாக தினம் தினம் பல்லாயிரம் ரூபாய்களை நயவஞ்சகமாச் சுரண்டி எடுக்கும் அநேக லொட்ஜ் உரிமையாளர்களும் தமிழர்களே. அநேகமான சின்னச் சின்ன லொட்ஜ் உரிமையாளர்கள் சம்பாதிக்கும் விதமே இதுதான் என்றார் எனது நண்பர்.



சிலர் தமது வீடுகளையும், கடைகளையும் லொட்ஜ்களாக மாற்றி சிறிய அறைகளை பலகையினால் அடைத்து வாடகைக்கு விடுகிறார்கள். பாய் போட்டுப் படுப்பதானால் 75 ரூபாவும் கட்டில் படுக்கையாயின் 125 ரூபாய் வரையிலும் இணைந்த குளியலறையுடன் 200 வரையிலும் அறவிடுகிறார்கள். சொகுசு கூடக்கூட நாளொன்றுக்கு 500 ரூபா வரையில் அறவிடுவார்கள்.

அல்லாமல், மாதாந்த வாடகை செலுத்தி இருப்பவர்களும் இருக்கிறார்கள். சமைத்துச் சாப்பிடுவது தடையென்றாலும் சில லொட்ஜ்களில் இதற்கும் அனுமதியுண்டு. சில லொட்ஜ்களில் பிரதேச ரீதியாகவே ஆட்களைச் சேர்த்துக் கொள்கின்றனர்.

நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானவர்கள் வெளிநாடு செல்லவோ, அல்லது வெளிநாட்டிலிருந்து வந்தவர்களைச் சந்திக்கவோதான் லொட்ஜ்களில் தங்குகிறார்கள். வெளிநாட்டு முகவர்களுக்கும் லொட்ஜ் உரிமையாளர்களுக்குமிடையில் உறவு மட்டுமல்ல சின்ன ஒப்பந்தம்கூட இருக்கும். சின்னத் தொகையொன்று முகவர்களுக்குச் செல்கிறது.

ஏனெனில் முகவர்கள் சிபார்சு செய்யும் லொட்ஜ்களிலேயே அதிகமானவர்கள் தங்குவார்கள். பொதுவாக, வெளிநாடு செல்ல வந்தவர்களிடமிருந்து அதற்கான பெருந்தொகைப் பணத்தையும் முகவர்கள் முன்கூட்டியே வாங்கி விடுவார்கள். அதை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்திவிட்டு சில நாட்களுக்கு இவர்களைத் தாமதப்படுத்திவைப்பார்கள். அதனால் லொட்ஜ்களுக்கு வருமானம் அதிகரிக்கும்.

அதுமட்டுமல்ல சில வேளைகளில் வெளிநாடு செல்ல வேண்டியவர்கள் அவசரப்படுத்தினால் மெதுவாகப் பொலீசில் பிடித்துக் கொடுக்குமாறு முகவர்கள் லொட்ஜ் உரிமையாளர்களிடம் இரகசியமாகச் சொல்வார்கள். பொலீஸ் கைது செய்த "டென்ஷனில்" இன்னும் 10 - 15 நாட்களுக்கு இவர்களது பயணம் தடைப்படும்.

ஆனால் இது தற்போது அநேகமாகக் குறைந்துவிட்டது. காரணம் இப்பொழுது டிக்கற்றைக் கையில் கொடுத்த பின்தான் பணம் அறவிடப்படுகிறது. அதனால் அந்தத் தொல்லை ஓரளவு குறைந்திருக்கிறது" என்றார் நண்பர்.

அநேக லொட்ஜ்களின் முன்னால் கொம்யூனிகேஷன்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களும் பணம் கறக்கும் இயந்திரங்களாகவே உள்ளனர். வரையறையின்றி தொலைபேசி அழைப்புக்களுக்குப் பணம் அறவிடுவதோடு உள்வரும் அழைப்புக்களுக்கும் கூடுதலாக பணம் அறவிட்டுக் கொள்கிறார்கள்.





இப்படியான லொட்ஜ்களில் ஏன் மீண்டும் மீண்டும் நம்மவர் சென்று அடைபடுகிறார்கள், அவலப்படுகிறார்கள்? என்ற கேள்வி எவருக்கேனும் எழுந்தால் அவர்கள் தமிழ் மக்களின் அரசியல் சமூக வாழ்வின் யதார்த்த நிலையைப் புரியாமல் "மாடி ஜன்னலூடாக எட்டிப் பார்ப்பவர்களாகவே" இருப்பர். முதலில் கொழும்பின் சாதாரண ஹோட்டல்களில் தங்கினாலும், நாட்கள், கிழமைகள், மாதங்களாகத் தங்கியிருக்க வேண்டிய இவர்களுக்கு பெருந் தொகைப் பணம் அநியாயமாய் அழியும். தங்கள் வெளிநாட்டுப் பயணத்திற்காக எத்தனையோ சிரமப்பட்டு பல சொத்துக்களை விற்று கடனெடுத்து பணத்தை திரட்டியிருக்கும் இவர்கள் அதை கண்மூடித்தனமாக அழிக்க ஒப்புக் கொள்வார்களா? எனவேதான் சிக்கனமாக, எப்படியோ இந்தக் கொழும்பு "ட்ரான்சிஸ்ட் பீரியட்டை" பல்லைக் கடித்தபடி கடத்தி விட்டு வெளிநாடு சென்றுவிடவே லொட்ஜ் வாழ்க்கை "அஞ்ஞாத வாசத்திற்குள்" புகுகிறார்கள். இதற்கு அப்பால் இன்று இவர்களை இந் நிலைக்கு உள்ளாக்கிய அரசியற் பின்னணியை நாம் விளங்கிக் கொள்வதே முக்கியம். "யுத்தம்" என்ற ஒற்றைச் சொல் மட்டுமல்ல இங்கு காரணம். யுத்தம் ஒரு விளைவேயன்றி காரணமல்ல. மக்களின் அவலங்களை ஆதாயமாக்கும் ஒரு வக்கிரம் வாய்ந்த அரசியல் இதன் அடியோட்டமாக உள்ளது. புலம்பெயர்வு வாழ்வு ஒன்றையே எஞ்சியிருக்கும் ஒரு சுபீட்சமாகக் காணும் இந்த மொத்தமான ஒரு சமூக மனோபாவம், அனைத்துக் கதவுகளும் அடைக்கப்பட்ட - மனித குணாம்சங்களின் சுயாதீனம் மறுக்கப்பட்ட எம் அரசியல் சூழலின் விளைவென்பதே உண்மை. இந்த அவல வாழ்வு ஒழியும் காலம் என்று வருமோ...! இந்த வக்கிர அரசியல் ஒழியும்வரை காத்திருப்பதை - இந்த வேதனை வாழ்வை அனுபவித்தே தீருவதைத் தவிர இவர்களுக்கு என்ன வழி...? ●







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை கிரிக்கெட்

# சனத்தின் வருகை

இலங்கை கிரிக்கெட் வீரர்களும், கிரிக்கெட்டின் ரசிகர்களும், பொழுது போவதற்காக கிரிக்கெட்டைப் பற்றி ஓயாமல் பேசிக்கொண்டிருப்பவர்களும் கூட அண்மைக் காலத்தில் ஒன்றன் பின் ஒன்றாக பல அதிர்ச்சிகளையே சந்தித்து வந்துள்ளனர். இதனால் சில வேளைகளில் இவர்கள் மகிழ்ச்சியும் சில வேளைகளில் வேதனையும் அடைபவர்களாக இருக்கின்றனர்.

இந்த அதிர்ச்சித் தொடரானது இலங்கை கிரிக்கெட் ரசிகர்கள் பலரின் இதயங்களைக் கொள்ளை கொண்ட துடுப்பாட்ட வீரர் ரொஷான் மகாநாமவின் ராஜினாமாக் கடிதத்துடன் மேலும் ஒன்று கூடியது.

ஐவா (AIWA) கிண்ணத்துக்காகச் செல்லவிருந்த வீரர்கள் 14 பேரின் பெயர்ப் பட்டியல் அறிவிக்கப்பட்டபோது அதில் மகாநாமவின் பெயர் இடம்பெறவில்லை. அதைக்கண்டு மகாநாம ரசிகர்கள் ஆடித்தான் போனார்கள்.

நெருக்கமானவர்களிடமிருந்து மகாநாமவிற்குத் தொலைபேசி அழைப்புக்கள் பறந்தன. ஆனால் சற்று நேரத்தின் பின் அவரைத் தொலைபேசியில் எவராலும் பிடிக்க முடியவில்லை. ஆனால் மறுநாள் மகாநாம கிரிக்கட் தெரிவுக் குழுவுக்கு தகுந்த பதிலடி கொடுத்தார்.

மகாநாம தூக்கிப் போட்ட குண்டு எல்லோரையும் அதிரவைத்தது. தனது ராஜினாமாக் கடிதத்தை தெரிவுக்குழு அதிகாரிகளிடம் கொடுத்தாரென்பதை விட ஒரு வகையில் முகத்தில் தூக்கியெறிந்தார் என்றால் சாலப் பொருந்தும்.

அவரது இந்தத் திடீர் முடிவு அவரின் சுய கௌரவத்தையும் ஆளுமையையும் காப்பாற்றியது என பலர் கூறுகின்ற வேளை, சிலர் அவசரப்பட்டு விட்டார் என்றும் கவலை தெரிவித்தனர்.

எது எப்படியிருந்தாலும் நாம் என்ன விளக்கத்தைக் கொடுக்க முனைந்தாலும் மகாநாம விலக்கப்பட்டார். அதற்குப் பதிலடியாக மகாநாம இலங்கை கிரிக்கெட்டிலிருந்தே விலகினார் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

33 வயது நிரம்பிய போதும் பந்துத் தடுப்பில் (Fielding) மிகச் சிறந்த திறமைகளைக் காட்டிய இவரை, தென்னாபிரிக்க அணியில் ஜோன்டிரோட்ஸை வைத்திருப்பது போல் பந்துத் தடுப்புக்காக மட்டுமேனும் வைத்திருக்கலாமல்லவா? என்ற கேள்வி எழும்பத்தான் செய்கிறது. எப்படியோ "இதுதான் நான் வாழ்க்கையிலேயே எடுத்த கடினமான முடிவு" என அவுஸ்திரேலியாவுக்குப் பயணமானார் மகாநாம. மீண்டும் வருவீர்களா எனக் கேட்டதற்கு காலம் பதில் சொல்லும் என்று கூறிவிட்டு பறந்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்து காத்திருந்த அடுத்த அதிர்ச்சி இலங்கை அணியின் புகழ்வாய்ந்த கப்டன், உப கப்டன் பதவிகளை வகித்த அர்ஜுன ரணதுங்கவும், அரவிந்த டி சில்வாவும் பத்திரிகைகள் ஏற்கனவே ஆரூடம் எழுதியபடி சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து கொத்தி விடப்பட்டார்கள் (Axed). அதற்குக் காரணங்களும் முன்வைக்கப்பட்டன.

☞ அணிக்கு புது ரத்தம் பாய்ச்சப்படவேண்டியஅவசியம்.

☞ கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் இவர்கள் இருவரும் சிறப்பாக துடுப்பெடுத்தாடவில்லை.

☞ உலகக் கிண்ணப் போட்டிகளின்போது இவ்விருவரின் தலைமைத்துவம் சோபிக்கவில்லை.

☞ இருவரும் முதிர்ந்துதளர்ந்து விட்டனர், தொந்திவைத்துவிட்டது.

மேலே சொல்லப்பட்ட நாலாவது காரணம் வெளிப்படையாகச் சொல்லப்படாவிட்டாலும் இதுவும் தெரிவுக் குழு அங்கத்தினரிடை இருந்ததாகவும் அங்கு பேசப்பட்டதாகவும் விவரமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. இருந்திருக்கலாம் என நாம் கூட ஊகிக்கலாம்.

இப் பெரும் வீரர்களின் ஒதுக்கலை அடுத்து கிரிக்கெட் அணியும் ரசிக வட்டாரங்களும் ஒரு முறை ஆடிப்போனாலும் ஒருவாறு தம்மைச் சுதாகரித்துக் கொண்டனர்.

அடுத்த கேள்வி இங்குதான் தொடங்கியது. யார் அடுத்த தலைவர்? உப தலைவர்? இவ்விரு வெற்றிடங்களையும் நிரப்புவதற்குப்



பொருத்தமானவர்கள் யார் என பலரும் தலையைப் பிய்த்துக் கொண்டனர். ஆனால் முதல் கேள்விக்கு விடை ஓரளவுக்கு பலருக்குத் தெரிந்துவிட்டது.

*Master Blaster* என அழைக்கப்பட்ட அணிக்குள் அதிகம் எவரோடும் சச்சரவுகளுக்குப் போகாத சனத் ஜயசூரியவே அணித் தலைவராகத் தெரிவு செய்யப்படலாம் என்பது உறுதியாகி விட்டது. உப தலைவர் யார் என்பதில் களுவித்தாரணவா? முரளியா? எனப் பலரும் மண்டையைப் போட்டுக் குழப்புகையில் எதிர்காலத் தலைமைத்துவம் என்பதை மனதில் வைத்து ஒரு

## சறுக்கிய சார்ஜா

சார்ஜாவில் நடைபெற்ற கொகாகோலா கிண்ணத்துக்கான ஒரு நாள் சர்வதேச போட்டித் தொடரில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியிடம் ஒரு போட்டியில் சம நிலையையும் ஒரு போட்டியில் தோல்வியும் இறுதிப் போட்டியில் படுதோல்வியும் கண்டு கொகாகோலா கிண்ணத்தை பாகிஸ்தானுக்கு தாரைவார்த்துக் கொடுத்தது. இதில் அரவிந்தவின் ஆட்டமிழப்பும், களுவித்தாரணவின் ஆட்டமிழப்பும் நடுவர்களின் தீர்ப்பில் பெரும் சர்ச்சைக்குள்ளானது தெரிந்ததே. அணித் தலைவர் சனத், வாஸிம் அக்ரமின் முதலாவது ஓவரில் நான்காவது பந்தில் எதுவித ஓட்டமும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

ஆனாலும் தோல்விக்கு பொதுவான ஒரு காரணம் சொல்லப்படுகிறது: அதாவது திறமையான, துடுப்பாட்டத்தில் வல்லவராக விளங்கியவர்களை அணியின் தலைவராக நியமிப்பதால் அவர்களுக்கு அழுத்தம் கூடி ஆட்டத்தை சரிவர ஆட முடியாமல் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கின்றனர். இந்த வரிசையில் பிரையன் லாரா, சச்சின் டெண்டுல்கர் போன்றோரோடு சனத்தும் இப்போது இணைந்துள்ளார். அதே அழுத்தம் பாகிஸ்தான் அணித் தலைவர் வாஸிம் அக்ரமுக்கும் தான் இருக்கிறது. ஆனால் என்ன செய்ய, அவர் அதை மேவுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இளம் வீரர் மஹேல ஜயவர்தன உபதலைவராகிவிட்டார்.

சரி, இப்போது அர்ஜுனவிற்கும் அரவிந்தவிற்கும் என்னதான் நடக்கப் போகிறது?

அவர்களிருவருக்கும் ஆதரவாளர்கள் ஏராளம். அதைவிட அவர்கள் மீது பித்துப் பிடித்தவர்கள் ஏராளம், ஏராளம்.

சுமார் கடந்த 13 வருட கால தமது தலைமைத்துவ திறமைகளினாலும் சொந்த விளையாட்டுத் திறனாலும், ஒரு காலத்தில் தூசாக மதிக்கப்பட்ட இலங்கை அணியை எல்லோரும் மூக்கில் விரலை வைக்கும் அளவுக்கு மாற்றியவர்கள் அல்லவா அவர்கள்.

சரி... மாற்றினார்கள்தான். யார் இல்லையென்றார்கள்?

இவ்விருவரும் தம் 18 - 19 வயதுகளில் இருந்து விளையாடி அனுபவங்களைப் பெற்றவர்கள்தான். அப்படியானால் சாமர சில்வா, இந்திக்க டி சேரம், சுரேஷ் பெரேரா போன்றவர்கள் எப்போதுதான் அனுபவங்களைப் பெறுவது என்பதும் நியாயமான கேள்வியே. அதற்கு நல்ல களம் ஒரு நாள் சர்வதேச போட்டிகள் தான். எனவே இம்மூவரும் அணிக்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். மகிழ்ச்சி.

சனத்தின் தலைமையில் வெள்ளோட்டம் ஆரம்பமானது. அதிலும் அதிர்ச்சிதான். ஆனால், ஆனந்த அதிர்ச்சி.

அடிச்சானையா இந்தியாவுக்கு.... அதுமட்டுமா? ஒரு தடவைஅவுஸ்திரேலியாவிடம் தோற்றுப்போனாலும் இறுதிச் சுற்றில் அதைத் தோற்கடித்து உலக சாம்பியன்களை தலை குனிய வைத்து புதிய கப்டன் தூக்கினார் ஜவாகிண்ணத்தை.

அனுபவசாலிகள் இல்லாமல் முடியுமா? அது என்ன புது இரத்தப் பாய்ச்சல்? சனத்தால் சமாளிக்க இயலுமா? அது இது என்றெல்லாம் கேள்வியெழுப்பியவர்கள் வாயடைத்துப் போனார்கள்.

சரி, அனுபவமில்லைதான். ஆனாலும் இளம் ஆட்டக்காரர்களுக்கு சுயமாக ஆடுவதற்கு இடமளிக்காவிட்டால் அந்த அனுபவம்தான் எப்படி வரும் என்பதும் கேட்கப்பட வேண்டியதுதான்.

ஆனால் இந்தப் புது இரத்தக்காரர்கள் ஆடிய ஆட்டத்தையும் பெற்ற வெற்றியையும் பார்க்கும் பொழுது, அவர்களிடம் அனுபவமும் வீரமும் இருந்தும் அதை முழுமையாக வெளிப்படுத்த முடியாமல் இத்தனை காலம் இருந்தது பற்றிக் கேட்காமல் இருக்க முடியவில்லை. அது ஏன்?

அடுத்த அதிர்ச்சி ஒரு படி மேலே போனது. அது என்ன? ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் அர்ஜுனவையும் அரவிந்தவையும் கொத்திவிட்ட அதே தெரிவுக்குழு டெஸ்ட் போட்டிகளுக்கு மட்டும் அவர்களின் உதவியை நாடியது ஏன்?

டெஸ்ட் ஆட்டத்திற்கு அனுபவம் தேவை. அது இவ்விருவரிடமும் நிரம்பவே உண்டு என்பதை மறுக்க முடியாது. எனவே இவர்களை உள்வாங்கிக் கொண்டது தெரிவுக் குழுவின் தந்திரம் என சிலர் கூறினாலும் அது வெற்றிக்குரிய தந்திரமே.

கண்டி நகரிலே "கிரிக்கெட் மாட்ச்" என்ற பேச்செடுத்தாலே போதும், சொன்னால் நம்புங்கள் மழை கொட்டோ கொட்டென்று கொட்டும். கண்டிக்கும் மழைக்கும் அப்படியொரு ராசி. ஆனால் சனத்தின் அதிர்ஷ்டமோ என்னவோ அவரின் முதலாவது டெஸ்ட் போட்டிக்குமழையே பெய்யவில்லை. அங்குதான் இலங்கை அணி 17 வருடங்களாகக் காத்திருந்த வெற்றியும் கிடைத்தது.

ஆம், முதல் முறையாக ஒரு டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியாவை இலங்கை வென்றது. இந்த வரலாற்று பூர்வமான வெற்றியின்போது துடுப்பெடுத்தாடிய இலங்கை வீரர்கள் அரவிந்தவும் அர்ஜுனவும் என்பது நொந்து போயிருந்தவர்களுக்கு சுகமாக தடவிக்கொடுத்த செய்தியாக விருந்தது. அத்தோடு காப்டனாக நியமிக்கப்பட்ட முதல் டெஸ்ட் போட்டியிலேயே வெற்றியீட்டிய தலைவர்கள் பட்டியலில் லாவகமாய்ப் போய் ஒட்டிக்கொள்ளும் வாய்ப்பு சனத் ஜயசூரியவிற்கு கிட்டியது.

இந்நிலையில் புதிய தெரிவுக் குழு ஆரம்பத்திலிருந்தே மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் சரியானதென நிருபிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல அர்ஜுனவைப் பற்றி கன்னாபின்னாவென எழுதப்பட்ட பல விடயங்கள் சரிதானோ எனவும் தோன்றிவிட்டது.

மிகக் குறுகிய காலத்தில் இலங்கை அணிக்குள் இப்படியொரு மாற்றத்தை ஏற்படுத்திய தெரிவுக் குழுவை பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

எப்படியோ சனத் ஜயசூரியா உலகச் சாம்பியன்களை ஒரு நாள் போட்டியிலும், டெஸ்ட் போட்டியிலும் தோற்கடித்த மகிழ்ச்சியில் எல்லோரும் திளைத்திருந்த வேளை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல சார்ஜா கொகாகோலா கிண்ண ஒரு நாள் சர்வதேச போட்டியில் அரவிந்தவை மட்டும் அழைத்து சென்றது அர்ஜுன ஆதரவாளர்களை சீண்டித்தான் விட்டது.

சார்ஜாவிலும் உண்மையாக பிரகாசித்தவர்கள் புதியவர்கள் தான் என்பதும் உண்மை.

கிரிக்கெட் என்பதுகோடிகோடியாக பணம் புரளும் வியாபாரத்துடன்கூடியவிளையாட்டாகமாறியதன் பின் அதிர்ச்சிகளையும், அவலங்களையும் கண்டு ஆடிப் போவதில் அர்த்தமில்லை. பார்வையாளர்களும், ரசிகர்களும் ரசிப்பதோடுமட்டும்நின்றுவிடுவது தான் அவரவருக்கு நல்லது.

- கிங் ரட்ணம்

### கிரிக்கெட் கிசுகிசு

✍ அர்ஜுனவும் அரவிந்தவும் தங்களைஓரளவு அதிர்ஷ்டசாலிகளாகவே கருதிக் கொள்கிறார்களாம். காரணம் இந்தியாவிலும், புகழின் உச்சத்தில் இருந்த மொஹமட் அஸாருதீனின் முகவரிகூட இப்போது இல்லையே என்று பேசிக் கொள்கிறார்களாம்.

✍ அர்ஜுன ரணதுங்கவுக்கு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கிரிக்கெட் அறிவிப்பாளர் ஆகுவதற்கு அனுமதியை வழங்கி உள்ளதாம். அதுதான் பணம் வந்து குவியும் தொழிலாச்சே... கிரிக்கெட் விளையாட்டு போனால்தான் என்ன....







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசரீரி

- சுகன் -

தலைவர் உன்னதமானவரென்கிறான்:
இராணுவச் சிப்பாய்.

2ஆவது லெப்ரினன்ட் அவர்
மாமனிதர்களை உருவாக்குபவர் என்கிறான்.

மக்களின் துன்பங்களை அவர் மட்டுமே
போக்குவார் என்கிறான் தேசப்பற்றாளன்.

லெப்ரினன்ட் கேர்ணல் கூறுகிறான்:
விடுதலையின் பெறுமதி மக்களுக்குத்
தெரிய வேண்டுமென்பதற்காக அவர்களின்
துயரங்களை தலைவர் விட்டு வைத்திருப்பதாக.

முதிர் கல்விமான் அவர் அவதாரம் என்கிறான்.

குழந்தை அவரைக் கும்பிடச் சொல்கிறது

யுத்தக் குற்றவாளி என்று அசரீரி சொல்கிறது.



# மரணப் பிரகடனம்

- அஷ்ரஃப் சிஹாப்தீன் -



காலை பத்து முப்பதளவில்தான்
கண்டேன்

எதிரும் புதிருமாக
வேகமாய் வாகனங்கள் ஓடுகின்ற
தெருவின் நடுவில்
நீ செத்துக் கிடந்தாய்

நன்றியுடன் யார்வீட்டில் வசித்தாய்
என்றறியேன்
நடுத்தெருவில் வாழ்வை முடித்திருந்தாய்

நள்ளிரவிலோ
இருள் கலையா அதிகாலையிலோ
நீ இறந்து போயிருப்பாய்

வெளிச்சம்
உன் உடலை வெளிக்காட்டும் போதிருந்து
எத்தனையோ மனிதர்
உன் சாவை அறிந்திருப்பார்

வாகனத்தில் செல்கையிலும்
குடல்தள்ளிக் குலைந்திருக்கக் கண்டிருப்பார்
குறுக்காய்த் தெருவைக் கடந்தவரும்
உன் உடலைக் கண்டு
ஒதுங்கி நடந்திருப்பார்

ஆனாலும்-
நாயென்று யாரும் உன்னை
நடுத் தெருவில் கிடக்க விடமாட்டார்

நகரசபை ஊழியனோ
நல் மனங் கொண்டவனோ
நிச்சயமாய் அள்ளிப் புதைப்பான்

எலும்புக் கூடுகள் கொண்டு
மனித மரணம் அறியவரும் இந்நாளில்
ஊரறிய உலகறிய
உனது உடல்
உன் மரணத்தை பிரகடனம் செய்திருக்கிறது

எனவே
உனக்கு நேர்ந்த மரணம்
ஒன்றும் துர்ப்பாக்கியமானதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற



# ஊசி இல்லாமலே...

டொக்டர் எம். கே. முருகானந்தன் எம்.பி.பி.எஸ்.

**"டொக்டர் ஊசி பிளீஸ்"**

"டொக்டர் ஒரு ஊசி போட்டு என்ரை காய்ச்சலை உடனடியாக நிப்பாட்டுங்கோ. நாளைக்கு எனக்கு ஏ.எல். சோதனை"

"இவன் மருந்து குடிக்கச் சரியான கள்ளம். ஊசி போட்டு இவன்ரை சளியைக் குணப்படுத்துங்கோ"

"தாங்கேலாத நாரிப்பிடிப்பாய்க் கிடக்கு. ஒரு ஊசி போட்டு என்ரை வேதனைய உடன நிப்பாட்டுங்கோ"

இவ்வாறு தினமும் ஊசி போடுவிப்பதற்காக வைத்தியர்களை நாடுபவர்கள் அநேகம் பேர்.

இவையெல்லாம் ஊசி போடுவதற்கான அவசியமான காரணங்கள் தானா?

இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இலங்கை, இந்தியா, பர்மா, லத்தீன் அமெரிக்க நாடுகள் போன்ற வளர்முக நாடுகளில் போடப்படுகின்ற ஊசிகளில் பெரும்பாலானவை தேவையற்ற அற்ப காரணங்களுக்காகவே போடப்படுகின்றன.

நோயாளிகளின் வற்புறுத்தல்கள் முக்கிய காரணம்தான். என்றாலும் தேவையற்ற ஊசிகளால் ஏற்படும் அபாயங்கள் பற்றி நோயாளிகளுக்குப் புரிய வைக்காது நேரத்தை மிச்சம்பிடித்து, அவர்களின் தேவையற்ற கோரிக்கைகளுக்கு அடிபணிந்து பணப்பையை நிரப்பும் வைத்தியர்கள் மற்றொரு காரணம்.



இவற்றிற்கு மேலாக ஊசி போடாவிட்டால் நோய் குணமாகாது என அப்பாவி நோயாளிகளை பயங்கொள்ளச் செய்து சுலபமாக அதிக பணம் பிடுங்கும் போலி வைத்தியர்கள் மற்றொரு புறம்.

உண்மையில் மேற்கூறியது போன்ற காரணங்களுக்காக ஊசி போடுவது என்பது அவசியமற்றது மாத்திரமல்ல. உடல் நலக் கேடானது, ஆபத்தான பின் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்று சொல்லலாம்.

## ஊசி இல்லாமலே முடியும்

உடனடியாகக் காய்ச்சலைக் குறைக்கவும், நாரிப்பிடிப்பு, வயிற்றுவலி போன்ற பல்வேறு வலிகளை நிறுத்தவும் ஊசி தவிர்ந்த பல்வேறு வழிகள் இருக்கவே செய்கின்றன. மாத்திரைகள், சிரப் மருந்துகள், மலவாயினூடாகச் செலுத்தும் (*Suppositories*) மருந்துகள். நாக்கின் கீழ் வைத்து கரையவிடும் மாத்திரைகள் போன்றவற்றைச் சொல்லலாம்.

இவற்றைச் சரியான அளவிலும், சரியான நேர இடைவெளியிலும், சரியான தேவைக்காகவும் கொடுத்தால் ஊசி மருந்து போலவே உடனடியாகவும் வீரியமாகவும் குணப்படுத்த முடியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஊசி போடப்படுவதால் உண்டாகும் வலியிலிருந்தும் தப்பிவிடலாம்.

ஊசி போட்ட இடத்தில் சீழ் கட்டுதல், நரம்பு பாதிப்புற்று செயலிழத்தல், ஆபத்தானஒவ்வாமை(அலர்ஜி) போன்ற பல்வேறு விதமான பக்க விளைவுகளைச் சந்திக்க வேண்டியதில்லை.

மலவாயிலூடாகச் செலுத்தும் (*Suppositories*) மருந்துகளின் பயன் அதிகமானது. இலங்கையில் இவை கிடைத்தாலும் இன்னும் பெரியளவில் பெயர் பெறவில்லை.

உங்கள் குழந்தைக்கு கடும் சத்தி, எதைக் கொடுத்தாலும் சத்தி எடுக்கிறான். மருந்தை அறவே குடிக்கிறான் இல்லை. வில்லங்கப்படுத்திக் கொடுத்தாலும் அதையும் சத்தி எடுக்கிறான். என்ன செய்யலாம்?

டொம்பெறோன் (*Domperone*) சப்போசிற்றரியை குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுத்து, உங்கள் சுட்டு விரலை சிறிது எண்ணெய் அல்லது வஸ்லின் பூசி வழவழப்பாக்கிவிட்டு, மருந்தை மலவாயிலூடாகச் செலுத்துங்கள். சத்தியும் நிற்கும், ஊசி போட்ட வேதனையும் குழந்தைக்குக் கிடையாது.

காய்ச்சலைத் தணிக்கவும், வாந்தியை நிறுத்தவும் மாத்திரமின்றி கடும் வலிகளைத் தணிக்கவும், காக்காய் வலிப்பு போன்றவற்றை உடனடியாக நிறுத்தவும், மலத்தை இளக்கச் செய்யவும், இன்னும் பல நோய்களுக்கும் கூட மலவாயிலூடாகச் செலுத்தக்கூடிய மருந்துகள் கிடைக்கின்றன.

## ஊசி மருந்துகளால் ஏற்படக் கூடிய ஆபத்தான விளைவுகள்

1. சரியான முறையில் கிருமி நீக்காத ஊசிகளை உபயோகிப்பதால் பல நோய்கள் ஒருவரிலிருந்து மற்றவருக்குத் தொற்றலாம். செங்கண்மாரிநோயில் ஆபத்தான வகையான ஹெப்ரைரிஸ் B, உயிர் கொல்லி நோயான எயிட்ஸ் மற்றும் டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் நோயாளியின் இரத்தத்தால் மாசடைந்த ஊசியை இன்னொருவருக்கு ஏற்றுவதால் பரவுகின்றன.

2. அழுக்கான ஊசிகளாலும் சரியான சுகாதார முறைப்படி ஏற்றப்படாததாலும் ஊசி ஏற்றிய இடத்தில் சீழ் கட்டி, செப்ரிசீமியா, ஏற்பு நோய் போன்றவை ஏற்படலாம்.

3. ஒழுங்கான பயிற்சியும் அனுபவமும் இல்லாதவர்களால் ஊசி ஏற்றப்படும்போது அருகிலுள்ள நரம்புகள் பாதிப்புற்று செயலிழக்கலாம் (*paralysis*). அத்துடன் பி.சி.ஸி தடுப்பூசி சரியான முறையில் போடப்படாவிட்டால் நெறிக்கட்டிகள் (*BCG Lymphadenitis*) தோன்றலாம்.

4. கடும் அதிர்ச்சி நிலை (*anaphylactic shock*) ஏற்படுவதற்கு ஊசியின் ஒவ்வாமை ஒரு முக்கிய காரணமாகும். இது உயிராபத்திலும் முடியக் கூடியது.

ஆனால் ஊசி ஏற்றுவதை பூண்டோடு ஒதுக்கவும் முடியாது. ஊசி கட்டாயம் ஏற்றப்பட வேண்டிய தருணங்களும் இருக்கவேசெய்கின்றன.



இதில் முக்கியமானது தடுப்பூசி போடப்படுவதாகும்.

ஒரு குழந்தை பிறந்த முதல் மூன்றரை வருடங்களுக்குள் ஆறு தடுப்பூசிகள் போடப்படுகின்றன.

பத்து வயதை எட்டுவதற்குள் இன்னமும் பல தடுப்பூசிகள் போட வேண்டியிருக்கும்.

இவை அந்தக் குழந்தைக்கு பல்வேறு வகை நோய்கள் வராமல் தடுத்து ஆரோக்கியமாக வாழ உதவுகின்றன. எனவே இவை நிச்சயம் போடப்பட வேண்டியவையே.

இவற்றைத் தவிர வளர்ந்தவர்களுக்குப் போடப்படும் தடுப்பூசிகளும் உள்ளன.

கடும் நோய்கள் வரும்போது உயிர் காக்கவும் ஊசிகள் போட வேண்டிய நிலை ஏற்படலாம்.

சில நீரிழிவு நோயாளர்களுக்கு இன்சுலின் ஊசி தவிர்க்க முடியாதது. அவை போடப்படும்போது முழுமையான பாதுகாப்பு எடுக்கப்பட வேண்டும். ●

## உங்கள் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்

உங்களுக்கு ஊசி ஏற்ற வேண்டிய அவசியம் நேர்ந்தால் எத்தகைய பாதுகாப்பை நீங்கள் நிச்சயப்படுத்த வேண்டும்.

1. ஊசிக்கு மாற்றாக மாத்திரை, சிரப், சப்போசிட்டரி போன்ற ஒன்றை பயன்படுத்த முடியுமா என மீண்டும் ஆலோசனை பெறுங்கள்.
2. உங்களுக்கு உபயோகிக்கப்பட இருக்கும் ஊசி முன்பு வேறு எவருக்கும் பாவிக்கப்படாத புதியது என்பதையும் அது சரியான முறையில் கிருமி நீக்கப்பட்டதையும் உறுதி செய்யுங்கள்.
3. மீண்டும் உபயோகிக்கும் கண்ணாடியினால் ஆன ஊசியாயின் அது கொதிநீரில் அல்லது நீராவியில் நன்கு கிருமி நீக்கம் செய்யப்பட்டதை உறுதி செய்யுங்கள்.
4. பாவித்துவிட்டு கழிக்கப்படும் (*Disposable needels and syringes*) ஊசிகளை ஒரு தடவைக்கு மேல் உபயோகிக்க இடமளியாதீர்கள்.
5. உங்களுக்குப் பாவித்த பின் கழிக்கப்படும் ஊசிகள் மற்றவர்கள் கைகால்களில் குத்தி ஊறு விளைவிக்காதவாறு பாதுகாப்பான முறையில் கழிக்கப்படுவதை உறுதி செய்யுங்கள்.
6. நன்கு பயிற்றுவிக்கப்பட்ட வைத்தியர் அல்லது சுகாதார சேவையாளர் அன்றி வேறு எவரும் ஊசி போட அனுமதிக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வின் சுன் குங்:.பூ



பாரம்பரிய குங்:.பூ முறைகளிலிருந்து மாறுபட்ட, வினைத்திறன் மிக்க காத்திரமான முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குங்:.பூ வகைதான் **வின் சுன் (Wing Chun)**.
புரூஸ்லீயின்றதும் இந்த வின் சுன் குங்:.பூ வகைதான். பின்னர் அவர் வடிவமைத்த "ஜெய்கொன்டோ" என்று முறைக்கு அடிப்படை அம்சமாக அமைந்ததும் இதுதான்.

வின்சுன் உண்மையில் பெண்களுக்கெனப் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட தற்காப்பு முறை. இதை அறிமுகப்படுத்திய மூலவரும் ஒரு பெண் குருதான்.

சுமார் 300 முதல் 400 வருடங்களுக்கு முன் உருவானது இம்முறை. ஆரம்பகால சோலின் டெம்பிள் அழிக்கப்பட்டபோது அதிலிருந்து, தப்பிப்பிழைத்த ஐந்து குங்:.பூ மூலவர்களில் ஒருவரான "**இங் முய்** (Ng Mui)" என்ற ஒரு பெண் மூல குரு, சீனாவின் **:.பட்ஷன்** என்ற மாகாணத்துக்கு வந்து தங்கியிருந்தார். அப்போது பெண்களுக்கு பிரத்தியேகமாக அமையக்கூடிய ஒரு தற்காப்பு முறையை வடிவமைத்தார்.
அதை அவர் தனது மிகச் சிறந்த சிஷ்யையான **யிம் சான் சோ** என்பவருக்குப் போதித்தார்.
யிம் சான் சோவே இம்முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தினார். யிம் சான் சோவின் வழக்குப் பெயர் **யின் வின் சுன் (Yin Wing Chun).**
அவர் மூலம் அறிமுகமானதாலேயே இக் குங் :.பூ முறைக்கு **'வின் சுன்'** என்ற பெயர் ஏற்பட்டது. இம்முறையை சிலர் **'யுன் சுன்'** என்றும் உச்சரிப்பர்.
இந்த வின் சுன் குங்:.பூ முறையில் பல்வேறு பாணிகள் உண்டு. குறைந்தது மூன்று வெவ்வேறு பாணிகள் சீனாவில் உண்டு. ஹொங்கொங்கின் யுன் சுன் சண்டை முறை புரூஸ்லீயின் குருவான கிராண்ட்



சீ சாவ் (Sticky Hand)

மாஸ்டர் யிப் மான் (Yip man) இனது பாணியை அடியொட்டியது. அவர் வின் சுன் இனது பிறப்பிடமான சீனாவின் :.பட்ஷன் மாகாணத்திலிருந்து ஹொங்கொங்கிற்கு வந்து சேர்ந்தவர்.
வின் சுன் குங்:.பூவின் சிறப்பம்சம் என்ன வென்றால் மிகக் கடினமான பயிற்சிகளைச் செய்ய முடியாதவர்களுக்கும், அதற்கு நிகராக தம் உடலைப் பலப்படுத்திக் கொள்ளும் வழி வகைகளை இது வழங்குகிறது.

குறிப்பாக ஈகிள் குளோ, சோலி:.பா வீரர்கள் போன்று பாய்ந்தும், சுழன்றும் கால்களை அதிகம் உயர்த்தியும் செயற்பட முடியாத பெண்களுக்குப் பலமும் வேகமும் பாதுகாப்பும் அளிக்கக்கூடிய குறுந்தூரத் தாக்குதல் முறையாக இது விளங்குகிறது. பாரந்தூக்கல், பொடி பில்டிங் போன்ற பாரிய பயிற்சிகளைச் செய்யாமலே அதற்கு இணையான உடல் வலுவையும் உறுப்புக்களின் சீரமைவையும் வேறு வகையான பயிற்சிகளால் இங்கு ஈட்டிக்கொள்ள முடியுமாயுள்ளது.

வின் சுன், மேலுடம்புக்குரிய(Upperbody) சண்டை முறை. இதில் கைகள், முன்னங்கைகள், முஷ்டி, விரல்கள் ஆகியவை பலப்படுத்தப்பட்டு அவற்றின் செயற்பாடு அபாரமானதாக வெளிப்படுத்தப்படுகிறது. மேலுடம்புத் தாக்குதலுக்கு கைகளை மிக நுட்பமாக செயற்படுத்தக் கூடியதாக இருப்பதால் கால்களை இதற்குப் பெரிதும் பயன்படுத்துவதில்லை. கால்கள் கீழுடம்புத் தாக்குதலுக்கும், தடுப்புக்கும், -பிரதானமாக நிலைகளுக்கும் (Stance) தான் பயன்படுத்தப்படுகின்றன. வின்சுன், நிலைகளுக்கே (Stance) அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. இதன் நிலைகள் குங்:.பூ நிலைகளில் மிகச் சிறந்த வகைகளில் ஒன்று. நல்ல நிலையெடுத்து நிற்கும் வின்சுன் வீரர் ஒருவரைப் புரட்டுவது மிகக் கடினம்.

இதேவேளை, வின் சுனில் மூச்சுப் பயிற்சி, தியானம் போன்றவையும் உள்ளடக்கமானவை. வின் சுன்னில் பல்வேறு நுட்பங்களும் விதிகளும் உள்ளன. அவை யாவற்றையும் சிறு கட்டுரையொன்றில் விபரிக்க முடியாது. எனினும் சில முக்கிய வின் சுன் நுட்பங்களை மட்டும் இங்கு சுட்டிக்காட்டுகிறேன்.

### சில் லூம் தாவோ (Sil Lum Tao)

வின் சுன் குங்:.பூ முறையின் முதலாவது ஒழுங்குமுறை இது. சில் லூம் தாவோ என்பதன் அர்த்தம் சிறிய சிந்தனைகளின் வழி. *(The way of small thoughts)*

### சும் கில் (Chum Kil)

சும் கில் என்பது இங்கு இடைவெளியைப் பாலமிடும் விதமாகும். அதாவது எதிராளிக்கும் எமக்குமிடையிலான இடைத் தூரத்தை எமக்கு உகந்த அளவில் வைத்துக் கொள்ளக் கையாளும் நுட்பம் இது. இதில் மூன்று வகைக் கால் உதைகளை வின் சுன் பயன்படுத்துகிறது.

### பில் ஜீ (Bil Jee)

வின் சுன் குங்:.பூவின் மிக உபயோககரமான சக்தி வாய்ந்த கைத் தாக்குதல் வகைகளில் ஒன்று இது. இத்தாக்குதல் முன்னர் எல்லோருக்கும் கற்பிக்கப்படுவதில்லை. மிக நம்பிக்கையான சீடர்களுக்கு மட்டுமே பாரம்பரியமாகப் பயிற்றுவிக்கப்பட்டு வந்தது.

### சீ சாவ் (Chi Sao)

வின் சுன் குங்:.பூ பயிற்சியில் சாமர்த்தியத்தையும், விழிப்புணர்வையும், உள்ளுணர்வையும், துரிதத்தையும், லாவகத்தையும் வளர்க்கும் மிக விவேகமான கைப் பயிற்சி நுட்பம் இது. இதை **Sticky Hand Technique** என்பர். தமிழில் ஒட்டுக்கை நுட்பம் எனலாம். இருவரது உள்ளங்கைகளை உட்புறமாக ஒன்றோடொன்று கொழுவியபடி இப் பயிற்சிகளைச் செய்வர். எவரொருவர் தாக்க முயன்றாலும், மற்றவர் அதை உணர்ந்து உடனடியாக அதை



வின் சுன் முறையை ஹொங்கொங்கில் அறிமுகப்படுத்திய கிராண்ட் மாஸ்ட்டர் யிப் மான் தனது சீடரான புரூஸ் லீக்கு சீ சாவ் (Sticky Hand Technique) பயிற்சி வழங்குகிறார்.



வின் சுன் குங்:.பூவில் கைச் செயற்பாடு மிக அபாரமானது. இதன் பயிற்சிகள் கையை மிகச் செப்பமாக வலுவூட்டுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சும் கில் இடைவெளியைப் பாலமிடும் கால் உதை

முறியடித்து தான் தாக்க விளைவார். அவசரப்படு பவர் தோல் வியுறுவார். மாணவர்கள் இப்பயிற்சி யால் தமக் குச் சோடி யாகவுள்ள வரின் கைக ளினூடான உணர்வி னால் அவரின் எண்ணத்தை கண்டறிந்து அதற்கு மாற்று நடவடிக்கைக் குத் தயாராவார்.

கையில் ஏற்படும் நுண்ணிய சலனங் களைக் கொண்டு எதிராளியின் உட ற்பாரம் எந்தக் காலை நோக்கி மாறுகிறது என்பதை உய்த்துணர்ந்து அவரின் அசைய விளையும் முனைப்பையும், நிலை மாற்றத்தையும், அவரது அடுத்த குத்தின் திசையையும் உள்ளுணர்ந்து கொள்ளப் பழகுவர். ஒட்டப்பட்ட எதிராளியின் கையிலிருந்து உங்கள் கை விலகுமானால் அது அவருக்கு உங்களைத் தாக்க வாய்ப்பளிக்கும். அதே வேளை அவரது கையை அளவுக்கதிமாக நீங்கள் தள்ளுவதும் உங்களை சமநிலை இழக்கச் செய்துவிடும். எனவே மிக நுட்பமாக, தாக்கு தலையும், தற்காப்பையும் ஒன்றாகவே திட்ட மிட்ட வண்ணம் எதிராளியை கணத்துக்குக் கணம் நுணுக்கமாக மதிப்பிட்டபடி இப்பயிற்சி சோடியாக மேற்கொள்ளப்படும்.



யிப் மானின் மகன் யிப் சுன் கை உரமெடுத்து...

### சீ கேர் (Chi Gerk)

சீ சாவ் இல் கைகளால் செய்தது போல, கால்களால் செய்யப்படும் Sticky leg (ஒட்டுக்கால்) பயிற்சி முறையே சீ கேர்.

### சீ நா (Chi na)

வின் சுன் முறையிலமைந்த உடற்பூட்டுநுட்பங்கள் இதில் அடங்கும்.

### Wooden Dummy Techniques (மரப்பொறி)

கைப் பிரயோகங்களையும் அசைவுகளையும், பயிற்சி செய்யவும் அதை வலுவூட்டவும் தயாரிக்கப்பட்ட மரத்தினாலான பொறியமைப்பு இது. இதில் பல் வேறு பயிற்சிகள் உண்டு.

### வின் சுன் ஆயுதங்கள்

வின் சுன் சண்டை முறையில் பிரத்தியேக ஆயுதங்களும் அவற்றின் பல்வேறு விதமான பிரயோக உத்திகளும் உள்ளன. *Butterfly Knife* (வண்ணத்துப் பூச்சிக் கத்தி), ஆறரை அடிக் கம்பு போன்றவை உதாரணங்கள்.

### டா மாக் (Dar Mak)

மனித உடலின் பலஹீனமான புள்ளிகளில் மேற்கொள்ளப்படும் பயங்கரமான தாக்குதல்கள் இங்கு பயன்படுத்தப்படுகின்றன.

டா மாக் என்பது வேறு சில குங்ஃபூ முறைகளிலும் இருந்தாலும் இது வின் சுன்னிலும் பயன்படுத்தப்படுகிறது.

உதாரணமாக தாய் சீ முறை பற்றி முன்பு விளக்கியிருக்கிற போதும் அதில் விரல்களினூடாக உடலின் உட்சக்தியான சீயை எதிரி மீது செலுத்தும் அதி உயர்ந்த ஒரு நுட்பமாக இது பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.


டா மாக் என்பதன் அர்த்தம் மரணத் தொடுகை, அல்லது நச்சுத் தொடுகை (The poison or death touch) என்பதாகும் - அதாவது தொடுகை மூலமாக ஒருவரைக் கொல்லும் முறை. சிலர் டா மாக் கை டிம்மாக் (Dim Mak) எனவும் குறிப்பிடுகிறார்கள், அது தவறான தாகும்.

அக்கியூ பஞ்சர் மருத்துவ முறையில் உடலின் பல்வேறு உணர்வுப் புள்ளிகள் கையாளப்படுவதை அறிந்திப்பீர்கள். அவ்வகையான ஒருசில குறிப்பிட்ட முக்கியமான புள்ளிகள், அவற்றுக்கேயுரிய இரகசிய நேரங்கள், நாட்கள், பருவ காலங்கள் போன்றவற்றுடன் நெருங்கிய சம்பந்தம் கொண்டுள்ளன. அவ் ஆபத்தான அழுத்தப் புள்ளிகளில் அவற்றிற்கேயுரிய இவ் இரகசிய நேரங்களில் வழங்கப்படும் ஒரு தாக்குதல் மரணத்தை ஏற்படுத்தக்கூடியது.

இப்புள்ளிகளை அவற்றுக்குரிய குறித்த நேரத்தில் தாக்குவதன் மூலம் உடலின் உட்சக்தியான சீ (Chi) யினது சுற்றோட்டத்தைப் பாதிப்பதே டா மாக் நுட்பத்தின் அடிப்படை.

உதாரணத்திற்கு இங்கே உறுப்புக்களது டா மாக் மரண நேரங்களைத் தருகிறேன்.

**சிறுநீரகம்:** மரண நேரம் இரவு 11 மணி



**வால் என்பு(Tailborn):** மரணநேரம் இரவு 12 மணி.

**தோள் என்பு(Clavicle):** மேலிருந்து கீழாகத் தாக்கப்படுமிடத்து மரண நேரம் மாலை 4 மணி.


**மார்பக முளைகளிலிருந்து 2 அங்குலம் கீழே:** காலை 7 முதல் 8 மணி வரை மரண நேரம்.

**வயிறு:** பி.ப.3 மணிக்கு மரண நேரம்.

**ஈரல்:** காலை 9 மணிக்கு மரண நேரம்

**ஆண்குறி:** காலை 11 மணிக்கு மரண நேரம்●

உங்கள் பில்லி வொங்
தமிழில்: து. பாஸ்கரன்



Wooden Dummy பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோமுட்டித் தலையா? ஞானப்பழத்துக்கு ஏதடா கொட்டை?

## தமிழ் சினிமாவில் நகைச்சுவை -1

எல்லோருக்கும் சிரிப்பு மூட்டக்கூடிய நகைச்சுவை ஒன்று இருக்கிறதா? அதாவது, எல்லோருக்கும் பொதுவான நகைச்சுவை என்று ஒன்று இருக்கிறதா?

ஒருபுறம் கவுண்டமணி - செந்திலுக்காகப் படங்கள் பட்டி தொட்டியெல்லாம் ஓடுவதும், மறுபுறம் அந்த அடி உதை ஜோக்குகளுக்காகச் சிரிப்பவனை 'மட்டமான ரசனைக்காரன்' என்று ஒதுக்கிவிடுபவர்களும் இருக்கிறார்கள்.

காத்தான் கூத்துக்களில் டாபர் மாமாவைப் பார்த்து விடிய விடிய விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தவர்கள் எமக்கு நேரே மூத்த தலைமுறையினர். நமக்குச் சிரிப்பு வரவில்லை என்பதற்காக அதையெல்லாம் நகைச்சுவை இல்லையென்று சொல்லிவிட முடியுமா?



நம்மில் சிலருக்கு யாராவது வாழைப் பழத் தோலில் சறுக்கி விழுவது கூட சிரிப்பை ஏற்படுத்துகிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் போல முகத்தை இறுக்கியே வைத்துக்கொண்டு சிரிக்க மறுப்பவர்களும் இருக்கிறார்கள்.

தமிழகத்தில் "கோல்டன் பீச்" வாசலில் நம் ஜனாதிபதி மாளிகைக்காவல்காரர்போலசிலையாக விறைத்து நிற்பவரைச் சிரிக்க வைத்தால் பத்தாயிரம் ரூபா பரிசென்றே அறிவித்திருக்கிறார்கள்.

இப்படிச் சிரிப்பதற்குக் கூலி கேட்கிறவர்களாக நம்மிடையேயும் பலருண்டு.

நடுச்சாமம் நல்ல தூக்கத்திலிருக்கும் போது தட்டியெழுப்பி, "அண்ணே, ஞானப்பழத்துக்குக் கொட்டை இருக்கா?" என்று சந்தேகம் கேட்கிற செந்திலைக் கவுண்டமணி பார்க்கும் பார்வையே பலருக்குச் சிரிப்பை ஏற்படுத்திவிடுகிறது.

வேறு சிலருக்கோ நகைச்சுவை என்பது ஆழமாகப் பொடி வைக்கப்பட்டதாக - சட்டென்று விளங்கிக் கொள்ளக் கூடியதாக இல்லாமல் -யோசித்துயோசித்துச் சிரிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அதுதான் உயர்தரமான நகைச்சுவை என்பார்கள்.

ஆனால், நம் கூத்துக் கோமாளிகளின் நகைச்சுவை, மற்றும் இன்று பெரும்பான்மை மக்கள் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கும் வானொலி, மேடை நாடக, திரைப்பட ஜோக்குகளையெல்லாம் அறிவார்ந்த தளத்தில் நின்றுகொண்டு ஒரேயடியாக நிராகரிப்பவர்களை என்ன சொல்ல?

சென்னையில் சுபமங்களா இதழ் ஒருசமயம் நடத்திய நாடக விழாவில் சே.ராமானுஜம், ந.முத்துசாமி, மு. ராமசாமி, ஞாநி, மங்கை, நம்மூர் இளைய பத்மநாதன் என்று எல்லோரதும் நவீன நாடகங்களைப்போட்டு, முடிவில் சூடான விவாதங்களை நடத்தினார்கள்.

ஒவ்வொரு நாள் விவாதத்திற்கும் சுமார் நாற்பது நாற்பது பேர்தான் வந்தார்கள். எல்லோரது பேச்சிலும் சும்மா துணுக்குத் தோரணங்களால் வெறுமனே சிரிப்புமூட்டுவதையேமட்டும் செய்கிற எஸ். வி. சேகர், கிரேஸி மோகன் நாடகங்களைப் பற்றிய கண்டனம்தான் இருந்தது.

ஆனால் விழாவின் கடைசிநாள் அங்கேயே எஸ். வி. சேகரின் நாடகம் ஒன்றுக்கு கொட்டகை கொள்ளாத சனம் வந்திருந்தது. மேடையில் சிரிப்பு வெடி வருகிறபோதெல்லாம் நான் என் மதிப்புக்குரிய நவீன நாடக ஜாம்பவான்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். வயிற்றைப் பிடித்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ம்.... வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும். வேறென்ன சொல்ல?

நாங்கள் தமிழ் சினிமா நகைச்சுவைக்கு வரலாம். தமிழ் சினிமா பேச ஆரம்பித்த காலகட்டமான நாற்பதுகளில் மக்களுக்கு நன்கு தெரிந்த புராணக் கதைகளே படமாக எடுக்கப்பட்டன. பெரிய கதைகளைச் சுருக்கிச் சொல்லுவதற்குப் பெரும்பாலும் வசனங்களையே நம்பினார்கள். பிற்பாடு சமூக சீர்திருத்த, திராவிட அரசியற் கருத்துக்களைப் பரப்புவதற்கும் சினிமாவில் வசனங்களையே அதிகம் பயன்படுத்தினார்கள்.

உணர்ச்சிகரமான மனநிலைகளை வெளிப்படுத்த கூத்து, நாடகங்களில் செய்தது போலவே பாடல்களைத் துணைக் கொண்டார்கள்.

இவ்வாறுதான் ஆரம்ப காலத் திரைப்படங்களில் நகைச்சுவையும் கூத்து நாடகங்களில்அதன் கதையோட்டத்திற்குப் புறம்பாக வந்து சிரிக்க வைத்துவிட்டுப் போகும் கோமாளிப் பாத்திரங்களின் சேஷ்டைகளாகவே இருந்தது.

ஆரம்பக் காலத் தமிழ் சினிமாவின் நகைச்சுவைக்கு மாமன்னராக விளங்கிய கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் பெரும்பாலான *Comedy Track* இவ்வாறுதான் இணைக்கப்பட்டது. அந்நாளில் ஓடாத சில படங்களுக்கு மீண்டும் என். எஸ். கே. அவர்களின் நகைச்சுவைக் காட்சிகள் தனியாக இணைக்கப்பட்டு அதன் பின்னர் அந்தப் படங்கள் வசூலைக் குவித்திருக்கின்றன.

கலைவாணரில் தொடங்கிய இந்த நகைச்சுவை இணைப்பு இன்று நடிகர் விவேக் தனியாக எழுதி இயக்கிய நகைச்சுவைப் பகுதி இணைக்கப்படுவதாக இன்றைய படங்களில் தொடர்கிறது.

இடையில், ஸ்ரீதர் படங்களுக்கு நகைச்சுவைப் பகுதி வழங்குபவராக சித்ராலயா கோபு, பின்னர் பல படங்களுக்கு ஏ. வீரப்பன், சில படங்களுக்கு சோ, வெண்ணிற ஆடை மூர்த்தி, கிரேஸி மோகன் போன்றோரும் அவ்வப்போது தனித்தனியாக கொமெடி டிராக் தந்திருக்கிறார்கள்.





தேவயானி சமீபத்தில் நடித்த 'நிலவே முகம் காட்டு', 'நீ வருவாய் என' ஆகியன வெற்றியடைந்திருப்பதால் அவர் காட்டில் மழை. ரம்பாவின் உயிர்த் தோழியான தேவயானி அடக்க ஒடுக்கமான (குடும்பப் பாங்கான(!?) வேடங்கங்களுக்கே பொருத்தமானவர் என்ற முடிவோடு இருப்பவர்கள் 'தொட்டாச் சிணுங்கி' பார்க்க வேண்டும் - புதுமுக நடிகைகளை எப்படிப் பயன்படுத்தும் கோடம்பாக்கம்...ச்சகு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலத்து கதாநாயக நடிகர்களைப் போலவே நகைச் சுவை நடிகர்களும் பாடுவதில் வல்லவராயிருந்தார்கள். நாற்பதுகளில் பிரபல்யமான ஜோடி காளி என். ரத்தினமும், ரி. கே. ராஜகாந்தமும்.

அந்நேரம் ஆங்கிலப் படங்களின் பாணியிலான ஹாஸ்ய நடிப்பும் அங்க சேஷ்டைகளும் கொண்டு, பாடி, நடித்துப் புகழ்பெற்றவர் எஸ். எஸ். கொக்கோ அவர்கள். இவர் ஒரு வகையில் ஜே. பி. சந்திர பாபுவுக்கு முன்னோடி எனலாம்.

நமது நகைச்சுவை நடிகர்களுக்கு திரைப்படக் கதையில் தரப்படும் பாத்திரங்களும் காலத்துக்குக் காலம் ஒரே மாதிரியானவையாகவே அமைந்திருக்கும்.

கதாநாயகனுக்குத் தோழனாக, மந்திரியாக, வைத்தியராக, சாத்திரியாக, மாமாவாக இவர்கள் வந்தார்கள். பின்னர் வேலைக்காரன் - வேலைக்காரி பாத்திரங்களில் வந்தார்கள். ஏ. கருணாநிதி, குலதெய்வம் ராஜகோபால் ஆகியோர் சட்டென்றுஞாபகத்திற்கு வருவார்கள்.

பின்னர் வெண்ணிறஆடை மூர்த்தி, ஒருவிரல் கிருஷ்ண ராவ்,

**மற்றவர்களின் துன்பத்தில் சிரிப்பைக் கண்டுகொள்ளாமல் இருப்பதும், ஒருவரின் உடலியற் குறைபாடுகளையும், மனப் பிறழ்வையும் சிரிப்பாக்காமல் இருப்பதும், சாதி, மத, இன வேறுபாடுகளையும் நம்பிக்கை களையும் கேவலப்படுத்திச் சிரிக்காமல் இருப்பதும் நல்லது**

டைப்பிஸ்ட் கோபு, மாலி, ஐசரி வேலன், தேங்காய் சீனிவாசன், வீ. கே. ராமசாமி, மனோரமா, சச்சு போன்றவர்கள் பெற்றோராக, மாமன் மாமியாராக, மேலதிகாரியாக, கல்லூரி முதல்வராக வந்து சிரிக்க வைத்தார்கள்.

இன்று பழையபடி கதாநாயகனுக்கு நண்பர்களாக வருகிறவர்கள் சிரிப்புக் காட்சிகளுக்கு உதவுகிறார்கள்.

அக்கால நகைச்சுவை நடிகர்களில் தில்லானா மோகனாம்பாள் நாவலை எழுதிய கொத்தமங்கலம் சுப்பு, அவரது மனைவியான சுந்தரிபாய் மற்றும் கொத்தமங்கலம் சீனு ஆகியோரும் சிறப்பிடம் பெறுவர். சுந்தரிபாய் பிற்காலத்தில் வில்லிப் பாத்திரங்களுக்கு மாறிய போதும் (அரங்கேற்றம் படத்தில் அத்தையாக வருபவர்) ஆரம்ப காலத்தில் ஹாஸ்ய நடிகையாக வே பாடி நடித்து அறிமுகமானார்.

"மூன்று பிள்ளைகள்" படத்தில் சந்திரபாபு ராமாயணக் கதைக்கு இசையமைக்க வருகிற காட்சி இன்றும் பலரால் மறக்க முடியாதது. அதில் "தசரதர் செத்தது எப்படி? ஆக்ஸிடெண்டா, ஹார்ட் ஃபெயிலியரா?" என்று சந்திரபாபு கேட்க, "ஆக்ஸிடெண்டாதான் டைடு.... ஆனால் ஹார்ட் ஃபெயிலியரில தான் செத்துப் போனார்...." என்று சொல்லுகிற நடிகரைப் பலருக்கும் ஞாபக மிருக்கும். அவர் எல். நாராயண ராவ். நாற்பதுகளி லேயே நடிப்புத் துறைக்கு வந்த இவர் மிக நீண்ட காலத்துக்கு ரசிகர்களைச் சிரிக்க வைப்ப வராக இருந்தார்.

நகைச்சுவை நடிகர்கள் நட்சத்திர அந்தஸ்து பெற்றது கலைவாணர் தம்பதியினரின் வருகையோடுதான். சினிமா நகைச்சுவையை சமூக சீர்திருத்தத்திற்கான பாதையில் திருப்பிவிட்ட பெருமைக்குரியவர்களும் இவர்களேயாவர்.

உடுமலைப்பேட்டை நாராயணன் என்ற கவிஞரோடு என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கிருந்த சுமார் 20 வருடகால நட்பு, சிரிக்கச் சிரிக்கப் பல சீரிய சிந்தனைகளை தமிழ் சினிமா ரசிகர் நெஞ்சங்களில் விதைத்துவிட உதவியது.

கலைவாணர் அவர்களின் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை உள்ளடக்கிய நகைச்சுவைப் பாடல்கள் பெரும்பாலும் உடுமலை நாராயண கவி வழங்கியவை. நல்ல தம்பியில் வரும் இந்திர சபா கூத்தும் கிந்தனார் காலட்சேபமும் தமிழ்த் திரையுலகின் மறக்க முடியாத படைப்புகளாயின.

பெரியாராலும், ப. ஜீவானந்தம் அவர்களாலும் ஆகர்ஷிக்கப்பட்ட உடுமலை நாராயண கவி தமிழ்த் திரையுலகின் ஆரம்பகால நாற்பதாண்டுகளுக்கு பாபநாசம் சிவன் தொடாத பக்கங்களையெல்லாம் கனவுத் தொழிற்சாலைக்கு அறிமுகப்படுத்திய பிதாவாக இருந்தார்.

ஆனால் இதே நாராயண கவி, பெரியாரின் கருத்துக்களுக்கு முரணான ஆணாதிக்க தாக்கமுடைய பல பாடல்களையும் எழுதியிருக்கிறார். மணமகளில் வரும் "நல்ல பெண்மணி" விவசாயி படத்தில் இடம்பெற்ற "இப்படித்தான், இருக்கவேண்டும் பொம்பிளை" போன்றன உதாரணங்கள்.



பிரியா ராமன் (இப்போது பிரியா ரஞ்சித்) அறிமுகமானது ரஜினியின் 'வள்ளி'யில். இரண்டொரு படங்களுடன் காணாமல் போயிருந்தவர் பின் அடக்க ஒடுக்க விரதத்தை முறித்துக் கொண்டு கவர்ச்சிக் கலக்கலோடு மறுபடி ஒரு ரவுண்ட் வந்தார். பெரும்பாலும் இரண்டு நாயகிப் படங்களுக்கே ஒப்பந்தமான பிரியா, ஆடைக் குறைப்பும் நெருக்கக் காட்சிகளுமே ரம்பா, சிம்ரன் ரேஞ்சுக்கு தன்னையும் உயர்த்தும் என்று முயன்றார். வலிந்து கவர்ச்சி செய்தார். இருந்தும் இரண்டாம் நாயகி அந்தஸ்துக்கு மேல் உயர முடியவில்லை. இப்போது ரஞ்சித்துக்கு மட்டும் முதலாம் கதாநாயகி ஆகியிருக்கிறார். ....நேசம் புதுசு




சினிமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவையை ஆக்கபூர்வமான சீர்திருத்த சிந்தனைகளுக்குப் பயன்படுத்திய காலத்தில பிரகாசித்த மற்றுமொருவர் கே. சாரங்கபாணி. இவரது தனி முத்திரை - குபீரென வரும் வெடிச் சிரிப்பு.

அன்றிலிருந்து இன்று வரை உருவத் தோற்றத்தினாலும், அங்க சேஷ்டைகளினாலும் ரசிகர்களுக்குச் சிரிப்பு மூட்டியவர்கள் பட்டியலும் நீளமானது. டைமிங் எனப்படும் காலமறிந்து வீசப்படுகின்ற பேச்சு, சடாரென்று வரும் பதில், ஹாஸ்ய கதைத் துணுக்குகள், பாவனையினால் நம்மைச் சிரிக்க வைத்திருப்பவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

ஹாஸ்ய நடிகர்களுக்கென்றே விநோதமான உருவத் தோற்றம் ஏதாவது இருக்க வேண்டும் என்பது எழுதப்படா விதியாகத் தொடர்கிறது. இன்றைய செந்திலை எடுத்துக் கொண்டால், அவரைக் கவுண்டமணி, 'பனங்காய்த் தலையா, பீப்பாவயிறா, சொட்டைத்தலையா, பன்றிக் குட்டியே, பல்லுவிளக்காத எருமையே' என்றெல்லாம் விளிப்பதில்தான் சனங்கள் 'ஓ'வென்று சிரிக்கிறார்கள்.

குமரிமுத்து, உசிலைமணி, பக்கோடா காதர், நீலு, குண்டு கல்யாணம், பிந்துகோஸ் போன்றவர்களெல்லாம் உருவ அமைப்பினால் சிரிப்பு மூட்ட முயலும் வகையறாவில் இன்று சேருபவர்கள். ஆரம்ப காலத்தில் இது சற்று அதிகமான தொகையாகவே இருந்திருக்கிறது.

குட்டையான தோற்றம், முட்டைக் கண்கள், பிதுங்கிய உதடுகள், திருதிருவென்ற விழியோடு T.D. சம்பந்தம்....

கட்டை உருவம், மொட்டைத் தலை, பருத்த உடம்பு, சிரித்தால் அந்தப் பெரிய வயிறு தனியாக நடனமாடும்படியான தோற்றத்தோடு புளிமூட்டை ராமசாமி... "எனக்கும் அவளுக்கும்தான் பொருத்தம் இதிலே உனக்கு என்னடா வருத்தம்," என்று கலைவாணரோடு பாடி நடித்தவர்....

குட்டையான தோற்றமும் மாறு கண்ணுமாக காகா ராதா கிருஷ்ணன்...

நெட்டையான தேவாங்கு போல வளைந்த உடம்புடனும் முழி முழியென்று முழித்துச் சிரிக்க வைத்த ரி. ஆர். ராமசாமி....



குண்டுக் கருப்பையா.... என்று தோற்றத்தால் சிரிப்புமூட்டியவர்களும் அநேகம்.

நகைச்சுவை என்பதே ஒன்றை வித்தியாசமாகச் சொல்லிப் பார்க்கையில் வருகிற விநோதம் தான். நாளாந்த அனுபவங்களிலேயே பல வேறு நகைச்சுவை அம்சங்களை நாம் சந்திக்கிறோம். இந்த நடப்பு நிகழ் வுகளிலிருந்து கண்டு சொல்லும் நகைச்சுவை தான் விரைவில் மற்றவர்களைத் தொற்றிக் கொள்கிறது.



அழகு என்பது ஒவ்வொருவர்பார்வையிலும் வேறுபடுவதைப் போலவே, நகைச்சுவையும் அவரவர் தரத்திற்கும் ரசனைக்கும் ஏற்ப வேறுபடும் - நம்மோடு தொடர்பில்லாத அந்நியமான விஷயங்கள் நம் பார்வையில் அசிங்கமாகி விடுவதைப் போல.

கிஷ்கிந்தாவாசிகள் முதன் முறையாக சீதையைப்பார்த்தவுடன், "என்னவோ சீதை பேரழகி அப்பிடியிப்பிடி என்று சொன்னார்களே, இவளுக்கு ஒரு வால் கூட இல்லையே..." என்று ஆதங்கப்பட்டார்களாம்.

மற்றபடி, மனிதர்களாகிய நாம், மற்றவர்களின் துன்பத்தில் சிரிப்பைக் கண்டுகொள்ளாமல் இருப்பதும், ஒருவரின் உடலியற் குறைபாடுகளையும், மனப் பிறழ்வையும் சிரிப்பாக்காமல் இருப்தும், சாதி, மத, இன வேறுபாடுகளையும் நம்பிக்கைகளையும் கேவலப்படுத்திச் சிரிக்காமல் இருப்பதும் நல்லது என்பதை மட்டும் பொதுவாகச் சொல்லிக் கொள்ளலாம்.

மேலும் பல சிரிப்பு நடிகர்கள் பற்றியும், தமிழ் சினிமாவில் நகைச்சுவை என்பது பற்றியும் அடுத்த இதழிலும் நாம் பார்க்கலாம்.

இங்கே படத்திலிருக்கும் சாந்தினி தெலுங்கில் வெங்கட்டோடு நடித்த படம் அங்கே சூப்பர் ஹிட்டாகியது. அது தமிழிலும் டப் செய்யப்பட்டு 'காதலே சாட்சி' என்ற பெயரில் வெளியானது. சாந்தினியின் மிகத் தாராள குணத்தைக் கண்டுகொண்ட சென்னைத் தயாரிப்பாளர்கள் விடுவார்களா? உடனடியாக இறக்குமதி செய்திருக்கிறார்கள். 'ஆசையில் ஓர் கடிதம்' படத்தில் பிரசாந்திற்கு கதை நாயகியாக கௌசல்யாவும் சதை நாயகியாக சாந்தினியும் என்று படம் டபுள் ஓகே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரகபலன் : கணித்துச் சொல்பவர்



**மேஷம்:** நம்மைப்போலவேபொய் கூறி,நம்மிடையே அகப்பட்டுக் கொள்பவரிடம்தான் நமக்கு கோபாவேசம் பிரவாகமெடுக்கும்.
உடல் - ஆரோக்கியமாயிருக்கும். குடும்பம், சுற்றத்தார் வாழ்த்து மளவு சுபிட்சம். வியாபாரிகள் - சம லாபமடையவும் - தொழில் புரிவோர் மேலதிக வருமானம் பெறவும் வாய்ப்புண்டு. குடும்பப் பெண்கள் மங்கள காரணங்களால் மகிழ்வும், தொழில் மகளிர் முதலீட்டு லாபங்களால் உற்சாகமும் அடையும் வேளை. குழந்தைகள் நோய்களால் பீடிப்படைய நேரும். மாணவ, மாணவியர் - உற்சாக பாதையில் காலூன்றுவீர்கள். பொதுவாக - மேஷத்தினர் எதிர்கொண்ட பல்வேறு தடைகள் நீங்கப்பெற்று சுபிட்மடைவீர்கள். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.
**See and live practically rather than applying dream applications.**



**ரிஷபம்:** நாம் செலவழிப்பது போலிருந்தால் - கனவில் கூட திடீரென விழிப்பு வந்துவிடும்.
உடல் நலம் - நோய்கள் குறையும். குடும்பத்தில் பிரச்சினைகள் சிறிதாக மாறும். வியாபாரிகள் குறிக்கோளை எட்டவும், தொழில் சாரார்கள் உயர்வடையவும் நற்பலன்களுண்டு. குடும்பப் பெண்கள் சுற்றத்தாரிடம் நல்ல பெயரையும் - தொழில் புரியும் பெண்கள் சேமிப்பை கூட்டிக் கொள்ளவும் பலனுண்டு. குழந்தைகள் புதிய மாற்றங்களுக்காக ஏங்குவார்கள். மாணவ குழாம் - இக்கட்டுகளைத் தாண்ட வாய்ப்பிருக்கிறது. ரிஷபத்தார்கள் - சமலாப பலன்கள் எய்தலாம். எத்தனிப்பும் - அவதானிப்பும் இருந்தால்?
**The wind dose it's duty for every one - equally! - Without Compromise!**



**மிதுனம்:** விரக்தியா? தத்துவங்கள் தோன்றுகிறதா? பக்தி வழிகிறதா? மற்றவர்கள் அற்பர்களாகிவிடுகிறார்களா? கல்யாணம் - ம்... உடனே கட்டுங்கள்.
உடல்நிலைசுகமானாலும்-பட்டவைநினைவிருக்கட்டும்.குடும்பம் மகிழ்ச்சியுடனிருக்கும். வியாபாரிகள் புதிய பெயரில் தொழிலை உருவாக்குங்கள். நன்மை! தொழில் புரிவோர் - வேறு உயர் தொழில் பெறுவீர்கள். குடும்பப்பெண்கள்சகோதரசகோதரிகளின்பகைகளைவெல்வீர்கள்.தொழில் புரிவோர் புது ஆடை ஆபரணங்கள் சேர்க்கலாம். குழந்தைகள் அலைச்சல்களால் பாதிப்புறுவார்கள். பிரயாணங்களைத் தவிர்க்கவும். மாணவ குழாம் - பலே ஜோர்! ரொம்பவும் உற்சாகம்! மிகப் பெரிய வாழ்த்துகள் எதிர்நோக்கும். மிதுனக்காரர்களுக்கு இது வரப்பிரசாத காலம்! விடவேண்டாம்.
**Imagine! If no gravity all of us can fly!**



**கடகம்:** வியாபாரம் தெரிந்தால் சந்தைக்குப் போங்கள் - விற்க/பேச! தெரியாவிட்டால் தேவையானவற்றை வாங்கிக்கொண்டு வந்து சேருங்கள்.
உடல் நலம் - எதையெதையோ எண்ணுவதால் நலமாகாது. கவனமெடுங்கள். குடும்பம் - குறைகளற்று - நிவர்த்தியாகும். வியாபாரிகள் புதுச் சேர்க்கைகளைப் பரிசீலிக்கலாம். தொழில் புரிவோர் ஏற்பட்ட பாரிய பிரச்சினைகளினின்றும் விடுதலையடைவீர்கள். குடும்பப் பெண்கள் - வீட்டுக்குப் பொருட்கள்சேர்க்கவும் -தொழில் சார்ந்தோர் -கடன் விடுபடவும் வாய்ப்புண்டு! குழந்தைகள் கால், கைகளை முறித்துக் கொள்ளாமல் கண்காணியுங்கள். மாணவ சமூகம் - அட! கொஞ்சம் புத்தி பிறந்திருக்கிறதே! அதுதான் படகு! கரை சேருங்கள். கடகக்காரர்களுக்கு சோதனைகளிலும் ஒரு வெளிச்சம்! சபாஷ்!
**Sleep, without hate & Dream! It will come true!**



**சிம்மம்:** மாட்டுக்கருகில் ஆட்டை வைத்தால் இரு வகை பால் கிடைக்கும். புலியை வைத்தால்...? ஆத்மாவுக்கு சாந்தி கிடைக்கும். உங்களுக்கல்ல புலிக்கு!
உடல்நலம் - தொய்வாக இருப்பினும் முன்னேற்றமுண்டு! குடும்பம் - தெளிந்த நிலைக்குத் திரும்பும். வியாபாரிகள் - புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தொழில்புரிவோர் - தங்கள் தகுதி சார்பான மேற் பயிற்சிகளில் ஈடுபடலாம். குடும்பப் பெண்கள் - அடகு நகைகளை மீட்கக்கூடிய நேரம். தொழில் புரிவோர் - கடன் கொடுப்பதை (வட்டிக்கென்றாலும்) நிறுத்த வேண்டாம். குழந்தைகள் சளி, இருமல், தொண்டைப் புண் என்று படுத்துவார்கள். மாணவமணிகள் -படிப்பா-பள்ளிக்கூடமா என்றிருந்த நேரம் மாறும். வேண்டாம் பிடிவாதம்! சிம்மத்தார்கள் இரண்டுபடகிலிருந்து காலை எடுக்கும் நேரம். யோசியுங்கள்.
**When the rain becomes flood - We don't blame the draugtht.**



**கன்னி:** திறந்த புத்தகமாக வாழ்வது குழப்பமில்லாத வாழ்க்கை. புத்தகமே இல்லாமல் திறந்து கொண்டு திரிவது - வேறு கிரகத்துக்குத்தான் வெளிச்சம்.
உடல் நலம் மிகவும் தேறியிருக்கும். குடும்பச் சூழ்நிலை அநேகமான தொல்லைகளிலிருந்து விடுபடும். வியாபாரிகள் சற்றே பின்னடையக் கூடும். தொழில் புரிவோர் - தொழிலில் மந்த நோக்கு ஏற்படும். சுய நிர்ணயம் தேவை. குடும்பப் பெண்கள் சமய வழிபாட்டில் ஈடுபடும் அறிகுறி. தொழில் புரிவோர் சமூக வைபவங்களில் கலந்து சுய ஆளுமை நிலைநாட்டக்கூடிய தருணம். குழந்தைகள் வாய்ப்புண்களால் தொல்லையுறுவார்கள். அவதானம். மாணவ குழாம். முத்துறையிலும் முன்னேறக்கூடிய தருணம். கன்னி ராசிக்காரர்களுக்கு ஒரு பக்கம் ஜலதோஷம் - மற்ற பக்கம் ஜஸ்கிரீம்.
**None of us can take over an other preson's ability!**



**துலாம்:** எந்நேரமும், எதற்கும் புன்முறுவலோடு, புன்னகை மாறா வதனத்துடன் இருந்தால்... சீதேவிஎன்பார்கள்! - பார்த்து... அதற்கு வேறு பெயர்களுமுண்டு!
உடல் - தோல் வியாதிகள், புண்கள் வராது தடுத்துக் கொள்ளுங்கள். குடும்ப நிலை - குழப்பமடையும் அறிகுறி. வியாபாரிகள் தனலாபத்தை விடுத்து, இருப்பதை காப்பாற்றவும் - தொழில் செய்வோர் வாயால் வம்பை வாங்காமலும் இருக்கப் பாருங்கள். குடும்பப் பெண்கள் சீட்டு, கூட்டு என்று சுயலாபமும், தொழில் புரிவோர் - வட்டி, குட்டி என்று தலையிடியையும் பெறுவீர்கள். சிறார்கள் சிறுநீரக நோய் பாதிப்பு - அழுக்கற்ற தண்ணீர் அவசியம். துலாம் காரர்களுக்கு நான்குக்கு ஒன்று பலன். சமாளித்து முன்னேறுங்கள். மாணவ குழாமுக்கு மண்டையில் ஓட்டை. படித்ததை ஞாபகப்படுத்தி சித்திபெற வேண்டும்.
**Jump through the window and open the main door! Carefully.**



**விருச்சிகம்:** பள்ளி வயதில் நகத்தைக் கடித்துக் கொண்டு நின்றால் - பரவாயில்லை! அதற்காக இப்போதுமா? - நரைக்கும் நகத்துக்கும் கடிப்புக்கும்... தூரம்!
உடலா... பகலில் சாப்பிடவே வேண்டாம். தண்ணீர் சூடாக்கி... போதும்! குடும்பம் தூங்க விடாது. ஆனாலும் "டென்ஷன்" இல்லை. வியாபாரிகள் பெருத்த முதலீடுகளில் வலுவில் ஈடுபடுவீர்கள். தொழில் புரிவோர் அசிரத்தையால் பலவீனமடைவீர்கள். குடும்பப் பெண்களுக்கு கணவன் மூலம் நற்செய்தியும் தொழில்சார் பெண்களுக்கு சகபாடிகளால் குறுக்கீடும், குழந்தைகளுக்கு விபரீத துடுக்குத்தனமும் உருவாகும். சமாளியுங்கள். விருச்சிகக்காரர் விழிப்பாக இருக்க வேண்டும். மாணவ குழாம் இரண்டும் கெட்டான் நிலை! கவனம்.
**Paint the ceiling in white! Co's No - options!**



**தனுசு:** புத்தம் புதிய உடையுடுத்தி (சகலமும் புதிதாய்) கிளம்பும்போது ஒரு "தில்" வருவதில்லையா? எண்ணங்களுக்கும் புதிய ஆபரணமிடுங்கள்!
உடல் நிலை - வாய்வு நோய்களால் அலைக்கழியும். குடும்பச் சூழல் - மேற்கொண்ட பிரயாணங்களால் - சஞ்சலமடையும். வியாபாரிகள் முதலுக்கு மோசமின்றி லாபடையும் அதேவேளை - உத்தியோகத்தர்கள் சமபலன்களை அனுபவிப்பார்கள். குடும்பப் பெண்கள், சுற்றத்தாரால் போற்றப்படுவீர்கள். தொழில்சார் பெண்டிர் மேலதிகாரிகளின் அனுசரணையை அடைவீர்கள். குழந்தைகள் தலை, கால், மூட்டு காயங்கள் ஏற்படுத்திக்கொள்ள அறிகுறி. மாணவ குழாம் கல்வியை விடுத்து - கண்காட்சிகளில் ஈடுபாட்டைத் தவிர்க்கவும். தனுசுகாரர்கள் நேரமறிந்து செயற்பட வேண்டிய நேரம்!
**Pollution urge us to hunt for purity.**



**மகரம்:** எப்போதாவது அப்பா - தாத்தா செத்த நாளில் ஒற்றையிலக்க (9, 13, 15) சோற்றுப்பார்சல் தானமாய்க் கொடுத்துவிட்டு உடனே கர்ணன் ரேஞ்சிற்கு....! அடடா?
உடல் நலம் - அசைவ உணவுகளுக்கு விடைகொடுக்கவும். குடும்ப நிலவரம் - விட்டகுறை, தொட்டகுறை உறவுகளால் குழப்பமடையும். வியாபாரிகள் ஏமாற்றமடைவீர்கள். தொழிலிலுள்ளவர்கள் - பயத்தால் ஸ்தானங்களை இழப்பீர்கள். குடும்பப் பெண்கள் வாயாலே - வாழவேண்டியும் - தொழில்சார் மகளிர் - சாதுர்யத்தில் பிழைக்கவும் வேண்டிய நேரம். பிள்ளைகள் கட்டுக்கடங்காமல் அலைக்கழிப்பார்கள். அனுசரணை தேவை. மாணாக்கர் மட்டத்தில் - மதிப்பெண்களை விட குறிப்புகள் அதிகம். விடைகளுக்கு நீங்களே கேள்வி! மொத்தத்தில் மகரக்காரர்கள் இம்மாதம் குரங்கின் கையில் பூமாலை!
**Butter is better than Cheese!**



**கும்பம்:** ஒன்றுக்குமே பயமற்க. ஒன்று - மூதாதையரைப் பற்றி பிதற்றலாம். மற்றது.... நம்மைப் பற்றிப் பிதற்றி - இளந்தலைகளை உருட்டலாம்!?
உடல் நலம் - வாய்வு - பித்த பீடிகையால் தொய்வுறும். குடும்பம் அந்நியர் - அருகான சொந்தங்களால் சுயநிலை மாறி சஞ்சலமடையும். வியாபாரிகள் சமலாபமடைவீர்கள். தொழில் புரிவோர் ஒழுக்கமற்ற அலுவலக கணக்குகளால் பலியாவீர்கள். குடும்பப் பெண்கள் - கணவர்களின் கோபங்களைச் சமாளிக்க வேண்டிய நேரம் - தொழில் புரியும் பெண்கள் அந்நியர் தலையீட்டில் குழம்ப நேரிடும். கவனம். மாணக்கர் குழாம் - படிப்பை மறந்து - ரிவி, திரைப்படம் என்று காலம் கழிக்கப் பார்ப்பார்கள்! நஷ்டம் உங்களுக்கே. பார்க்கப் போனால் கும்பத்தார்கள் குழம்பி நிற்பீர்கள்! அவதானம்!
**Everything merge from Nothing.**




**மீனம்:** மற்றவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு - பெருமிதத்தோடு உறங்கப் போகலாம். அவர்கள் விடைபெற்றது - ஆறுதலடைந்தல்ல, அறுவையால்!
உடல்நிலவரம் - தண்ணீர் விடயங்களில் கவனம். குடும்பநிலையில் அதி முன்னேற்றம் தெரிகிறது. வியாபாரிகள் நூற்றுக்கு நூறு வீதம் லாபமடைவீர்கள். தொழில்சாரார் - தங்களது நன்னடத்தையில் கவனம் செலுத்த வேண்டிய தருணம். குடும்பப் பெண்கள் தாயார் வழியில் பெரிய பலன் பெறுவீர்கள். தொழில் மங்கையர் - புதியவருமானத் திட்டங்கள் தொடரலாம். சிறார்கள் - வெட்டுக்காயங்களைஏற்படுத்திக் கொள்வார்கள். கவனியுங்கள்! மாணவ சூழலில் - ஆர்ப்பாட்டம் அதிகம் எனினும் - கைவசம் இன்னும் அதிகம் திறமை தேவை. மீன ராசிக்காரர்களுக்கு மீண்டும் அதிர்ஷ்டம். அப்பிப்பிடியுங்கள்.
**Tolarate - untill you understand.**

கிரகாச்சாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைந்தழுதல்

நூலாசிரியர் : ஓட்டமாவடி அறபாத்
வெளியீடு : இஸ்லாமிக் புக் சென்டர்
எம்.பி.சீ.எஸ். வீதி, மாவடிச்சேனை, வாழைச்சேனை.
விலை : ரூபா 80/- பக்கம் : 92




சிறுகதை, கவிதை, விமர்சனம், இஸ்லாமியச் சிந்தனைகள் என எழுத்துத் துறையில் பல தளங்களில் கால் பதித்துள்ள ஓட்டமாவடி அறபாத் முதல் தடவையாகதனது 14 சிறுகதைகளைத் தொகுத்து "நினைந்தழுதல்" என்ற சிறுகதைத் தொகுதியாக வெளியிட்டுள்ளார். சிறுகதைகள் பெரும்பாலும்போர்க்காலச்சூழலைப் பின்புலமாகக் கொண்டுள்ளன. சமகாலத்தை யதார்த்த பூர்வமாகவும் கலைச் செறிவோடும் பிரதிபலிக்கின்றன.


"இழப்புகள்" பொதுவான கதைப் பொருளாகவும் கதைப் புலமாக கிழக்கு மாகாணமும் அமைந்துள்ளது.

இச்சிறுகதைத் தொகுதிக்கு மு. பொ. எழுதியிருக்கும் முன்னுரையில் இன்று ஆக்க இலக்கியத்தின் மையம் யாழ்ப்பாணத்திலிருந்து கிழக்கு மாகாணத்தை நோக்கி மாறிக் கொண்டிருக்கிறது என்ற கருத்துக்கு வலுவூட்டுவது போல் அங்கிருந்து வெளிவரும் ஆக்கங்களில் ஒன்றாக இத் தொகுப்பும் அமைந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

மரபு வழி வந்த பழம் படைப்புகளைஒருபக்கமும்,புதிதாகப் பிறக்கப் போகும் இன்னதென்று இனம் காண இயலாத நாளைய படைப்புகளை ஒரு பக்கமும் கொண்டுள்ள சங்கிலியின் இணைப்பு வளையமாகவே புதிய படைப்பாளிகள் இயங்குகின்றனர் என்ற அய்யப்பபணிக்கரின் வரிகளை வழிமொழிகிறார் அறபாத்.

## நான் எனும் நீ

நூலாசிரியர் : எம். எச். எம். அஷ்ரஃப்
வெளியீடு : புதிய வெளிச்சங்கள்
"தாருஸ்ஸலாம்", கொழும்பு 02.
விலை : ரூபா 250/- பக்கம் : 600




அரசியல்வாதி, கட்சித் தலைவர், அமைச்சர் என்ற பிம்பங்களுக்கெல்லாம் அப்பால் தன்னை ஒரு மனிதனாகவே கண்டுகொள்ளவிரும்புகிற எம்.எச்.எம். அஷ்ரஃப் எழுதிய 179 கவிதைகள் சுமார் 600 பக்கங்களில் தொகுதியாகி இருக்கிறது. குழந்தைக் கவிதைகள், இஸ்லாமிய சமூகக் கவிதைகள், பொதுக் கவிதைகள், நவீன கவிதைகள்,கவிதைக்கடிதங்கள் என்று ஐந்து தலைப்புக்களில் நூல்களாக வெளியிட வைத்திருந்த கவிதைகள் அனைத்தையும் ஒரே நூலில் கொண்டு வந்திருக்கிறார் கவிஞர். எனவே இலங்கையில் இதுவரை வெளிவந்த கவிதைத் தொகுப்புகளில் இதுவே அளவில் பெரியது என்றாகியிருக்கிறது.

நூலின் தலைப்பும் மற்றும் பல கவிதைகளும், 'நான்' என்ற அகங்காரத்திலிருந்து தான் இறப்பதற்கு முன்னால் தன்னை விடுவித்துக் கொண்டு அகம் அழிந்த மனிதனாக ஆகிவிட வேண்டும் என்ற கவிஞனின் பேரவாவை வெளிப்படுத்திநிற்கின்றன.

"...ஒரு நல்ல கவிதை தன்னை மீண்டும்மீண்டும் செதுக்கிச் செப்பனிடுவதைக் கவிஞனிடம் வேண்டி நிற்கிறது. கவிஞர் அஷ்ரஃபின் அரசியல்சுமைதன் கவிதைகளை அவ்வாறு செப்பனிடுவதற்குரிய அவகாசத்தை அவருக்கு வழங்கவில்லை என்பதை அவரது பிற்காலக் கவிதைகள் பல உணர்த்தி நிற்கின்றன. ஆயினும் சுரண்டல், சமூக ஏற்றத்தாழ்வு என்பவற்றுக்கு எதிரான, சமூக நீதிக்கான, இன ஒருமைப்பாட்டுக்கான குரல் அவரது கவிதைகளில் ஒலிப்பதை யாரும் புறக்கணிக்க முடியாது..." என்று அணிந்துரையில் குறிப்பிடுகிறார் எம்.ஏ. நுஃமான்.

கவிதைகளை மட்டுமல்ல நூலையும் சுருக்கியிருந்தால் இன்னும் சிறப்பாகியிருக்கக் கூடும். குழந்தைப் பாடல்கள் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவை.

### 1999ல் வாழ்ந்து கொண்டிருக்கும் இசை நாடக-கூத்து

## மூத்த கலைஞர் வரலாறு

நூலாசிரியர் : செல்லையா மெற்றாஸ்மயில்
வெளியீடு : மீனாட்சி பப்ளிகேஷன்
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
விலை : ரூபா 200/- பக்கம் : 108




யாழ்ப்பாணத்தில் 1999ல் அதாவது இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் இசை நாடகக் கூத்து கலைஞர்களின் வரலாற்றை அவர்களிடமிருந்து தகவல்கள் பெற்று நூலுருவில் தந்துள்ளார், பல நாட்டுக் கூத்து நூல்களின் ஆசிரியரும், கலைஞருமான செல்லையா மெற்றாஸ்மயில்.


எம்மண்ணுக்குரிய இக்கலைகளுக்கு இன்னும் உயிர் கொடுத்து, அர்ப்பண உணர்வோடு காத்துவரும் கலைஞர்களை அவர்களின் ஆற்றல்கள், பிரயத்தனங்கள், பங்களிப்புகளை இன்றைய சமுதாயத்திற்குப் புலப்படுத்தி அதனை இலக்ட்ரோனிக் புலத்திலிருந்து சற்றுத் திரும்பிப் பார்க்கவைக்கும் இம் முயற்சி அர்த்தமுள்ளது.

நூலுக்கானதனது 'என்னுரை'யில் மரபுவழிக் கூத்து பற்றிய விளக்கத்தையும், வெளிநாடுகளில் கூத்துக்கள் எவ்விதம் இருந்தன என்ற ஒப்பீட்டையும் இசை, நாடகப் பாரம்பரியம் பற்றியும், இக்கலைகளை வளர்த்த எம் நாட்டுக் கலைஞர்கள், ஈழத்தில் மேடையேறிய நாடகங்கள் பற்றிய தகவல்களையும் தந்து நூலுக்கு ஓர் ஆய்வியல் பரிமாணத்தையும் கொடுத்துள்ளார் ஆசிரியர்.

வாழும்போதே கலைஞர்களை கௌரவிக்கும்இம்முயற்சிமிகவும் பாராட்டுதற்குரியது.

## எனதுயிரின் முடிவிற்காக...

நூலாசிரியர் : சாஹிர் ஹுஸைன்
வெளியீடு : மனிதம்,
315, சீ.ஈ.பி. வீதி, அக்கரைப்பற்று -1.
விலை : ரூபா 50/- பக்கம் : 24



"மனிதம்" இலக்கிய வட்டத்தைச் சார்ந்த கிழக்கு மாகாணகலையிலக்கிய ஆர்வலரான சாஹிர் ஹுசைன் என்ற இளைஞன் 1999-03-01ல் ஒலுவில்கடற்கரையில் குளிக்கச் சென்ற போதுநீரில் மூழ்கி மரணித்துவிட்ட துர்ப்பாக்கியத்தின் வேதனை வெளிப்பாடாய் அவர் தன் நாட்குறிப்புகளில் எழுதி வைத்திருந்த கவிதைகளைத் தொகுத்து "எனதுயிரின் முடிவுக்காக...." என்ற இச்சிறுகதைத் தொகுதியாக வெளியிட்டுள்ளார்கள் "மனிதம்" இலக்கிய வட்ட இதர30 நண்பர்கள்.

"இனியும் வரும்
உயிர்களுக்கு
வேண்டாம் இந்த
பரிதாபம்
அதற்காய்
இழக்கிறேன்
என்னுயிரை
எனவேதான்
பாய்ந்து
செல்கிறேன்
என் உயிரின் முடிவுக்காக...."

என்று கூறும் அவரின் "பரிதாபம்" என்ற கவிதை முடிவு அவரின் நிஜ வாழ்வின் முடிவாய் ஆன பரிதாபம் மனதைத் துவள வைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹற்றன் நஷனல் வங்கியிடமிருந்து

பாதுகாப்பையும் உயர்ந்த வருவாயையும் வழங்கும்

# நீண்ட கால வைப்புச் சான்றிதழ்கள்

**4 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **15%**

**5 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **16%**

(வருடாந்த வட்டி வீதம் 12.5%)

**பெறும் நன்மைகள்:**

- நிறுத்தி வைக்கும் வரி இல்லை.
- முத்திரை வரி இல்லை.
- உயர்ந்த வட்டி வீதம்
- படிவங்கள் நிரப்புவதற்கில்லை. எனவே முற்றிலும் இரகசியமானது.
- முதலீட்டுக் கடன்களுக்குப் பிணையாகப் பயன்படுத்தலாம்.

| **காலம்** | **4 வருடங்கள்** | **5 வருடங்கள்** |
|---|---|---|
| வட்டி வீதம் | 15% வருடாந்த வட்டி | 16% வருடாந்த வட்டி |
| தொகை | ரூ. 62,500/- | ரூ. 55,555/- |

**முதிர்வு நிலையில் பெறுமானம் : ரூபாய் 100,000/-**

இவை அனைத்தும், இன்னும் நூறு வருட வரலாற்றுறுதியும் பாரம்பரியமும் மிக்க ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவையும் உங்களுக்காக காத்திருக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு முகாமையாளருடன்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

**ஹற்றன் நஷனல் வங்கி**

*உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி*

தலைமை அலுவலகம் : 10, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
தொலைபேசி: 421885-7, 337501-5 பக்ஸ்: 320745

SOMA AHANGAMA ASSOCIATES (PVT) LTD.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூத்துச் சிரித்திடும் ரண்கெகுளு அதிர்ஷ்டம்

உங்களது ரண்கெகுளு
சேமிப்புக் கணக்கின் மூலம்
பெறுமதியான ஏராளம்
பரிசுகளை வெல்ல
இப்பொழுது
அரியதொரு வாய்ப்பு.

**முதலாம் பரிசு**

10 மல்டி மீடியா கொம்பியூட்டர்கள்

**இரண்டாம் பரிசு**

100 மௌண்டன் பைசிக்கிள்கள்

**மூன்றாம் பரிசு**

10,000 ரண்கெகுளு பாடசாலைப் பைகள்



FIRST & FORWARD

ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பிப்பதன்
மூலமோ அல்லது தற்போதுள்ள ரண்கெகுளு
கணக்கில் 1999 ஜூன் மாதம் 30ந் திகதியன்று
ஆகக்குறைந்த கணக்கு மீதியாக
3,000 ரூபாவை பேணுங்கள். நீங்களும்
ரண்கெகுளு அதிர்ஷ்டச்
சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறுவீர்கள்.

இனியுமென்ன தாமதம். உங்கள் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இன்றே நீங்களும் இலங்கை வங்கியில் ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பித்து சேமிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

ஏற்கெனவே ரண்கெகுளு கணக்கொன்று உங்களிடமிருந்தால் மேலும் மேலும் சேமியுங்கள்.

**ஞாபகமிருக்கட்டும். சேமிப்பதால் உங்களுக்கும் வெற்றி. நாட்டுக்கும் வெற்றி.**

இலங்கை வங்கி

ලංකා බැංකුව Bank of Ceylon

புதிய நூற்றாண்டின் – தேசத்தின் ஒளிவிளக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org